www.tamilarangam.net

# களத்தில்

விடுதலைப் புலிகளின் மனோதிடத்தையும், உறுதியையும் அழித்துவிட சிங்கள இராணுவத்தினால் முடியாது. மகத்தான தார்மீக வலிமையும் தியாக உணர்வும் உன்னத இலட்சியப் பற்றும் எங்களுக்குண்டு.

- தமிழீழத் தேசியத் தலைவர்

திருவள்ளுவர் ஆண்டு 2028 (25.02.1998) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் (155) அன்பளிப்பு: 60 p

# சிங்கள அரசு ஆயுதப்போரை மட்டுமல்ல கருத்துப்போரையும் நடாத்துகின்றது

## - தேசியத் தலைவர் பிரபாகரன் விளக்கம்

## உண்மை எனும் ஆயுதமேந்தி பொய்மைக்கு எதிராகப் போரிடவும் அழைப்பு

"சிங்கள இனவாத அரசு எமக்கு எதிராக ஒரு ஆயுதப் போராட்டத்தை மட்டும் நடத்த வில்லை, ஒரு கருத்துப் போரையும் நடாத்துகிறது"



எனத் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் புலிகளின் குரல் வானொலியின் ஏழாவது ஆண்டு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை மழுங்கடிக்கச் செய்வதே இதன் கபட நோக்கமெனக் குறிப்பிட்ட அவர், "தமிழரின் தேசியத்தை மறுதலித்து, தமிழர்கள் சிறுபான்மை இனத்தவர் என்றும் இலங்கை ஒரு பல்தேசிய நாடெனவும் அதில் உள்ள இனக்குழுக்களில் ஒன்றே தமிழர்கள் எனவும் அவர்களுக்குத் தனித்துவமான தாயகம் இருக்கவில்லை என்றும் சிங்கள அரசு இப்பரப்புரை மூலம் உண்மைக்கு மாறான கருத்துக்களைப் பரப்பி வருகிறது" எனவும் விளக்கமளித்தார். இதனை முறியடிக்க, உண்மை எனும் ஆயுதமேந்தி பொய்மைக்கு எதிராகப் போரிட வேண்டுமென பகிரங்க அழைப்பும் விடுத்துள்ளார்.

"தமிழ் மக்களாகிய நாம் ஒரு தேசிய இனக் கட்டமைப்பைக் கொண்டவர்கள்: பழம் பெரும் மொழியும் பண்பாடும் பாரம்பரியத் தாயகமும் பழமை மிகுந்த வரலாறும் கொண்ட தனித்துவ தேசமாக நாம் வாழ்ந்து வருகிறோம். இந்த தமிழர் தேசத்தையே நாம் தமிழீழமென அழைக்கின்றோம். இந்த தமிழர் தேசத்திற்கு தன்னாட்சி உரிமையையும் இறைமையையும் வென்றெடுக்க வேண்டுமென்றே நாம் இரத்தம் சிந்திப் போராடி வருகிறோம்" என விளக்கமளித்த தேசியத் தலைவர், தேசிய விழிப்புணர்ச்சியைத் தட்டி எழுப்பி மக்கள் உண்மை நிலையை வெளிப்படுத்தும் படைப்புக்களை உருவாக்கவேண்டிய உன்னதமான பணி கலை, இலக்கிய படைப்பாளிகளின் பெரும் பொறுப்பு" என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளார். *(தலைவரின் முழு உரையும் உள்ளே.........)*

### தங்கப்பதக்க கௌரவம்

புலிகளின் குரல் வானொலிச் சேவையில் இணைந்து நின்று, இடம் பெயர்தல் போன்ற நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து தேசப்பற்றுடன் பணிபுரிந்து வரும் கலைஞர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் தொழில்நுட்ப நிபுணர்களுக்கும் தமிழீழத் தேசியத்தலைவர் தங்கப்பதக்கம் அணிவித்து கௌரவித்துள்ளார்.

தொடர்ச்சி 2 ம் பக்கம்...

# தமிழர் உள்ளக அகதிநிலை உலகுக்குத் தெரிந்தால் சர்வதேச உலகே அவர்களுக்காக ஓலமிடும்

## - இலண்டன் 'இன்டிபென்டன்ட்' பத்திரிகையில் பீட்டர் பொப்காம்

"வட இலங்கையில் வாழும் தமிழர்களின் உள்ளக அகதி நிலையின் உண்மைக் கோலங்கள் உலகுக்குத் தெரிந்தால் சர்வதேச உலகே அவர்களுக்காக ஓலமிடும். ஆனால், 1995 சித்திரையில் மோதல் தவிர்ப்பு முறிவடைந்த நாள் முதல் சிறீலங்கா அரசு, கடுமையான இருட்டடிப்புக்களைச் செய்வதுடன் அப் பகுதிகளுக்குச் செய்தியாளர்கள் சென்று சுதந்திரமான முறையில் போரைப் பற்றிய செய்திகளை வெளியிடுவதையும் தடுத்து வருகிறது".

இவ்வாறு இன்டிபென்ட்டன்ட் பத்திரிகையில் பீட்டர் பொப்காம் எழுதிய "மறக்கப்பட்ட சிறீலங்கா போரினால் பாதிக்கப்பட்டவர்கள்" என்ற தலைப்பிலான 10-2-98ஆம் திகதிய கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். அவர் எழுதியுள்ளதாவது:

15 ஆண்டு காலமாக நடந்துவரும் முடிவற்ற

தொடர்ச்சி 2 ம் பக்கம்...

# தமிழ் மாணவரின் உயர்படிப்புக்கு உலை

தமிழ் மக்களுக்கு நல்லது செய்யும் அரசாகத் தன்னை வெளிப்படுத்த மாயாஜாலங்கள் செய்யும் சந்திரிகா அரசில் தமிழ் மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதி, என்றுமில்லாத அளவுப் பாதிப்புக்கு உள்ளாகிருக்கிறது. இது குறித்து பாதிக்கப்பட்ட யாழ். மாணவர்கள் வெளியிட்ட விளக்கம் வருமாறு:

கல்வியாண்டு 97-98க்குரிய வெட்டுப்புள்ளிகள் 15-01-98 அன்று பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவால் வெளியிடப்பட்டது. இதில் தமிழ் மாணவர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

உதாரணமாக, மருத்துவத் துறையை

தொடர்ச்சி 6 ம் பக்கம்...

# "தமிழர்கள் பங்கேற்காத சுதந்திரப் பொன்விழா"

## இலண்டன் "த ரைம்ஸ்" - கிறிஸ்தோபர் தோமஸ்

"தமிழர்கள் - இலங்கைத் தீவின் 18 வீதமானவர்கள் பெரும்பாலும் பங்கேற்காத நிலையிலேயே சுதந்திரப் பொன் விழா வாரம் முடிவடைந்தது. ஆக்கிரமிக்கப்பட்டுள்ள, அந்நியப்படுத்தப்பட்டுள்ள மக்களின் உணர்வுகளை மதித்துச் செயற்பட்டாலே தேச நிர்மாணத்தை பூரணப்படுத்த முடியும்"

இவ்வாறு இலண்டன் 'த டைம்ஸ்' பத்திரிகையில் கிறிஸ்தோபர் தோமஸ் எழுதியுள்ள "கலைக்கப்பட்ட கனவுகளின் சாயல்கள் சிறீலங்காவின் பொன்விழாவில்" எனும் செய்திக் கட்டுரையில் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியுள்ளதாவது:

"இந்திய விடுதலைப்

தொடர்ச்சி 2 ம் பக்கம்...

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

www.tamilarangam.net



# மட்டக்களப்பில் ஆட்கடத்தல்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் பள்ளி மாணவர்கள், குறிப்பாக தொழில்நுட்பக் கல்வி பயிலும் மாணவர்கள் சிறிலங்காப் படைகளால் இலக்காக்கப்பட்டு, சாதாரண உடையணிந்து இலக்கத்தகடு இல்லாத வாகனங்களில் வரும் சிங்களப் படையினரால் கடத்திச் செல்லப்படுகின்றனர். இக் கடத்தல்களில் தமிழ் குழுக்களும் மிக மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன.

கொழும்பில் நடைபெற்ற வெள்ளை வான் கடத்தல், மர்மக் கொலைகள் போன்ற அதே பின்னணியிலேயே இந்த மட்டக்களப்பு ஆட் கடத்தல்களும் சிறிலங்கா படையினரின் துணையுடன் நடத்தப்படுகிறது.

## சிங்கள அரசு ஆயுதப்போரை மட்டுமல்ல.......

### தங்கவிருது பெற்ற தவமலர்

தலைவரின் சிறப்புப் பரிசான தங்கவிருது, இருவிழிப் புலனும் இழந்த நிலையிலும் பல விடுதலைப் பாடல்களால் மக்கள் புரட்சிக்கும் எழுச்சிக்கும் வித்திட்ட சுப்பிரமணியம் தவமலர் அவர்களுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### உலகத்தமிழரது பொறுப்பு

தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களின் விளக்கம், உலகத் தமிழர்கள் சிறிலங்காவின் ஆயுதப் போருக்கு எதிராக மட்டுமல்ல, கருத்துப் போருக்கு எதிராகவும் கடும் பணியாற்ற வேண்டிய தேவை உள்ளதைச் சுட்டிக் காட்டியுள்ளது. இதனைத் தேசக்கடமையாக ஏற்று உடன் பணி செய்து, உடன் பிறப்புக்களின் உயிரை, உடலை பாதுகாக்கவும் தமிழீழத் தேசத்தை மீளமைக்கும் புனிதப்போரான தமிழீழத் தேசிய விடுதலைப் போர் உலக மன்றத்தால் அங்கீகரிக்கப்படவும் புலம் பெயர் தமிழர்கள் ஆவன செய்யவேண்டுமென 'களத்தில்' செய்தித்தாள் சார்பாகக் கேட்டுக் கொள்கின்றோம். ✳

## தமிழர் உள்ளக அகதிநிலை உலகுக்குத் தெரிந்தால்.......

சிறிலங்காவின் மக்கள் போரினால் ஒரு மில்லியனுக்கும் அதிகமான அகதிகள் மிக மோசமான முறையில் மனிதப் பேரழிவுக்குள்ளாகி வருகின்றனர்.

பயங்கர போர்க்களமாக மாற்றப்பட்ட யாழ்ப்பாணத்திலிருந்து தப்பியோடி வீதிக் கரைகளின் இருமருங்குகளிலும் இருக்க இடமின்றி மிக மோசமான தங்குமிடங்கள் அமைத்து மின்சாரமோ குடிதண்ணீரோ சுகாதார வசதிகளோ ஒழுங்கில்லாமல், தெற்கிலிருந்து அனுப்பப்படும் பங்கீட்டு உணவுகளை நம்பி இவர்கள் தவிக்கின்றனர்.

இந்த வன்னிப் பிரதேசத்தின் மேல் முற்றுகையை மேற்கொண்டுள்ள சிறிலங்காவின் கொழும்பு அரசு, அகதிகளின் எண்ணிக்கையை ஏற்பதில் குழறுபடிகள் செய்து தேவையான உணவில் அரைவாசியையே அனுப்பி வருகின்றது. இதனால், அண்மையில் கொழும்பு திரும்பிய கிறிஸ்ரியன் எய்ட் சேவையாளரின் தகவலின் படி, இலங்கைத் தீவின் வரலாற்றிலேயே காணாத அளவுக்கு ஊட்டச் சத்தின்மை அப்பகுதிகளில் காணப்படுவதாக தெரிவித்துள்ளார்.

அண்மைய புள்ளி விபரத்திரட்டு ஒன்றின்படி, ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட 16,000 பிள்ளைகளில் நாலில் ஒரு பகுதியினரே சரியான முறையில் போசாக்கு உணவை பெற்றுள்ளனர். மேலும், மூன்றிலொரு பகுதியினர் மிக மிக மோசமான போசாக்கின்மையினால் பீடிக்கப்பட்டு வயிறு வீங்கி பெருத்தவர்களாகவும் தோல் வரட்சியுள்ளவர்களாகவும் காட்சி அளிக்கின்றனர். சிறு தொகையானோர் ஏற்கனவே பட்டினிச் சாவை அடைந்தமைக்கு சான்றுகள் உள்ளன. போசாக்கின்மை இப் பிரதேசத்தின் உடல்நலத்திற்கு பெருஞ் சாபக்கேடாக மாறியுள்ளது. வன்னிப் பிரதேசம் அடர்ந்த காடுகளைக் கொண்டுள்ளது. மரங்களைத் தறித்து இலைகுழை கொண்டு அகதிகள், தங்குமிடம் அமைத்து வாழ்ந்தாலும் மலேரியா நுளம்பு பெருமளவில் அவர்களைத் தாக்குகிறது. கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு மலேரியா நோயினால் வடக்கு - கிழக்குப் பகுதி மக்கள் பீடிக்கப்பட்டு வருகின்றனர். 1997இல் மட்டும் 340,000 மக்களுக்கு மலேரியா நோய்க்கான சிகிச்சை அளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இவர்களில் அரைவாசிக்கு மேல் வெளிவாரி நோயாளிகளாகவே பதியப்பட்டுள்ளனர். கிறிஸ்ரியன் எய்ட் சேவையாளரின் கருத்துப்படி, வன்னியில் நாம் சந்திக்கும் இரண்டு பேரில் ஒருவராவது இருதடவைக்கு மேல் மலேரியாவில் பீடிக்கப்பட்டவர்களாக உள்ளனர். ஏழுமுறை முதல் ஒன்பது முறைவரை கூட மலேரியாவால் தாக்கப்பட்டவர்களை இங்கு சர்வசாதாரணமாகக் காணக்கூடியதாகவுள்ளது.

தொற்றுநோய் பரவும் விகிதம் அதிகரித்து வருவதினால் முன்னர் இலங்கைத் தீவிலிருந்து உடல்நல செயற்திட்டங்களால் விரட்டியடிக்கப்பட்ட காசநோய், நெருப்புக் காய்ச்சல் போன்றவையும் இப் பிரதேசத்தில் பொதுவான நோய்களாக மாறியுள்ளன. இந்தச் சிக்கல்நிலை[...] சிறிலங்கா அரசு மருந்துத்[...] தடையினை மேற்கொண[...]ள்ளதினால் மேலும் மோ[...]மடைந்து வருகிறது. உண[...] மற்றும் அத்தியாவசிய பொருட்[...]களுடன் மருந்துகளையும் 199[...] முதல் இப் பகுதிகளுக்கு[...] எடுத்துவர இயலாதவாறு சிறிலங்கா கடும்போக்கை கடைப்பிடித்து தடை செய்துள்ளது. அடிப்படை தேவை மருந்துகளான அஸ்பிரின் அன்ரிபயட்டிக்ஸ் போன்றவற்றின் விநியோகம் கூட மிகக் குறைவாகவே உள்ளது.

இத்தகைய நிலையில் வாழும் வடஇலங்கைத் தமிழர்களின் உள்ளக அகதி நிலையின் உண்மைக் கோலங்கள் உலகுக்குத் தெரிந்தால், உலகே அவர்களுக்காக ஓலமிடும் நிலை உருவாகும்.

## இராணுவம் விலக்கப்படுமென்று ஏமாற்றினார்

அண்மையில் சிறிலங்கா அரசின் கட்டுப்பாட்டு பிரதேசங்களுக்கு மீளத் திரும்பிய மக்களுடன் கதைத்தபொழுது, அவர்களுக்கு இப்பிரதேசங்கள் இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்து விலக்கப்படும் என சிறிலங்கா அரசு கொடுத்த உறுதிமொழியின் பேரிலேயே அவர்கள் இப் பகுதிகளுக்குத் திரும்பினர் என்ற உண்மை தெரிய வந்தது.

ஆயினும், இப் பகுதிகளில் இன்றும் பயங்கரப் போரை நடாத்திக் கொண்டிருக்கும் சிறிலங்கா, உண்மைகளை மூடி மறைக்கிறது. மேலும் சிறிலங்கா, தமிழர் பகுதிகளில் அவர்கள் ஈழத்துக்குச் சொந்தக்காரர்கள் அல்ல, சிறிலங்காவுக்கே சொந்தமானவர்கள் எனக் காட்டுவதற்கான செயற்பாடுகளை எங்கும் கட்டவிழ்த்து விட்டுள்ளது. ✳

## தமிழர்கள் பங்கேற்காத.....

போராட்டத்தின் பின்னணியில் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் சிறிலங்கா சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்டது. இந்த நிகழ்வை பெருவிழாவாகக் கொண்டாடுவதற்கு தீவின் அரசு எடுத்த கடும் முயற்சிகள் அதற்கு தோல்வியைத் தேடிக் கொடுத்துள்ளது. கடந்த ஆண்டில் கொழும்பைச் சிதைத்த இரு குண்டு வெடிப்புக்களின் சிதைவுகள், கலைக்கப்பட்ட கனவுகளை நினைவுபடுத்தும் முன்னறிவிப்பாக அமைந்தன.

பழம்பெருமை மிகு அமைதியான தீவான இலங்கை, உலகுக்கு அமைதி என்பதற்கு உதாரணமாகவும் யப்பானுக்கு அடுத்ததான பலம்பொருந்திய பொருளாதாரம் உள்ள ஆசிய நாடாகவும் 1948இல் விளங்கியது. ஆனால் இன்றோ, அதன் மிகக்குறைந்த வருமானத்தில் 20 வீதத்தை போரில் விரயமாக்கும் நாடாகவும் பெரும்பாலான மக்கள் வறுமையுடன் போராடும் மக்களாகவும் இலங்கை காட்சியளிக்கிறது.

1815இல் பிரித்தானியா, கண்டி பௌத்த அரசைக் கைப்பற்றிய போது அங்கு மக்களைக் கொன்று குவித்த பிரித்தானியா அரச பரம்பரையின் வாரிசான இளவரசர் அங்கே வரக்கூடாது என பௌத்த பிக்குகள், கோபாவேசத்துடன் க்டும்போக்கை வெளிப்படுத்திய நிலையிலும் வேல்ஸ் இளவரசர் பிரதம விருந்தினராக சுதந்திரப் பொன் விழாவில் கலந்து கொண்டார்.

சிங்கள பௌத்தர்கள், காலனித்துவ அரசாலேயே முழுத் தமிழர்களும் பெருந்தோட்ட தொழிலுக்கு கொண்டு வரப்பட்டனர் எனும் வரலாற்று திரிபுவாதம் பேசுகின்றனர். இது சுத்த அபத்தமானது. ஏனெனில் பிரித்தானிய, போர்த்துக்கேய, டச்சு காலனித்துவ கட்டுப்படுத்தல்கள் ஏற்பட முன்பே, தமிழர்களும் சிங்களவர்களும் சண்டையிட்டு வந்தமைக்குச் சரித்திரம் சான்று பகர்கிறது. இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட தமிழர்கள் மிகமிக சொற்பமானவர்களே.

இந்தியாவிலிருந்து அச்சத்தினால் சுதந்திரம் கொடுத்து அகன்றது போன்ற நிலை, பிரித்தானியாவுக்கு இலங்கைத் தீவில் இருக்கவில்லை. மாறாக, சண்டையில்லாமல் இணக்க உறவுடனேயே இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கப்பட்டது. இலங்கை மக்களும் பாகிஸ்தான், பங்களாதேஸ், பர்மாவில் ஏற்பட்டது போன்ற இராணுவச் சர்வாதிகாரத்தைச் சந்திக்கவில்லை. இலங்கை ஆசியாவின் புலியாக வளரும் அளவுக்கு சந்தர்ப்பங்கள் இருந்தபோதிலும் தனக்குத்தானே பேராபத்தை விளைவித்துக் கொண்டது. தமிழர்களும் சிங்களவர்களும் முன்னர் தம்மை சமூகங்கள் என்றே அழைத்தனர். ஆனால் இன்று தம்மை தேசமக்கள் என விபரிக்கின்றனர். இருவருமே தமது தேசங்களுக்கான உரிமைக் கோரிக்கைகளை எழுப்பியுள்ளனர்.

சிங்களவர்கள் தாம் வட இந்தியாவில் இருந்து வந்த இந்தோ-ஆரிய இனத்தவர், தாமே சிறிலங்கா முழுவதற்குமான உண்மையான மக்கள் என்ற எண்ணத்தை வளர்த்து, தமிழர்களை அழிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டமையே போரிற்கான மூல காரணியாக உள்ளது. சிங்களவர்கள் சிங்களத் தேசியமே இலங்கைத் தேசியம் என்ற கோசத்தை எழுப்பியுள்ளனர். இதன் அடிப்படையில் தமிழை அரச கரும மொழியாக ஏற்க மறுத்த 1956ஆம் ஆண்டின் 'சிங்களம் மட்டும்' சட்டமே அபாயகரமான போர் நிலையை உருவாக்கியது. இதன் பின்னர் அதுவரை கோரப்படாது இருந்த தமிழர் தாயகம் என்பது தமிழ் மக்களின் உணர்ச்சியாக உரிமைக் கோரிக்கையாக மாறியுள்ளது.

15 ஆண்டுகளாக 52,000க்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்ட நிலையிலும் அமைதிக்கான நம்பிக்கை அறிகுறிகள் தென்படவில்லை. சுதந்திரதினக் கொண்டாட்டங்கள் பாதுகாப்பு காரணங்களுக்காக கடைசி நிமிடத்தில் சிங்களவர்களின் இதயபூமியான கண்டியிலிருந்து இனங்களின் கலப்புப் பிரதேசமான தலைநகர் கொழும்புக்கு மாற்றப்பட்டது.

இலங்கையின் 18 வீதமான தமிழர்களும் பெரும்பாலும் இந்த சுதந்திர தின வார நிகழ்ச்சிகளில் பங்கு பற்றவில்லை. ஆக்கிர மிக்கபட்டுள்ள அந்நியப் படுத்தப்பட்டுள்ள மக்களின் உணர்வுகளை மதித்துச் செயற்பட்டாலே தேச நிர் மாணத்தைப் பூரணப்படுத்த முடியும். ✳

## முத்தள்ளிய கடலில் எங்கள் சொந்தங்கள் உடலள்ளிய சோகதினம்

தமிழீழத் திருநகரின் மன்னார்க்கடல். முத்துக்குளிப்பால் தமிழீழத் தேசத்தின் பெயரை உலகெங்கும் பரப்பிய கடல். பிரித்தானியர் தனிக்கம்பனி நிறுவி முத்தள்ளிய முதுநீர் இன்றோ சிங்களப் பேரரசால் தமிழர் சடலங்கள் மிதக்கின்ற கோரக்கடலாக மாற்றப்பட்டுக் காட்சியளிக்கிறது.

கடந்த ஆண்டு இதே மாசித்திங்கள் 19ம் நாள் சிங்கள் அந்நிய அரசின் "எடிபல" இராணுவ படையெடுப்புக்கு உள்ளாகக் கூடாதென உயிருக்கும் உடலுக்கும் பாதுகாப்புத் தேடி படகேறிய எம்மினச் சொந்தங்கள் 130 பேர் ஆழ்கடலில் படகு கவிழ்ந்து மரணித்த துயர சம்பவத்தை எண்ணிப் பார்க்கிறோம். கடற்புலிகளின் விரைவு மீட்புப்பணி, 20 தமிழரை உயிருடன் மீட்டது. 85 உயிரற்ற உடல்களையும் கரைசேர்க்க உதவியது என்பது வரலாறு.

இந்தத் தமிழர் 130 பேரும் எம் தமிழீழச் சரித்திரத்தின் வேர்கள். எதற்காக இவர்கள் இன்னுயிர்களை இழந்தனர் என்பதனைச் சிந்திக்கும் ஒவ்வொரு மனிதனும், தமிழீழ விடுதலையின் அவசியத்தை உணர்வான். இப்படி எங்கள் இனச் சொந்தங்கள் செத்தழிய நாம் வாளா இருக்கலாமா எனும் எண்ணம் எமது தமிழீழ நெஞ்சங்களை உலுப்புகின்றதனால் எழுகின்ற மக்கள் சக்தி, தமிழீழ விடுதலைக்கான உழைப்பாகி சிங்கள ஆக்கிரமிப்பாளரை துரத்தியடிக்கும் புனிதப் போரின் வெற்றியை விரைவாக்கும். அந்த வெற்றியே இந்த எங்கள் 130 தமிழீழ மக்களதும் மரணிப்புக்கு நீதி வழங்கும். அந்த நன்னாள் வரும்வரை இவர்களுக்கு அஞ்சலி செய்து இவர் பிரிவால் துயருறும் எமது சகோதர நெஞ்சங்களின் துயரில் நாமும் கலந்து, எம் இன ஒன்றிப்பை வெளிப்படுத்தி நிற்கின்றோம். ✳

www.tamilarangam.net





## உயிர்காக்கும் மருத்துவ நிதியம்

சிறீலங்காவின் சந்திரிகா அரசு தனது இராணுவ ஆக்கிரமிப்புக்கள் விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்படுவதினால் ஏற்பட்ட தோல்வியை, பொதுமக்கள் மீதான இராணுவப் பழிவாங்கல்களாக மாற்றி வருகின்றது.

இதனால் பொதுமக்களும், அவர்களைப் பாதுகாக்கத் தம் உயிரையும் துச்சமாகக் கருதும் விடுதலைப் புலிகளும் சிறிலங்கா படைகளினது கண்மூடித்தனமான ஆயுதப் பிரயோகங்களையும் வான்வழி குண்டு வீச்சு எறிகணை வீச்சுக்களையும் எதிர்கொண்டு போராடி வருகின்றனர்.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் பொதுமக்களும் போராளிகளும் காயங்கள் அடைவதும் மருத்துவத் தேவைகளை எதிர்நோக்குவதும் அதிகரித்து வருகின்றது. ஆனால், தமிழர்களை மனிதர்களாகக் கூட பொருட்படுத்தாத சிறீலங்கா அரசினதும் அதன் முப்படைகளினதும் ஏகோபித்த தலைவரான சந்திரிகா, தமிழ்ப் பகுதிகள் மீது கடுமையான மருத்துவத் தடைகளை அமுலாக்கி வருகிறார். இதனால் தமிழ்ப் பொதுமக்கள் வைத்திய வசதி இன்றி அநியாயமாக உயிரிழக்கும் பரிதாபச் சாவுகள் அதிகமாகின்றது. சுருக்கமாகச் சொன்னால், மருந்தும் சிறீலங்காவால் ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இது சர்வதேசச் சட்டங்களுக்கு எதிரான இனஅழிப்பு முயற்சியாக இருந்தும் இதுவரை சர்வதேச நாடுகள் இது குறித்து பெரியளவில் அக்கறை காட்டாதது "தன் கையே தனக்கு உதவி" என்ற உண்மையை மேலும் உறுதியாக்கிறது. இதனால் பொதுமக்களதும் போராளிகளதும் "உயிர்காக்கும் மருத்துவ நிதியம்" ஒன்று தமிழீழ மக்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதை ஒரு நிதியம் என்று சொல்வதை விட, ஒரு உயிர்காக்கும் பணி என்று சொல்வதே சரியான விளக்கமாக அமையும். தமிழீழ மக்கள் மனஉறுதியுடன் விடுதலைக்காக எதையும் தாங்கி எதையும் சாதிக்கும் ஆற்றலுள்ளவர்கள். அதனால் அடுத்தவர் ஏறெடுத்து பார்த்தாலென்ன, பார்க்கவிட்டாலென்ன தமது உடன் பிறப்புக்களை தாமே பாதுகாப்பதற்கான உயிர்காக்கும் மருத்துவ நிதியம் ஒன்றை செயற்படுத்தி உள்ளனர். ஆயினும் தமிழீழ மண்ணில் சிறீலங்கா ஆக்கிரமிப்பு உருவாக்கி வைத்துள்ள திட்டமிட்ட வேலையின்மைகளும் தொழில் முயற்சிகளுக்கான தடைகளும் பொருளாதார நகர்வுகளுக்கான இராணுவ வேலிகளும் தமிழீழ மக்களிடையே பணத்தின் திரவத்தன்மையை கட்டுப்படுத்தி கஸ்ரங்களுக்கு உள்ளாக்குவது நாமறிந்து வரும் உண்மை.

இந்நேரத்தில் எமது உடன்பிறப்புக்கள், தேசப் பற்றாளர்கள், போராளிகள் மருத்துவ தேவைகளுக்காகத் தவிக்கும் இந்நேரத்தில் உலகெங்கும் வாழ் தமிழர்களாகிய நாம் என்ன செய்கிறோம். இதுவே நாம் எம்மைக் கேட்க வேண்டிய கேள்வி. இக் கஸ்ர நிலையை ஓரளவுக்கேனும் எம்மால் நிவர்த்தி செய்ய முடியாதா?. நிச்சயமாக முடியும். புலம் பெயர்ந்து மேற்குலகில் வாழ்ந்தாலும் எம்மில் பலருக்கும் குடும்பக் கஸ்ரங்கள் இருக்கின்றனதான். மறுப்பதற்கில்லை. இருப்பினும், நாம் சிறிது முயற்சித்தால், எமது சொந்தங்களின் உயிர்காக்கும் மருத்துவ நிதியத்துக்கு உதவலாம். உதவ வேண்டும் எனும் உளத்துடிப்பும் ஆர்வமும் தேசப்பற்றும் எம்மில் பலரிடையே துருத்திக் கொண்டிருப்பது உண்மை. ஆனால் இது போதவில்லை. உதவ வேண்டும் எனும் விருப்பு இன்னும் பலருக்கு உருவாக வேண்டும். ஆகவே, எமது உறவுகளுக்கு உதவ ஏதோ சில தியாகங்களை செய்தாவது ஆக்கம் கொடுக்க வேண்டிய நேரம் இது. "காற்றுள்ள போதே தூற்றிக் கொள்" என்பார்கள். ஆகவே, இப்பொழுதே உதவ வேண்டும். இந்தப் புனிதப் பணியில் இயன்றதைவிட கொஞ்சம் அதிகமாகவே பங்களிக்க முடிவு செய்வோம். உயிர்காக்கும் மருத்துவ நிதியம் எமது உழைப்பால் உரம் பெறட்டும்.

எமது சகோதர வாஞ்சையையும் தேசப் பற்றையும் நீதியின் மேலான நம்பிக்கையையும் விடுதலை மீதான காதலையும் எதிரி சந்திரிகாவும், அவரின் அடிமை கதிர்காமரும் இனங்கண்டு தற்போது சர்வதேச தமிழர்களை ஒடுக்குவதன் மூலமே, தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தை அடக்கலாம் என்ற புதிய சித்தாந்தத்தையும் செயற்படுத்தத் தொடங்கி உள்ளனர். இதற்காக, "தனது மூக்கறுபட்டாலும் எதிரிக்குச் சகுனப் பிழையாகட்டும்" என்ற உணர்வுடன் சர்வதேச சந்தை நலன்களுக்கும் இராணுவ வல்லாண்மைகளுக்கும் ஆயுத விற்பனையாளர்களுக்கும் இலங்கைத் தீவை புதிய சந்தையாக சந்திரிகா அம்மையார் கட்டி எழுப்பி வருகிறார்.

இதனால் புலம்பெயர் தமிழர்கள் தமது பணிகளின் பெருமையை, தேவையை தாம் வாழும் நாடுகளில் உள்ள மக்களுக்கு எடுத்து விளக்கி, பரப்புரைகள் செய்து மக்கள் வலிமை கொண்டே சந்திரிகாவின் சர்வாதிகார அரசின் பொய்ப் பிரச்சாரங்களை அம்பலப்படுத்த வேண்டும். ஆகையினால் புலம்பெயர் தமிழர் ஒவ்வொருவரும் சர்வதேசப் பரப்புரைகளில் இணைய வேண்டிய நேரம் இது. இதற்கு உயிர்காக்கும் மருத்துவ நிதியம் அருமையான அழைப்பாகிறது. எங்கள் சொந்தச் சகோதரர் துன்பத்தில் மாய்தல் கண்டு நாம் அமைதியாக இருக்க முடியாது. சந்திரிகாவுக்கு மட்டுமல்ல, உலகுக்கும் உணர்த்த நாம் ஒன்று திரள வேண்டும். இன்றே திரள வேண்டும். நன்றே நமது பணிமனைகளுடன் நெருக்கமாகப் பணியாற்ற வேண்டும். அதற்கான ஒரு சந்தர்ப்பமாக உயிர்காக்கும் மருத்துவ நிதியத்தை முன்னெடுத்து எமது மக்களின் உயிரை, உடலை, தேசத்தை பாதுகாக்க எம்மாலானதைச் செய்வோம்! ✳

## தன்வாயால் தானே கெடும்...

ஜெயசிக்குறு பாதைதிறப்பு இராணுவ நடவடிக்கை குறித்த பிரச்சினையைவிட தலையாய பிரச்சினையாகி சிறீலங்காஅரசின் தலையை உருட்டும் பிரச்சினை, 'ரைம்' சஞ்சிகைக்கு சந்திரிகா வழங்கிய பேட்டியின் உருவில் வந்துள்ளது.

ஜெயசிக்குறு தோல்விகளும் தலதாமாளிகைக் குண்டுவெடிப்புக்களும், அமைச்சர் ரத்வத்தையின் இராஜினாமா நாடகங்கள் யாவுமே பின்னுக்கு தள்ளப்பட்டு, இன்று பேசப்படும் மோதப்படும் பிரச்சினையாக சிறீலங்கா சனாதிபதியின் 'ரைம்' சஞ்சிகைக்கான பேட்டி அமைந்துள்ளது.

1994 காலப்பகுதியில், விடுதலைப் புலிகளுடனான சிறீலங்கா அரசின் பேச்சுவார்த்தைக் காலத்தில், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு, இரகசிகமான முறையில் சந்திரிகா அம்மையார் வழங்கிய சலுகை அடிப்படையிலான வாக்குறுதி ஒன்று அம்மையாரின் வாயாலேயே வெளிவந்துள்ளதில், சிங்களப் பொதுசனம் குழம்பிப்போயுள்ளது. குழம்பாத பொது சனத்தையும் குழப்பும் வேலைகளில் சந்திரிகா அரசாங்கத்திற்கு எதிரான கட்சிகள் இறங்கியுள்ளன.

தலைவர் பிரபாகரனுக்கு சந்திரிகா அம்மையார் வழங்கியதாகச் சொல்லும் சலுகை அடிப்படையிலான வாக்குறுதி இதுதான்.

"பிரபாகரனிடம் வடக்கின் நிர்வாகத்தை, தேர்தல்கள் எதுவும் இன்றி பத்து வருடங்களுக்கு கையளிப்பதாக தெரிவித்திருந்தேன். ஆனால், புலிகளின் தலைவர் பிரபாகரன் அதற்கு எதுவித பதிலையும் தெரிவிக்காமல் அலட்சியப்படுத்திவிட்டார்."

இந்த வாக்குமூலம்தான் பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. சந்திரிகா அம்மையார் தன்வாயாலேயே கெட்ட நிலையில் அவதிப்படுகின்றார். ஐந்து வருடம் ஆட்சியில் இருக்க மக்களால் அனுமதிக்கப்பட்ட ஒரு ஆட்சிபீடம், பிரபாகரனிடம் பத்து வருடங்களுக்கு வடக்கின் நிர்வாகத்தை வழங்க எப்படி முடியும் என்பது ஒரு கட்சியினரின் கேள்வி.

அரசியல் அமைப்புத்திட்டத்தை முழுமையாக அவமதிக்கும் வகையில், சந்திரிகாவின் நடவடிக்கை அமைந்திருப்பதாக எதிர்க் கட்சியினர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

தமது சொந்த உடமையாக நாட்டை எண்ணி, தமது சொந்த விருப்பு வெறுப்புக்களுக்கு ஏற்ப நாட்டைக் கூறுபோடும் தான்தோன்றித்தனமான முடிவுகளாக இத்தகைய நடவடிக்கைகள் மக்களால்

> தமிழ்மக்களின் பிரதிநிதிகள் புலிகள் அல்ல, புலிகள் வேறு மக்கள் வேறு என்று முன்னவர் பாணியில் தற்போது பிரச்சாரம் நடத்திவரும் சந்திரிகா அம்மையார், எந்த அடிப்படையில் பத்துவருடத்திற்கு புலிகளின் கைகளில் வடக்கை கையளிக்க திட்டமிட்டார் என்ற வாதப்பிரதிவாதங்களுக்கு அப்பால், தெளிவான அறிவிப்பு ஒன்றை விடுதலைப் புலிகள் வழங்கியுள்ளனர் என்பதை இந்தக் குழப்பங்களில் சிங்களம் கவனிக்கத்தவறி விடுகின்றது என்றே கொள்ள வேண்டியுள்ளது.

சந்தேகக்கண்கொண்டு நோக்கப்படுகின்றது எனச் சுட்டிக்காட்டும் கொழும்புப் பத்திரிகைகள், அதற்கு தெளிவான விளக்கம் மக்களுக்கு தெரிவிக்கப்படவேண்டும் என வலியுறுத்தியுள்ளன.

இதுவிடயத்தை சந்திரிகா அரசு உரிய முறையில் தெளிவுபடுத்தாத பட்சத்தில், அரசியலமைப்புச் சட்டத்திருத்தங்கள் குறித்த கூட்டுக் கலந்துரையாடல்களில் ஐக்கிய தேசியக் கட்சி கலந்துகொள்ளாது என, ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் றொனி டி மெல் தெரிவித்துள்ளார்.

இவற்றை எல்லாம் தாண்டி, ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் நிகால் கலபதி, நாட்டைத் துண்டாடி ஒருபகுதியை புலிகளிடம் கையளிப்பதற்கான இரகசிக உடன்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதற்கான அறிகுறிகள், சிறீலங்கா ஜனாதிபதியின் பேட்டியினூடு வெளிப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

மொத்தத்தில் சிங்களம் இதுவிடயத்தில் குழம்பிப்போயுள்ளது. கூடவே சந்திரிகா அரசும்.

பிரேமதாசா ஆட்சிக்காலத்தில், விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைக் கால கட்டத்தில், விடுதலைப் புலிகளிற்கு பெருந்தொகைப் பணம் மற்றும் ஆயுதங்கள் வழங்கப்பட்டதாகவும், ஆயுதங்கள் முல்லைக்காட்டிலும் கிழக்கிலும் வைத்து விடுதலைப் புலிகளிடம் கையளிக்கப் பட்டதாகவும், முன்னாள் சனாதிபதி பிரேமதாசாமீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப் பட்டன. தமது இராணுவத்தினரை அழித்து நாட்டைச் சிதைக்க புலிகளிற்கு பிரேமதாசா ஆயுதங்கள் வழங்கினார் என்ற குற்றச்சாட்டை சந்திரிகாவும் லாவகமாகப் பயன்படுத்தினார். ஐக்கிய தேசியக் கட்சியை ஓரங்கட்ட இந்த பிரச்சார யுத்தத்தை சந்திரிகா புத்தி சாலித்தனமாக மேற்கொண்டார்.

ஆனால் அதே சந்திரிகா, வடக்கின் நிர்வாகத்தை புலிகளிடம் கையளிக்கத் தான் முயன்றதையும், பிரபாகரன் அதனைச் சட்டை செய்யவில்லை என்பதையும் தெரிவித்து, லாபத்திற்குப் பதிலாக பெரும் நட்டத்தைச் சம்பாதித்துள்ளார்.

இப்பொழுது பிரச்சாரப் பந்து ஐக்கியதேசியக் கட்சியின்வசம் சிக்கியுள்ளது.

இதில் வேடிக்கை என்னவென்றால், சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா தேன்தடவி வழங்கிய வாக்குறுதியை தலைவர் பிரபாகரன் கருத்திற்கே எடுக்காமல் அலட்சியப் படுத்தியதுதான். தமிழ்மக்களின் பிரதிநிதிகள் புலிகள் அல்ல, புலிகள் வேறு மக்கள்வேறு என்று முன்னவர் பாணியில் தற்போது பிரச்சாரம் நடத்திவரும் சந்திரிகா அம்மையார், எந்த அடிப்படையில் பத்துவருடத்திற்கு புலிகளின் கைகளில் வடக்கை கையளிக்க திட்டமிட்டார் என்ற வாதப்பிரதிவாதங்களுக்கு அப்பால், தெளிவான அறிவிப்பு ஒன்றை விடுதலைப் புலிகள் வழங்கியுள்ளனர் என்பதை இந்தக் குழப்பங்களில் சிங்களம் கவனிக் கத்தவறிவிடுகின்றது என்றே கொள்ள வேண்டியுள்ளது.

அதிகாரவெறியும், பதவிவெறியும் கொண்டவர் பிரபாகரன் எனக்கூறும் சிங்களத்திற்கு தலைவர் பிரபாகரன் தெளிவான கருத்தை தனது செயற்பாட்டின் மூலம் வெளிப் படுத்தியுள்ளார். அதாவது இது தேசவிடுதலைப் போராட்டம் என்பதை. சலுகைகளுக்கான போராட்டமல்ல. இது உரிமைகளுக்கான இரத்தம் சிந்தும் போராட்டம் என்பதை.

தமிழீழ தேசம் தன் விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றது. வரலாறு தவம் இருந்து பெற்ற ஒரு பெருந்தலைவன் போராட்டத்தைத் தலைமையேற்றுள்ளான். வலிந்த ஆக்கிரமிப்புப் பெரும் பூதத்துடன், மனதிடம் என்ற ஆயுதம் தரித்து தமிழீழம் சத்தியப்போர் புரிந்து வருகின்றது.

இதில், ராஜிவ் காந்திகளின் "முதலமைச்சர்" ஆசை வார்த்தைகளும், சந்திரிகாக்களின் "பத்தாண்டு நிர்வாக" ஆசையூட்டல்களும் ஒரு வீர வரலாற்றை வளைத்துப் போடுமா?. வரலாறு உருவாக்கிய ஒரு விடுதலைச் சக்தியை, வந்து போகும் தேர்தல் பிரதிநிதிகள் விலை பேசுவது சாத்தியமில்லை.

–சுப்பு–

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பாரிய போரொன்றுக்கு சிறீலங்கா தயாராகிறது

## ✳ படைகளிலிருந்து தப்பியோடி தலைமறைவானோரை திரும்பி வருமாறு ஜனாதிபதி உருக்கமான வேண்டுகோள்

## ✳ சிறீலங்காப் பாராளுமன்றத்தை ஒரு சபையாக மாற்றி எதிர்க்கட்சியினரையும் கொண்ட மந்திரிசபை அமைக்கவும் பௌத்த தேரோக்கள்

சுதந்திரப் பொன்விழா முடிந்ததும் முடியாததுமாக சிறீலங்கா பாரிய போரொன்றுக்கு முரசறையத் தொடங்கியுள்ளது. இதன் முதலாவது முயற்சியாக படைகளிலிருந்து தப்பியோடியவர்களை உடனடியாக படைகளில் சேருமாறும் அவர்கள் மீது எதுவித விசாரணையும் நடைபெற மாட்டாது எனவும் சிறீலங்கா ஜனாதிபதி உருக்கமான அழைப்பொன்றை விடுத்துள்ளார். இது தொடர்பாக சந்திரிகா விடுத்த வேண்டுகோளில், பயங்கரவாதிகள் எனத் தாம் தடை செய்ததினால் விடுதலைப் புலிகள் தாக்குதலை வேகமாக்குவதாகவும், இதற்கு ஈடுகொடுப்பதற்கு தப்பியோடியோரின் உதவி படையினருக்குத் தேவையாக இருப்பதாகவும் வேண்டுகோள் விடுத்துள்ளார். இதுவரை 25,000க்கும் மேற் பட்டோர் சிறீலங்காப் படையில் இருந்து அச்சம் காரணமாகவும் குற்றச் செயல்கள் காரணமாகவும் தலைமறைவாகி ஒளிந்து வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கு எத்தனையோ பொது மன்னிப்புக்கள் அளித்தும் இவர்கள் படைகளில் சேர மறுத்து வருகின்றனர். இதனால் கிராம சேவகர்களைக் கொண்டு இவர்களை மடக்கிப் பிடிக்க சிறீலங்கா பலமுறை முயன்றும் அதுவும் கைகூடாத நிலையில் தற்பொழுது சிறிலங்காவின் அரசுத் தலைவரும் பாதுகாப்பு அமைச்சருமான சந்திரிகாவே நேரடி அழைப்பு விடுத்துள்ளார்.

அதேவேளை, சிறீலங்காவின் பாராளுமன்றத்தை ஒரு சபையாக மாற்றி, எதிர்க்கட்சியினரையும் இணைத்து தேசிய சபை ஒன்றை நிறுவி அதில் எதிர்க்கட்சியினருக்கு அமைச்சர் பதவிகள் கொடுத்து தேசிய நெருக்கடியை எதிர்கொள்ளுமாறு சிறீங்காவின் ஜனாதிபதியை பௌத்த தேரோக்கள் கேட்டுள்ளனர். இது குறித்து தேரோக்கள் விடுத்த வேண்டு கோளில், "கண்டியில் தலதா மாளிகையில் வெடித்த குண்டு, கொழும் பிலும் வெடித்துள்ளது. இதனால் நாடே அழியப் போகிறது. உடனடியாக, தேசிய நெருக்கடி நிலையை பிரகடனப் படுத்தி சிறீலங்காப் பாராளுமன்றத்தை ஒரு சபையாக மாற்றி எதிர்க்கட்சி – ஆளுங்கட்சி கூட்டு மந்திரி சபையை அமைத்து போரினைத் தொடர வேண்டுமெனக் கேட்டுள்ளனர்.

சிறீலங்கா தலைநகரில் நடைபெறும் செயற்பாடுகளை அவதானிக்கும் ஆய்வாளர்கள், சிறீலங்கா, தமிழ் மக்கள் மீதான மூர்க்கத்தனமான பாலியல் போரொன்றை தொடங்குவதற்குத் தயாராகி வருகிறது எனத் தெரிவிக்கின்றனர்.

வடக்கு – கிழக்கு மாகாணங்களில் இராணுவச் சர்வாதிகாரத்தை நடாத்திக் கொண்டிருக்கும் சிறீலங்கா, தனது படைகளின் ஆளணிகளைப் பெருக்கி, மக்களை மேலும் இராணுவ நெருக்குதல்களுக்கு உள்ளாக்குவதன் மூலம் அவர்களின் சுதந்திர உணர்வைச் சாகடிக்கலாம் என திட்டமிட்டுள்ளது.

இதற்கிடையில், யாழ். குடாநாட்டுக்கு சென்று வந்த கத்தோலிக்க மதகுருவான அருட்திரு. ராஜன் அவர்கள், ஐ.பி.சி எனப்படும் தமிழ் வானொலிக்கு அளித்த பேட்டியில், தமிழர்கள் அந்தரங்க உரிமை என்பதே இல்லாதவர்களாக ஆக்கப்பட்டுள்ளார்கள் எனவும் தமிழர்களது நகரங்களின் தெருக்களில் மட்டும் இராணுவம் சோதனையிடுவதற்காக நிற்கிறது என்று யாராவது நினைத்தால் அது தவறு எனவும், தமிழர்களுடைய வீடுகளின் விறாந்தைகள் வேலிகள் வீட்டுப் பூந்தோட்ட ங்கள் எல்லாமே அவர்கள் தாம் நினைத்த மாதிரி திரிகிறார்கள் எனவும் குறிப்பிட்டார். தான் தமது நண்பர் ஒருவரின் தாயாரை பார்க்கச் சென்ற நேரம் அப்பகுதியைச் சுற்றிவளைத்த இராணுவம், அங்கிருந்த தமிழ் சிறார்களைக் கூட சோதனைக்கென இழுத்துச் சென்று இருந்ததாகவும் இந்நிலையில் அந்த வயோதிப தாயாரிடம் "அம்மா என்ன உங்களை மட்டும் விட்டுட்டு போட்டாங்களா?" எனக் கேட்டதற்கு அவர் பதில் எதுவும் சொல்லாததைக் கண்டு திகைத்து, சுற்றிப் பார்த்த பொழுது அந்த வயோதிபத் தாய் இருந்த கதிரையின் அருகே உள்ள பூஞ்செடிகளுக்கு நடுவில் இராணுவத் தொப்பிகளை பார்க்கக் கூடியதாக இருந்ததாகவும் அந்த அச்சம் காரணமாகவே அந்த அம்மாவால் எதுவுமே பேச முடியவில்லை எனவும் கூறினார். தோட்டங்களில் மக்கள் தண்ணீர் இறைத்துக் கொண்டு நிற்க அவர்களுடன் உரசிக் கொண்டு வாழைகளோடு வாழைகளாக படையினர் துப்பாக்கிகளுடன் நிற்பதாகவும் கூறினார்.

இத்தகைய ஒரு கேவலமான நிலை இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப் பகுதிகளில் இல்லையெனவும் அங்கு மக்கள் சுதந்திரமாக ஒருவருடன் ஒருவர் நல்ல உறவுடன் வாழ்வதாகவும் கூறினார். ஆனால் இந்தப் பகுதிகளில் மிகக் கடுமையான முறையில் உணவு, மருந்து, இருப்பிட வசதிகள் மக்களுக்கு இல்லாது இருப்பதாகவும் இதனால் இம் மக்களது வாழ்வு சொல்லொணா துன்பங்கள் துயரங்களை உடைய வாழ்வாக காணப்படுவதாகவும் கூறினார். ஆயினும், அடிக்கு அடி இராணுவத்தை நிறுத்தி ஆளும் இந்த நிலை நீண்ட நாட்களுக்கு நீடிக்காது என்ற மனஉறுதியுடன் மக்கள் வாழ்வதாகவும் இந்த இராணுவம் எங்கும் வியாபித்து நிற்கும் நிலையே தீர்வை விரைவாகக் கொண்டு வரப் போகிறது எனக்கூறும் மக்கள், சாதாரண மாவட்ட சபைகளையோ அது போன்ற வற்றையோ தீர்வாக ஒரு பொழுதும் கருதவில்லை எனவும் அரசியல் தீர்வுப்பொதி என்பது குறித்து மக்கள் எதுவித அக்கறையும் காட்டவில்லை எனவும் அது குறித்த நம்பிக்கை மக்களிடையே அங்கு மட்டுமில்லை எங்குமே இல்லை எனவும் தெரிவித்தார். தமிழ் மக்கள் தங்களுக்கு நிவாரணங்களையும் உதவிகளையும் சர்வதேச நாடுகளில் உள்ள உடன்பிறப்புகளில் இருந்து எதிர்பார்க்கும் அதேநேரத்தில் அதைவிட மேலாக தமது துயரவாழ்வு உலகுக்கு எடுத்துக் கூறப்பட வேண்டுமென எதிர் பார்க்கின்றார்கள்.

அடிகளார் தமது பயண அனுபவத்தை மேலும் விளக்குகையில், தமிழர் நகரங்கள் கூறுபோடப்பட்டு 'பண்ட்' என மக்களால் அழைக்கப்படும் வேலிகளால் கீறிப் பிளக்கப்பட்டு காணப்படுகின்றது என்றார். இந்த இராணுவக் கோலம் வடக்கு – கிழக்கு பகுதிகளை முழுவதற்கும் பொதுவான கோலம் எனவும் அவர் எடுத்துரைத்தார். பள்ளிக்கூடங்கள் நடை பெறுவதாக கூறப்பட்டாலும் எந்தப் பள்ளியிலுமே முழுமையான முன்னைய அளவு மாணவர்கள் இல்லை எனவும் பள்ளிக்கு பிள்ளைகளை அனுப்பும் தாய் தந்தையர்கள் அவர்கள் திரும்பி வரும்வரை துடித்துக் கொண்டிருப்பதாகவும் கூறினார். இலங்கைத் தீவுக்கு போகும் எவரும் நாட்டுக்குள் இன்னொரு நாடு என்ற உணர்வை தமிழ்ப் பகுதிகளுக்குச் செல்ல ஆயத்தமான உடனேயே புரிந்து கொள்ளலாம் எனவும் 'விசா' முறைகளை விட கண்டிப்பான நடைமுறைகளைக் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் பயணம் செய்யும் எவரும் அனுபவித்து தாம் இரு நாடுகளுக்குள் இருப்பது போன்ற மனோநிலையை பெறுவர் எனவும் இது யாழ்ப்பாணத்துக்கு மட்டுமல்ல வவுனியா, மன்னார், மட்டக் களப்பு, திருமலை, அம்பாறை மாவட்டங்கள் அனைத்துக்குமே பொதுவான அனுபவம் எனலும் அவர் கூறினார்.

இவ்வாறு நாடு இயல்பாகவே பிரிந்துவிட்டதையும் மக்கள் இயல்பாகவே தம்மேல் எத்தகைய இராணுவ அழுத்தங்கள் ஏற்பட்டாலும் சற்றும் மனஉறுதி குன்றாது விடுதலை உணர்வுடன் காணப்படுவதையும் நன்றாக உணர்ந்து விட்ட சிறீலங்கா, மக்களை இனஅழிப்பு செய்து அவர்களது தாயகத்தின் உட்கட்டுமானங்களை உருக்குலைத்து அவர்களை அடிமை கொள்ளும் மிலேச்சத்தனமான போரொன்றை நடாத்தி வருகிறது. இதனை மேலும் விரிவுபடுத்தி மக்களை கொன்று குவிப்பதற்கான பாரிய போர் முயற்சிகளில் சமாதான தேவதை சந்திரிகா அம்மையார் வெளிப்படையாக இறங்கியுள்ளார்.

இந்நேரத்தில் தமிழ் மக்களின் உயிரையும் தமிழீழத் தாயகத்தையும் பாதுகாப்பதற்கான குரலாக ஒலிக்க வேண்டிய கடமை, சர்வதேச நாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் ஒவ்வொரு தமிழீழ மக்களினதும் இரத்தக் கடமையா[க] உள்ளது. புலம்பெயர் தமிழர்க[ள்] தமது தமிழீழ மக்களுக்கு[ு] ஏற்பட்டுள்ள தேசிய நெருக்கடியான இந் நேரத்தில் தமது மற்றைய அலுவல்களுட[ன்] தாயகத்தில் வாழும் மக்களி[ன்] குரலாக ஒலித்தல் என்பதற்குப முன்னுரிமை கொடுக்[க] உறுதிபூண்டு நிற்பதை, கடந்[த] வாரங்களில் உலகின் தலை[] நகர்களில் நடந்த எழுச்சிப் பேரணிகள் கூட்டங்கள் எடுத்துக் காட்டின. இந்த புலம்பெயர் தமிழர்களின் உணர்ச்சிகள் உணர்வுபூர்வமான செயற்பாடாக மாற்றப்பட்டு தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தில் எமது மக்கள் வெற்றி பெற்று அமைதியும் பாதுகாப்புமான வாழ்வு பெற அனைத்தையும் செய்ய வேண்டிய நேரமாக இன்றைய காலகட்டம் திகழ்கிறது.

இதனை விரைவுபடுத்துவதன் அவசியத்தை உணர்த்துமாற்போல் இப் பத்திரிகை அச்சுக்கு போகும் தருவாயில் கனகராயன் குளம் நோக்கி ஏ 9 பாதையினூடாக சிறீலங்கா இராணுவம் தரைநகர முயற்சிப்பதாகவும் இதை தடுத்து, படைகளை பின்வாங்க வைப்பதற்கு விடுதலைப் புலிகள் சகல முயற்சிகளிலும் இறங்கியுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வழமைபோல் ரத்வத்தையின் பொய்க்குரலாக விளங்கும் இராணுவப் பேச்சாளர்கள், அங்கே பிடித்து விட்டோம், இங்கே நிற்கிறோம் என்றெல்லாம் பிரச்சார பீரங்கிகளை முடுக்கி விட்டுள்ளனர்.

இவைகளை நம்பும் நிலையில் சர்வதேச உலகு இன்றில்லை. எனவே, புலம்பெயர் தமிழ் மக்கள் ஓரணியாக தமிழீழ மக்கள் சக்தியாக எழுந்து சந்திரிகா அரசின் இராணுவச் சர்வாதிகார அந்நிய அரசை எதிர்க்க வேண்டிய நேரம் இது.

படை விலகி தமிழர் தாயகம், தேசியம், தன்னாட்சி உலகால் ஏற்கப்பட்டு தமிழீழ மக்கள் பாதுகாப்பான அமைதி வாழ்வு வாழ இயன்ற அனைத்தும் செய்வோம். ✳

www.tamilarangam.net



# யாழ்குடாநாடு -
# திறந்தவெளிச் சிறைப்படுகொலை

சிங்கள இராணுவத்தின் பிடிக்குள் உள்ள பகுதிகளில் வாழும் மக்கள், ஒரு திறந்த வெளிச்சிறைக்குள் வசிக்கும் கைதிகள் போன்றே வாழ்க்கையை ஓட்டுகின்றனர். கேட்பார் – தடுப்பார் இன்றி கைதுகளும் பாலியல் வல்லுறவுகளும் சூறையாடல்களும் நடக்கின்றன. இளைஞர்கள் காணாமல் போதல், அங்கே சர்வசாதாரணம். கண்ணுக்கு முன்னால் கைதுசெய்து – பின் கொன்றுவிட்டு தாங்கள் கைது செய்யவில்லை என்று கைவிரிப்பதும் – அல்லது விடுதலை செய்துவிட்டோம் என்று இருபொருள்பட பதில்கூறுவதும் சிங்களப்படையின் வழமை.

காணாமல்போகும் அவலச்செய்திகளும் அதனால் எழும் துயரக்கதைகளும் தென்தமிழீழத்தின் ஒவ்வொரு கிராமத்திலும், சொல்வதற்கிருக்கும். எஸ். ரி. எவ். இனர் கைதுசெய்தால் அது காணாமற்போனதற்குச் சமன். 1948இன் பிற்பகுதியில் அங்கே ஆரம்பமான காணாமல்போதல் இன்றுவரை தொடர்கின்றது.

| காணாமல் போனோர் : கோட்டரீதியாக | | | |
|---|---|---|---|
| வலிகாமம் | வடமராட்சி | தென்மராட்சி | மொத்தம் |
| 419 | 18 | 324 | 761 |

பிரேமதாசாவின் ஆட்சிக்காலத்தில் (1990–93) காணாமல்போதல் உச்சநிலைக்குச் சென்றிருந்தது. பத்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களை உள்ளடக்கிய தென்தமிழீழத்தில் காணாமல் போயுள்ளனர்.

இராணுவ ஆட்சியின் ஓர் அம்சம் காணாமல்போதல். ஆனால், காணாமல்போகச் செய்வித்தல் இன அழிப்பின் ஓர் அம்சமாகும். தமிழீழத்தைப் பொறுத்தவரையில், காணாமல்போதல் என்பது தமிழின அழிப்பின் ஓர் செயற்பாடாகவே நடாத்தப்படுகின்றது. தென்தமிழீழத்தில் இது உச்ச நிலையில் இருந்ததற்கு ஒரு காரணம் உண்டு. தென்தமிழீழத்தின் சனத்தொகையில் தமிழ் மக்களின் வீதாசாரத்தை நன்றாகக் குறைத்து – அதை சிங்களவர் மாகாணமாக மாற்றுவதே அதுவாகும். இதேவேளை, இளம் விதவைகளை உருவாக்கி, சிக்கலான சமூகப் பிரச்சனைகளை உருவாக்கும் கொடூரத் திட்டத்துடன், இளம் குடும்பத் தலைவர்களை எஸ். ரி. எவ். குறிவைத்து – காணாமல் போகச் செய்தது. மேலும், இனக்கொலையுடன், ஒரு பய உளவியலை எஞ்சிய தமிழ்மக்கள் மனதில் பதிய வைத்து – அரசியல் ரீதியாகப் பணியவைக்கும் நோக்கமும் அந்தச் செயற்பாட்டில் உண்டு.

| யாழ். குடாநாடு காணாமலபோனோர் : வயதுவாரியாக | |
|---|---|
| வயது | எண்ணிக்கை |
| 25 வயதிற்கு உட்பட்டவர்கள் | 486 |
| 26 - 30 வயதிற்கு உட்பட்டவர்கள் | 149 |
| 31 - 40 வயதிற்கு உட்பட்டவர்கள் | 97 |
| 40 வயதிற்கு மேற்பட்டோர் | 29 |
| மொத்த எண்ணிக்கை | 761 |

இப்போது, யாழ்குடாநாடும் காணாமல் போவோர் பூமியாகிவிட்டது. குடாநாடு ஆக்கிரமிக்கப்பட்டு – கடந்த ஒன்றரை வருடத்தில் மட்டும், காணாமல் போனோரில் 761 பேரினது பூரணவிபரம் பதியப்பட்டுள்ளது. இராணுவக் கெடுபிடிகளுக்குள்ளே – எவ்வளவோ ஆபத்திற்கும் மத்தியில் 761 பேரினது பூரண விபரம் பதியப்பட்டது அரியசெயல்தான். எனினும், வெளித்தெரியாமல் பலநூறுபேர் பதியப்படாது இருக்க சாத்தியங்கள் உண்டு.

குடாநாட்டில் காணாமல் போனோர் கொல்லப்பட்டுவிட்டனர் என்று சர்வதேச மன்னிப்புச் சபை தீர்ப்புக் கூறியுள்ளது. கொல்லப்பட்டோரின் உடல்களை புதைத்தும் – மறைத்தும் – உலங்குவானூர்தி மூலம் கடலில் வீசி எறிந்தும் கொலைத்தடையங்களை – சிங்களப்படை – அழித்துள்ளது. கடலில் வீசப்பட்ட சடலங்களில் ஒன்பது உடலங்கள் சிதைந்த நிலையில் சுண்டிக்குளம் கடற்கரையில் (முல்லைத்தீவு கடற்பரப்பு) ஒதுங்கியிருந்தது பழைய செய்தி. சில அனாமதேயப் புதைகுழிகளும் – குடாநாட்டில் – மக்களால் கண்டுபிடிக்கப்பட்டு அம்பலப்படுத்தப்பட்டிருந்ததும் அனைவரும் அறிந்த செய்தி. தென்தமிழீழத்தில் காணாமல் போனதொகையைவிட கூடுதலானோரை, குடாநாட்டில் காணாமல் போகச் செய்விக்கும் ஆசையுடன் அரசபடைகள் இருந்திருக்கும். ஆனால், மக்களை வெளியேற்றிவிட்டு – வலிகாமத்தில் – சமரை நடாத்திய புலிகள் இயக்கத்தின் முன்னெச்சரிக்கை நடவடிக்கை, மக்கள் அழிவை –காணாமல் போவோர் தொகையைப் பெரிதும் குறைத்துள்ளது. இல்லையென்றால், போரைக்காரணம் காட்டியும் – புலியைப் பிடித்தல் என்ற போர்வையிலும் பல்லாயிரக் கணக்கான தமிழர்களை அரசபடைகள் கொன்றொழித்திருக்கும். அத்துடன் குடாநாட்டு நிலைமை தொடர்பாக உலகநாடுகள் மட்டத்திலும் – மனித உரிமை அமைப்புகள் ஆகியனவும் அதிக அக்கறை காட்டியதால் தமது கொலைவெறியை அரசபடைகள் அடக்கி வாசிக்க வேண்டி வந்துவிட்டது. அப்படியிருந்தும் கடந்த ஒன்றரை வருடத்தில் 761 பேர் காணாமல் போனோராக பதியப்பட்டிருப்பது கவனத்தில் எடுக்க வேண்டிய முக்கிய விடயமாகும்.

காணால்போனோரை கோட்ட ரீதியாகப் பிரித்துப் பார்க்கும்போது வலிகாமப் பகுதியில் இருந்தும் தென்மராட்சிப் பகுதியில் இருந்தும் அதிகளவிலானோர் காணாமல் போயுள்ளனர். காணாமல் போனோரை வயது ரீதியாக வகுத்துப் பார்க்கும்போது, 30 வயதுக்கு உட்பட்டவர்களே சிங்களப் படையின் பிரதான இலக்காக இருந்துள்ளது தெரிகின்றது. அதாவது போராட்ட சக்தியை சிங்கள பேரினவாதம் குறிவைத்துள்ளது.

| கிளிநொச்சி மாவட்டம் காணாமலபோனோர் : வயதுவாரியாக | |
|---|---|
| வயது | எண்ணிக்கை |
| 25 வயதிற்கு உட்பட்டவர்கள் | 20 |
| 26 - 30 வயதிற்கு உட்பட்டவர்கள் | 09 |
| 31 - 40 வயதிற்கு உட்பட்டவர்கள் | 21 |
| 40 வயதிற்கு மேற்பட்டோர் | 23 |
| மொத்த எண்ணிக்கை | 73 |
| *1996 யூலையிலிருந்து 1997 மே வரை* | |

இதேவேளை, 'சத்ஜய' இராணுவ நடவடிக்கைக்குப் பின்னர் – கிளிநொச்சி மாவட்டத்தில் – 1996 யூலை மாதத்தில் இருந்து 1997 மே மாதம் வரை 73 பேர் காணாமல் போயுள்ளதாகப் பதியப்பட்டுள்ளது. தத்தமது வீடுகளைப் பார்க்கச் சென்றோர் மற்றும் குடும்பத்தின் உணவுத் தேவையை பூர்த்திசெய்ய எதையாவது எடுத்துவர முயன்று – இராணுவத்திடம் சிக்கியோருமே பெரும்பாலும் இங்கே காணாமல் போயுள்ளனர். இத்தகைய வேலைகளுக்காக, பொதுவாக குடும்பத் தலைவர்கள் அல்லது நடுவயதைத் தாண்டியோரே செல்வது வழமை. இராணுவத்திடம் பிடிபட்டாலும் கொலை செய்யாது விட்டுவிடுவார்கள் என்ற நப்பாசைதான் அதற்குக் காரணம். இதனாலேயே கிளிநொச்சி மாவட்டத்தில் காணாமல் போனோரில் பெரும்பாலானோர் 30 வயதிற்கும் மேற்பட்டவர்களாக உள்ளதைக் காணலாம்.

வன்முறை அரசியலின் துயர விளைவுகளைச் சோக உணர்வு ததும்ப எடுத்துவிளக்கி – வாக்குக்கேட்டு – பதவிக்கு வந்த சந்திரிகா அம்மையார், இப்போது தமிழரின் துன்பியல் கதைகளுக்குக் களம் அமைத்து, தமிழர் நிலத்தை கொலைக்களமாக்கி வருகின்றார். காணாமல் போனோரின் இரத்த உறவுகள் எத்தனையோ கவன ஈர்ப்பு நடவடிக்கைகளை நடாத்திவிட்டன. ஆனால், சந்திரிகா அரசாங்கமோ காணாமல் போய்விட்டனர் என்பதையே மறுக்கின்றது.

சிங்களப் பேரினவாதத்திற்கு முண்டு கொடுக்கும் தமிழ்க்குழுக்கள், காணாமல் போனோரை தங்களது சுயநல அரசியல் தம்பட்டத்திற்குப் பயன்படுத்துகின்றன. சந்திரிகா அரசாங்கமும், உள் நோக்கத்துடன், தமிழ்க்குழுக்களை உற்சாகப்படுத்துகின்றது.

தமிழரைக் கொல்வதற்கு தனது படையினரைப் பயன்படுத்திக்கொண்டு – கொலைகளைக் கண்டிப்பதற்கு தமிழ்க் குழுக்களையும் அனுமதித்துக்கொண்டு – சந்திரிகா அரசாங்கம் தனது பேரினவாத நோக்கங்களை நிறைவேற்ற முயல்கின்றது. அதாவது, தமிழ் இன அழிப்பும் நடக்கின்றது – ஜனநாயக ஆட்சி என்ற பெயரும் உலக அரங்கில் கிடைக்கின்றது. அத்துடன், தனது அடிவருடிகளான தமிழ்க் குழுக்களை, தமிழ் மக்களில் அக்கறைகொண்ட தமிழரின் அரசியல் தலைமை என்று முத்திரை குத்துவிக்கவும் சந்திரிகா அரசாங்கம் முயல்கின்றது.

இதேபோன்றுதான், களுத்துறைச் சிறைப்படுகொலையை மறைமுகமாக அங்கீகரித்துக்கொண்டு அதேவேளை, அங்குள்ள தமிழ்க்கைதிகளைப் பார்த்துப்பேச தமிழ்க்குழுக்களின் தலைவர்களுக்கு அனுமதியும் வழங்கி, சம்பவத்திற்கு உடன் நடவடிக்கை எடுத்ததுபோல அவர்களைக் கொண்டே உலகிற்கு சொல்லவைத்துவிடும் தந்திரத்தை சந்திரிகா அரசாங்கம் கடைப்பிடிக்கின்றது.

83 யூலை வெலிக்கடைப் படுகொலை நடந்தபோது உலக சமூகம், ஜே. ஆர். அரசாங்கத்தை அதற்காகக் கண்டித்திருந்தது. ஆனால், களுத்துறை சிறைப்படுகொலைக்கு அல்லது குடாநாட்டில் காணாமல் போனோர் தொடர்பாகவோ சந்திரிகா அரசாங்கத்தை உலக சமூகம் வன்மையாகக் கண்டிக்கவில்லை.

ஏனென்றால், ஜே. ஆரின் வெளிப்படையான இனவாத அணுகுமுறைகள் – அரசாங்கத்தின் அனுசரணையுடன்தான் அப்படுகொலைகள் நடந்தன என்று காட்டிக்கொடுத்தன. ஆனால், சந்திரிகா அம்மையாரின் அரசியல் சித்து விளையாட்டுக்களும் – தமிழ்குழுக்கள் மற்றும் உதிரித் தமிழர்கள் சிலரினதும் ஒருமித்த ஆதரவும் – அம்மையாரின் அரசாங்கத்தை – இனவெறிக் குற்றச்சாட்டுகளில் இருந்து பாதுகாக்க உதவுகின்றன.

ஆயினும் தனது பேரினவாத முகத்தை, அம்மையார் நீண்ட நாட்களுக்கு – உலகிற்கு – மறைக்க முடியாது. களுத்துறை பூட்டிய சிறைக்குள் நடந்த தமிழர்வதை மற்றும் குடாநாடு திறந்தவெளிச் சிறையில் காணாமல் நடக்கும் படுகொலைகள் – சந்திரிகாவின் கொடூர ஆட்சியை உலகிற்குப் புலப்படுத்தியபடி உள்ளன. ✳

www.tamilarangam.net



# படைகளே தமிழர்களின் கொலைகளுக்கு மூலகாரணி படைகள் விலக்கப்பட்டால் மட்டுமே தமிழர்கள் அமைதியாக பாதுகாப்பாக வாழ முடியும்

சிறீலங்காவின் படைகளே தமிழர்களின் இனக்கொலைகளுக்கு மூலகாரணியாக உள்ளன. இதனால் சிறீலங்காப் படைகள் தமது பகுதிகளில் இருந்து அகற்றப்பட்டாலே தம்மால் பாதுகாப்பான அமைதியுடன் வாழ முடியுமென தமிழ் மக்கள் உறுதியும் இறுதியுமான கருத்தாக வெளியிட்டு வருகின்றனர்.

கிரிசாந்தி வழக்கு விசாரணை கொழும்பில் நடைபெறுவது அனைவரும் அறிந்ததே. இதில் அளிக்கப்பட்டிருந்த வாக்குமூலத்தில் இராணுவ மேலதிகாரிகளின் உத்தரவின் பேரிலேயே தாம் கிரிசாந்தியின் தாய் ராசம்மாவையும் சகோதரன் பிரணவனையும், அயலவரான கிருபாவையும் ஒழித்துக் கட்டியதாகவும் இவர்களது கழுத்தில் கயிற்றால் இறுக்கியே இவர்களைக் கொன்றழித்ததாகவும் கூறியுள்ளனர். மேலும் இவர்கள் கிரிசாந்தியை கொலை செய்து எங்கே வைத்துள்ளனர் என விசாரிக்கவே தாம் இராணுவ முகாமுக்கு வந்ததாகவும் கிரிசாந்தி பற்றி தமக்கொன்றும் தெரியாது என விரட்டி விட்டதாகவும் கூறியுள்ளனர். பின்னர் இவர்கள் மீளவும் இராணுவ முகாமுக்கு வந்து கிரிசாந்தி பற்றிய தகவல் தெரிவிக்காவிட்டால் தாம் அங்கிருந்து நகரப் போவதில்லை எனக் கூறியதும் இவர்களைத் தாம் கைது செய்து அடைத்ததாகக் கூறப்பட்டுள்ளது.

கிரிசாந்தி மீது பாலியல் வன்முறை பிரயோகிக்கப்பட்டதுமே அவர் மயக்கம் அடைந்துவிட்டார் எனவும், ஆயினும் தொடர்ந்தும் மற்றவர்கள் மிருகத்தனமாக பாலியல் வன்முறையினைத் தொடர்ந்தனர் எனவும் அதன் பின்னர் அவரையும் கழுத்தில் கயிற்றால் இறுக்கி கொலை புரிந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

இந்த ஒரு வாக்குமூலமே சிறீலங்காப் படைகளின் ஒழுக்கம், கட்டுப்பாடு எப்படியான காடைத்தனமானது என்பதையும் சிறீலங்கா படையினரின் இனக்கொலைகள், படை மேலதிகாரிகளால் நெறிப்படுத்தப்படுகின்றன என்பதையும் உலகுக்குத் தெளிவாக்கியுள்ளது.

இந்த சிறீலங்காப் படைகளின் தமிழ் மக்கள் மீதான இனக்கொலை வெறி உணர்ச்சிவசத்தால் அல்ல திட்டமிட்ட முறையில் இனஇம்சை செய்யும் நோக்கிலேயே கிரிசாந்தியை பாலியல் வன்முறைப்படுத்தி இனக்கொலை புரிந்துள்ளது என்பது சந்தேகத்துக்கு இடமின்றி வெளியாகியுள்ளது.

இந்த இனக்கொலை வெறிப் போக்கு அன்று முதல் இன்று தம்பலகாமம் மட்டக்களப்பு வரை சிறீலங்காப் படைகளின் ஒரு உற்சாக நடவடிக்கையாகத் தொடர்கிறது என்பதற்கு பலபல உதாரணங்கள் உண்டு.

எனவே சிறீலங்கா படைகள் வெளியேற்றப்பட்டால் மட்டுமே தமிழர்களின் உயிருக்கும் உடலுக்கும் ஊறு விளைவது தடுக்கப்படலாம் என சர்வதேச தமிழர்கள் கருதுகின்றனர்.

அது மட்டுமல்ல, வடக்குக்கான புனர்நிர்மாண புனர்வாழ்வு அதிகார சபையும், தெல்லிப்பளை முதல் காங்கேசன்துறை வரை தமிழ் மக்கள் தமது வீடுகளில் சென்று மீளக்குடியமர்வதற்கு படைகள் தடையாக இருப்பதை ஏற்றுக் கொண்டுள்ளது. இளவாலை வசந்தபுரத்தில் சென்று குடியமருமாறு கேட்கப்பட்ட மக்கள் இராணுவத்தின் மத்தியில் சென்று குடியமர அச்சப்படுகின்றனர். எனவே தமிழர்களின் உயிருக்கு உடலுக்கு மட்டுமல்ல, அவர்களின் புனர்வாழ்வுக்கும் புனரமைப்புக்கும் கூட சிறீலங்காப் படைகள் வெளியேற்றப்பட வேண்டியது அவசியமாக உள்ளது.

தம்பலகாமம் இனக்கொலைகள் தொடர்பாக தம்பலகாமம் மக்கள் நடாத்திய பேரணியில் மக்களின் பேச்சாளர் புண்ணியமூர்த்தி அவர்களும் பொக்குறுனி, தம்பலகாமம், சிப்பித்திடல் சிறீலங்கா காவல்துறை முகாம்கள் மூடப்பட்டாலே அங்கு அமைதி திரும்பும் எனக் கூறியுள்ளார்.

ஆகவே, தமிழ்ப் பகுதிகளில் இருந்து படைகள் உடனடியாக விலக்கப் பட்டாலே அங்கு தமிழ் மக்கள் உயிர் பிழைப்பார்கள் என்ற உண்மை உலகுக்கு தெளிவாக வெளிப்படுத்தப் படுகிறது. இதனை பலமாக எடுத்துக்கூறி உலகின் மனச்சாட்சியை விழிக்க வைக்க வேண்டிய கடமை, சர்வதேச புலம்பெயர் தமிழர்களிலேயே தங்கியுள்ளது.

குரல் எழுப்பும்படி உலகப் புலம்பெயர் தமிழர்கள் ஒவ்வொருவரும் வற்புறுத்தக் கடமைப்பட்டுள்ளனர். ✳

## தமிழ் மாணவரின் உயர்படிப்புக்கு .........

எடுத்துக் கொண்டால் அதற்கான வெட்டுப்புள்ளி யாழ்ப்பாணத்திற்கு 275 ஆகும். இது கொழும்புடன் ஒப்பிடும்போது குறைவு போன்ற மாயையே ஏற்படும். ஆனால் உண்மை அதுவல்ல.

ஏனெனில் 95–96 கல்வியாண்டில் மருத்துவத்திற்கு யாழ். மாவட்டத்தில் இருந்து 65 மாணவர்கள் தெரிவானார்கள். ஆனால் தற்போதோ 27 மாணவர்கள் மட்டுமே இக் கல்வியாண்டில் யாழ்ப்பாணத்தில் இருந்து தெரிவாகியுள்ளனர். அதாவது, கடந்த வருடத்திலும் பார்க்க சரி அரைவாசியிலும் குறைவாகும்.

இதற்கான காரணமாகத் திறமை அடிப்படையில் மாணவர்கள் தெரிவானது குறைவு என்ற ஹொண்டிச்சாட்டைக் கூறுகிறார்கள்.

இம்முறை யாழ். மாணவர்கள் பாதிக்கப்பட்டமைக்கான காரணத்தை யாவரும் அறிவார்கள். ஏனெனில் இவ் வெட்டுப்புள்ளிக்குரிய 96ஆம் ஆண்டு பரீட்சை எழுதிய மாணவர்கள்தான் 'ரிவிரச–2 இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்து பெரும் துன்பம் அடைந்தவர்கள். 8 மாதங்களுக்கு மேலாக படிப்போ, உணவோ, வீடோ, பிற அடிப்படை வசதிகளோ இன்றி அலைந்து திரிந்தவர்கள். படிப்பதற்கு கொப்பிகளோ, விளக்கெரிக்க மண்ணெண்ணெய்யோ இன்றி பெரும் துன்பம் அடைந்தவர்கள். இன்னும் பலர் தொடர்ந்து வன்னியில் கஸ்ரப்பட்டு வருகிறார்கள்.

ஆகவே, இம்முறை (96–செப்) பரீட்சை எழுதியவர்கள்தான் முதன்முதலில் மீளக்குடியமர்தலின் பின்னர் பரீட்சை எழுதியவர்கள். எனவே இவர்களையும் ஏனையவர்களைப் போல் நோக்காமல் மனிதாபிமான ரீதியில் நோக்க வேண்டும்.

அத்தோடு யாழ். மாவட்டத்தில் மருத்துவர்களின் தேவையை அனைவரும் உணர்வார்கள். வடபகுதி மருத்துவர் பற்றாக்குறையை நீக்க வெளிநாட்டு மற்றும் தென்னிலங்கை மருத்துவர்களை அழைத்தும் அவர்களால் தேவையின் ஒரு சிறு பகுதியைத்தானும் ஈடுசெய்ய முடியவில்லை.

மேலும், யாழ்ப்பாணத்தில் இருந்து எந்தவொரு சந்தர்ப்பத்திலும் 45இற்கு குறைவான மருத்துவ மாணவர்கள் தெரிவானது இல்லை. ஆகவே, இம்முறை யாழ். மாவட்ட மருத்துவபீட வெட்டுப்புள்ளியைக் குறைக்க வேண்டும்.

மேலும் இது தொடர்பாக பிரபல கல்விமானும் கொழும்பு பல்கலைக் கழக கல்வித்துறைப் பேராசிரியருமான சந்திரசேகரம் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

"வடபகுதியில் இன்று ஏற்பட்டுள்ள அமைதியின்மை போர் சூழ்நிலை காரணமாக கல்வி கற்கும் வசதிகள் மிகக்குறைந்து, பல்கலைக் கழகங்களில் அனுமதி பெறும் மாணவர் தொகையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டு வருவதை எம்மால் அவதானிக்க முடிகிறது. இதனால் இந்த மாவட்டத்தைப் பின்தங்கிய மாவட்டங்களில் ஒன்றாகச் சேர்க்க வேண்டிய நிர்ப்பந்தம் இன்று ஏற்பட்டுள்ளது" எனக் கூறியுள்ளார்.

பல்கலைக் கழக அனுமதியில் கடந்த காலங்களில் வகுக்கப்பட்ட அனுமதிக் கொள்கை யாழ். மாவட்டத்தில் இன்றைய சூழ்நிலைக்கு முற்றிலும் பொருத்த மற்றதாகவே இருக்கின்றது. இன்றைய பல்கலைக் கழக அனுமதிக் கொள்கைப்படி திறமைச் சித்திக்கு 40 வீதமும் மாவட்ட அடிப்படையில் 55 வீதமும் பின் தங்கிய மாவட்டங்களுக்கு 5 வீதமும் என்பதே நடைமுறையில் இருக்கிறது.

மாவட்ட ரீதியான மாணவர் அனுமதி, மாவட்டத்திலுள்ள சனத்தொகையைக் கொண்டே தீர்மானிக்கப்படுகிறது. நாடு தழுவிய ரீதியில் பார்க்குமிடத்து,

1991இல் 1,200 தமிழ் மாணவர்கள் அனுமதி பெற்றவிடத்து 1993இல் 700 பேர் மட்டுமே அனுமதி பெற்றுள்ளனர். இதே காலப் பகுதியில் மருத்துவத்துறைக்கு 135 தமிழ் மாணவர்கள் அனுமதி பெற்றவிடத்து 1993இல் 73 மாணவர்கள் மட்டுமே அனுமதி பெற்றுள்ளனர். பொறியியல் துறையில் தமிழ் மாணவர் அனுமதி 1991இல் 140ஆக இருந்தது. 1993இல் 104ஆகக் குறைந்துள்ளது. இவ்வாறான வீழ்ச்சிகளை சகல துறைகளிலும் காணமுடிகிறது. கலைத்துறையில் 1991இல் 290 பேர் அனுமதி பெற்றுள்ள அதேவேளை, 1993இல் இது 230 ஆகக் குறைந்துள்ளது. வர்த்தகத் துறையில் 91இல் 180 பேர் அனுமதி பெற்ற அதேநேரம் 93இல் 80 பேர் மட்டும் அனுமதி பெற்றுள்ளனர்.

பல்கலைக் கழகங்களில் கலைத்துறை முதல் மருத்துவத்துறை வரையிலான ஒட்டுமொத்தமான இவ் வீழ்ச்சிக்குக் காரணம், இதுவரை காலமும் நாடளாவிய ரீதியில் இத்துறைகளில் தமிழ் மாணவர்களுக்குரிய இடத்தை யாழ். மாணவர்களே நிரப்பி வந்துள்ளனர்.

ஆனால், யாழ்ப்பாணத்தில் இன்றுள்ள சூழ்நிலை காரணமாக இதுவரை அவர்கள் பெற்றிருந்த இடங்களை நிரப்ப முடியாமல் இருக்கிறது. இதுவே நாடளாவிய ரீதியில் தமிழ் மாணவர் அனுமதியில் அண்மைக் காலங்களில் ஏற்பட்டு வருகின்ற வேகமான வீழ்ச்சிக்கான உண்மையான காரணமாகும்.

இப்பொழுது மாவட்டங்களுக்குரிய வெட்டுப்புள்ளிகளை வெளியிட்டுள்ளார்கள். இதன்படி இவ்வாண்டில் 12,500 மாணவர்கள் பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிக்கப்படவுள்ளனர். எனது நோக்கில் இதில் ஆகக் குறைந்தது 2,200 பேராவது தமிழ் மாணவர்களாக இருக்க வேண்டும். கடந்த கால வீழ்ச்சியின் அடிப்படையில் பார்க்கும்போது இது சாத்தியமாகுமோ என்பது சந்தேகம்தான் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஆயினும் பின்தங்கிய மாவட்டமாகப் பிரகடனம் செய்யப்பட்டாலோ அல்லது வேறெந்த மாற்றங்கள் செய்யப்பட்டாலோ தமிழ் மாணவர்கள் அடையும் நன்மையினைவிட, தமிழ் மாணவர்களின் உளவியலுக்கு உயிருக்கு அச்சமாக உள்ள சிறீலங்காப் படைகள் விலகினாலேயே யாழ். மாவட்டத்தில் கல்வி புத்துயிர் பெறும் எனச் சமீபத்தில் யாழ். நகருக்குச் சென்று வந்த பெரியவர் ஒருவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

பாடசாலைக்கு பிள்ளைகளை அனுப்பி விட்டு, பிள்ளை ஒழுங்காக வீடு திரும்ப வேண்டுமெனத் துடிக்கும் பெற்றோர்கள், இந்நிலை இருக்கும் வரை பல்கலைக் கழக அனுமதிக்கு மாணவர்கள் கடும்சிரமங்களையே அனுபவிப்பர் எனக் கருதுகின்றனர். ஆதலால், சிறிலங்காப் படை விலகலே தமிழ் மாணவர் கல்விக்கு உடன் தேவை என்பதை ஐ.நா. கல்வி அமைப்பான யுனெஸ்கோவிடமும் சர்வதேச அரசுகள், அமைப்புகளிடமும் உலகத் தமிழர்கள் வற்புறுத்த வேண்டும்.

இதனையே தாயகத்தில் உள்ள தமிழ் மக்களும் எதிர்பார்க்கின்றனர். ✳

www.tamilarangam.net



# 1998 தீர்க்கமான ஆண்டு: யுத்தத்தை நிறுத்தி இலங்கையை உன்னத நாடாக்குவதா? அன்றி யுத்தத்தை நீடித்து அழிவுப் பாதையில் செல்வதா?

"1998ஆம் ஆண்டு ஒரு தீர்க்கமான வருடமாகும். ஒரு உன்னதமான நாடாக முன் செல்வதா அல்லது இன்னும் பல ஆண்டுகளுக்கு மோதல் நிலையிலேயே வாழ்வதா என்பதை இந்த ஆண்டிற்குள் தீர்மானித்தாக வேண்டும்" என்ற ஜனாதிபதி சந்திரிகாவின் கூற்றானது, சிறீலங்காவின் அழிவுப் பாதைக்கு வழிவகுத்த சந்திரிகா அரசாங்கம் அப்பொறுப்பிலிருந்து நழுவிச் செல்ல முற்படுவதையே காட்டுகின்றது. ஏனெனில், யுத்தத்தை நிறுத்தி இலங்கையை ஒரு உன்னத நாடாக்குவதா? அன்றி யுத்தத்தை நீடித்து அழிவுப் பாதையில் செல்வதா? என்பதற்கான தீர்மானத்தை எடுப்பவர் ஜனாதிபதி சந்திரிகாவே. இத்தீர்மானத்தைத் தனி ஒருவராக எடுக்கும் ஆற்றல்கூட நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கு உண்டு. இதைத்தவிர இவ் யுத்தத்தை ஆரம்பித்தவர்கள் இவர்களே. பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு 1994ஆம் ஆண்டு பொதுத் தேர்தலிலும் ஜனாதிபதி தேர்தலிலும், "யுத்தத்தை உடன் நிறுத்தி சமாதானத்தைக் கொண்டு வரவேண்டும்" என்பதற்காகவே மக்கள் வாக்களித்தனர். அத்தோடு, விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கும் மக்கள் அனுமதி வழங்கியிருந்தனர். இந்த நிலையில் யுத்தத்தைத் தொடர்ந்து நடத்தவும் இனப் பிரச்சனைக்கு இராணுவத் தீர்வு மூலம் தீர்வுகாண முற்பட்டவர்களும் அரசாங்கத் தரப்பினர்களே. "சமாதான பேச்சுவார்த்தைகளை விடுதலைப் புலிகளே முறித்துக் கொண்டார்கள். அவர்களே மீண்டும் யுத்தத்தைத் தொடங்கினார்கள்" என்ற அரசாங்கத்தின் கூற்றுக்களை ஏற்றுக் கொள்வதாக இருந்தாலும்கூட, அரசாங்கம் யுத்தத்தைத் தொடர்ந்து நடாத்தவும் தீவிரமாக முனைப்புப் படுத்தவும் முடிவு செய்வது எவ்வாறு? இதற்குரிய அங்கீகாரத்தை மக்கள் அவர்களுக்குக் கொடுத்தார்களா? விடுதலைப் புலிகளுடன் சமாதான ரீதியில் பேச்சுவார்த்தை நடாத்தி இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணப்படவேண்டும் என மக்கள் கொடுத்த ஆணையில் முன்னேற்றம் காணப்படவில்லையெனில், அதனை மக்களிடம் எடுத்துக்கூறி சமாதானத்திற்கான முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொண்டதா? அன்றி யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதா என்ற ஆணையை மக்களிடம் அரசு பெற்றதா? யுத்தத்தினை தொடர எப்பொழுது மக்கள் அரசாங்கத்திற்கு அங்கீகாரம் அளித்தனர்? ஆனால், சந்திரிகா அரசோ மக்கள் கொடுத்த ஆணைக்கேற்ப சமாதானப் பேச்சுவார்த்தையை முழுமனதுடன் நடத்தாததோடு பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட ஆரம்ப முட்டுக்கட்டைகளைத் தொடர்ந்து யுத்தத்தை முழு அளவில் நடத்துவதற்கும் தயாரானது. இராணுவம் தயார்படுத்தப்பட்டதோடு பெருந்தொகை நிதியும் செலவிட்டது. ஆனால், இவை எதற்குமே மக்களின் அங்கீகாரத்தை இவர்கள் மக்களிடம் பெற்றுக்கொள்ளவில்லை. ஆனால், இன்று யுத்தம் சிறீலங்கா அரசிற்கும் அதன் ஆயுதப்படைக்கும் பேரிழப்புக்களை ஏற்படுத்தியுள்ளதோடு, யுத்தத்தில் வெற்றி என்பதும் சாத்தியமான ஒன்றாகத் தெரியவில்லை. ஆனால், அரசியல் சூழ்நிலையால் யுத்தம் குறித்த ஒரு தீர்க்கமான முடிவை அரசாங்கம் எடுக்க வேண்டிய ஒரு காலகட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது. ஏனெனில், பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்கு இது ஒரு தீர்க்கமான ஆண்டாகும். இதற்கு அடுத்துவரும் ஆண்டுகள் தேர்தல் ஆண்டுகளாக அமையப்போவதே இதற்குக் காரணமாகும். இவ்வாண்டில் தொடங்கும் மாகாணசபை தேர்தலில் இருந்து அடுத்த ஆண்டில் பொதுத் தேர்தல், ஜனாதிபதி தேர்தல் என தேர்தல்கள் தொடர்ந்து வரப்போகின்றன. மக்கள் முன் ஆட்சியிலுள்ளோர் இறங்கிவர வேண்டிய காலம் வருகின்றது. ஆகையினால்தான், இவ்வாண்டு யுத்தம் குறித்து தீர்க்கமான ஒரு முடிவை அரசாங்கம் எடுக்கவேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளது. ஆனால், இதற்கான காரணத்தை வெளிப்படுத்த முடியாத அரசாங்கம் போரா, அபிவிருத்தியா என்ற ரீதியில் மக்கள் முன் பிரச்சனையை வைக்க முனைகிறது. இதன் மூலம் இதுவரை தனது விருப்பத்திற்கு ஏற்றவிதத்தில் நடத்திய போரில் மக்களையும் பங்காளியாக்க

> இவ்வாண்டு யுத்தம் குறித்து தீர்க்கமான ஒரு முடிவை அரசாங்கம் எடுக்கவேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளது. ஆனால், இதற்கான காரணத்தை வெளிப்படுத்த முடியாத அரசாங்கம் போரா, அபிவிருத்தியா என்ற ரீதியில் மக்கள் முன் பிரச்சனையை வைக்க முனைகிறது. இதன் மூலம் இதுவரை தனது விருப்பத்திற்கு ஏற்றவிதத்தில் நடத்திய போரில் மக்களையும் பங்காளியாக்க முற்படுகின்றது.

> பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு 1994ஆம் ஆண்டு பொதுத் தேர்தலிலும் ஜனாதிபதி தேர்தலிலும், "யுத்தத்தை உடன் நிறுத்தி சமாதானத்தைக் கொண்டு வரவேண்டும்" என்பதற்காகவே மக்கள் வாக்களித்தனர். அத்தோடு, விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கும் மக்கள் அனுமதி வழங்கியிருந்தனர். இந்த நிலையில் யுத்தத்தைத் தொடர்ந்து நடத்தவும் இனப் பிரச்சனைக்கு இராணுவத் தீர்வு மூலம் தீர்வுகாண முற்பட்டவர்களும் அரசாங்கத் தரப்பினர்களே.

## யேர்மனியில் அமைதிப் போராட்டம்

**13.02.1998** அன்று மாலை 7 மணியளவில் யேர்மனியில் எசன் நகரில் அமைந்துள்ள வொக்ஸ் கோக் ஷலயில், இலங்கைத் தூதராலயம் இலங்கை சுதந்திரம் பெற்ற "50வது வருட பொன்விழாவை ஒட்டி கொண்டாட்டம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. இந்த விழாவுக்கு எசன் நகர மேயர் உட்பட பல பிரமுகர்களை சிறிலங்கா தூதுவராலயம் அழைத்திருந்தது. இந்த விழாவில் இலங்கையின் கடந்த, தற்போதைய, எதிர்கால நிலைமைகளையும் தற்போதைய திட்டமிட்ட எதிர்கால நடவடிக்கைகள் பற்றியும், இலங்கை அமைதி யாகவிருப்பதாகத் தொலைக்காட்சிகள் மூலமும் விளக்கினார்கள். இதை எதிர்த்து எசன் நகர இலங்கைத் தமிழ் மகளிர் மன்றம், கொக்ஸ் கோக் ஷலக்கு முன்பாக அமைதிப்போராட்டம் ஒன்றை நடத்தியது. இப்போராட்டத்தில் ஏறத்தாழ 300 தமிழ் மக்கள் கலந்து கொண்டனர். அதில் பெண்களும் குழந்தைகளும் கூடுதலாகக் கலந்து கொண்டனர். சகலரும் கறுப்புத் துணியினால் வாயைக் கட்டிக் கொண்டு, தமிழீழக் கோரிக்கைகள் தாங்கிய சுலோக அட்டைகளையும், எம் நாட்டில் நிலவும் அநீதிகளை எடுத்துக் காட்டும் சுலோக அட்டைகளையும் தாங்கி நின்றனர். மாலை 04 மணிக்கு ஆரம்பமாகிய இவ் அமைதிப் போராட்டம், மாலை மூ8 மணி வரை நடைபெற்றது.

யேர்மன் பத்திரிகையாளர்களும் சமூகம் அளித்திருந்தனர். அமைதிப் போராட்டம் இறுதிக்கட்டமாக எசன் நகரப் பொலீஸ் மாஅதிபர் உட்பட கடமையில் ஈடுபட்டிருந்த ஏனைய பொலீஸ் காவலர்களும் அமைதிப்போராட்டத்தில் கூடிநின்ற மக்களுக்கு நன்றி கூறினர். பொலீஸ் மாஅதிபர் தனது உரையில், "உங்கள் போராட்டம் அத்தியாவசியமானது, நியாயமானது. உங்கள் போராட்டம் வெற்றி பெற வேண்டும்" என்று வாழ்த்துத் தெரிவித்தார். இலங்கைத் தூதராலயம் விடுத்த அழைப்பை ஏற்று 20 பேருக்கும் குறைவானவர்களே வந்திருந்தனர். உங்கள் அனைவரினதும் திரண்ட ஒற்றுமை உங்களுக்கு வெற்றி அளிக்கும் என்றும் வாழ்த்துத் தெரிவித்தார்.

மாலை 8.15 க்கு ஒன்றுகூடிய மக்கள் அனைவருக்கும் மன்றத் தலைவி நன்றி கூறி கூட்டத்தை முடித்துக்கொண்டார்.

கூட்டம் மிகவும் அமைதியான முறையில் இனிது முடிவு பெற்றது. ✳

## இத்தாலியில் கேணல் கிட்டுவின் 5ஆம் ஆண்டு நினைவுநாள்

மூத்த தளபதி கேணல் கிட்டுவினதும் அவருடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட ஒன்பது போராளிகளினதும் ஐந்தாவது ஆண்டு நினைவுநாள் இத்தாலியில் புலம்பெயர்ந்து வாழும் தமிழீழ மக்களினால் 18-1-1998 இல் றெஜியோ எமிலியா நகரில் நினைவு கூரப்பட்டது. மாலை 5.30 மணியளவில் தமிழீழ தேசிய கீதம் ஒலிக்க, தமிழீழ மக்களினால் கொடிவணக்கம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, ஈகச்சுடரை இத்தாலிப் பணியகப் பிரதிநிதி அவர்கள் ஏற்றிவைக்க, அங்கு கூடியிருந்த 400க்கு மேற்பட்ட மக்களினால் இதுவரை தமிழீழ தேச விடுதலைக்காய் உயர் நீத்த மாவீரர்களுக்கும் மக்களுக்கும் அமைதி வணக்கம் செய்யப்பட்ட பின், கிட்டு அண்ணாவின் நினைவு சுமந்த "வான் வெளியில் வந்த செய்தி" என்ற பாடலுக்கு பொலோனியா நடனக்கலை மாணவிகளால் அபிநயம் செய்து வணக்கம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. "புலியொரு காலமும் பணியாது..." "அழகான அந்தப் பனைமரம்" ஆகிய பாடல்களுக்கு பொலோனியா நாட்டியக்கலை மாணவிகளும், "புலிமாமா புலிமாமா..." "போடா தமிழா", "கரும்புலி மில்லர்" என்ற பாடல்களுக்கு றெஜியோ அன்னை பூபதி தமிழ்ப் பாடசாலை மாணவர்களும் "பொங்கிடும் கடற்கரை ஓரத்திலே...", "மானம் ஒன்றே வாழ் வெனக்கொண்டு...." என்ற பாடல்களுக்கு ஜெனோவா நடனக் கலைஞர்களும் அபிநயம் வழங்க, லிகூறிய தமிழ்ச் சங்கத்தினால் புரட்சிப் பாடல்களுக்கு வீணை இசை வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து எமிலிய றொமானிய தமிழ்ச் சங்கத்தினரால் புரட்சிப் பாடல்களுக்கு வீணை இசை வழங்கப்பட்டது. தொடர்ந்து எமிலிய றொமானிய தமிழ்ச் சங்கத்தினரால் "சுதந்திர தரிசனம்" என்ற நாட்டிய நாடகம் அரங்கேற்றப்பட்டது. யாழ்ப்பாண மக்களின் இன்றைய வாழ்வைப் படம் பிடித்துக் காட்டுவதுபோல் பொலோனியாக் கலைஞர்களினால் "அணையாத தீபங்கள்" என்ற நாடகம் மேடை ஏற்றப்பட்டது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு புலம்பெயர்ந்த மக்கள் செய்ய வேண்டிய கடமைகள் பற்றி தமிழீழ விடுதலைப் புலிகளின் இத்தாலிப் பணியகப் பிரதிநிதி து. மேதா அவர்கள் விளக்கிக் கூறியதைத் தொடர்ந்து, லிகூறியா தமிழ்ச் சங்கத்தினரின் "சிந்திக்கத் தொடங்கிவிட்டோம்" என்ற நாடகம் அங்கு வந்த அனைவரையும் தமிழீழத்தின சமூக வேற்றுமைகளையும் முரண்பாடு களையும நினைவு படுத்தியதுடன், தமிழீழ விடுதலைக்கு ஆற்ற வேண்டிய பணிகளையும் எடுத்துக் கூறியது. இறுதி நிகழ்ச்சியாக "வெற்றி நிச்சயம்" என்ற நாடகத்தை மேடையேற்றி வன்னிக் கள நிலைமையை எமது மக்கள் முன்னிலையில் காண்பித்தனர் நாப்போலி கலைஞர்கள். இந்நிகழ்வை நிறைவு செய்யும் பாடலாக "நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்" என்ற பாடல் இடம் பெற்றது.

*(இந்நிகழ்ச்சியில் நடந்தேறிய கலைநிகழ்வு ஒன்றின் படம் கடைசிப்பக்கத்தில் உண்டு)* ✳

www.tamilarangam.net

# தமிழீழ மக்கள் தொடர்பு சாதனங்களின் கடமை குறித்து, தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் 18.02.98 இல் நடந்த விசேட நிகழ்வில், புலிகளின் குரல் வானொலியில் பணிபுரியும் கலைஞர்கள், எழுத்தாளர்கள் மத்தியில் பேசிய உரையின் முழுவிபரம் :-

இந்த நிகழ்ச்சிக்கு வருகை தந்திருக்கும் எழுத்தாளர்களுக்கும், கலைஞர்களுக்கும் மற்றும் எமது வானொலி சேவையின் வளர்ச்சிக்கு அயராது உழைத்துவரும் அனைவருக்கும் முதலில் எனது அன்பு வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். எமது விடுதலை இயக்கத்தின் முக்கிய மக்கள் தொடர்பு சாதனமாக, உலகத்தொடர்பு ஊடகமாக விளங்கி வரும் புலிகளின் குரல் கடந்த ஏழு ஆண்டுகளுக்கு மேலாக எமது தேசியப் போராட்டத்திற்கு அரும் பணியாற்றி வருகின்றது. தொடர்ச்சியாக நீடித்துவரும் போர்ச் சூழலில் எத்தனையோ நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து, எத்தனையோ இடர்களைச் சந்தித்து எமது போராட்டத்தின் விடுதலைக்குரலாக நாளாந்த ஒலிபரப்புச் சேவையை நடத்திவருவது சாதாரண விடயமல்ல. இதனை ஒரு அபாரமான சாதனை என்றே சொல்லவேண்டும். இந்தச் சாதனையை நிறைவு செய்து வருவதில் உங்கள் அனைவருக்கும் பங்குண்டு என்பதை நான் அறிவேன். போரின் அனர்த்தங்கள் மத்தியில் இடம்பெயர்வு போன்ற இடர்பாடுகள் மத்தியில் துன்பங்களைப் பொருட்படுத்தாது எமது வானொலிச் சேவையோடு இணைந்து நின்று நீங்கள் ஆற்றிவரும் விடுதலைப் பணியை நான் மனமாரப் பாராட்டுகின்றேன். சிங்கள இனவாத அரசு எமக்கு எதிராக ஒரு ஆயுதப் போரை மட்டும் நடத்தவில்லை. ஒரு கருத்துப் போரையும் நடத்தி வருகின்றது. உண்மையை மறைத்து, பொய்களைப் புனைந்து மக்களைக் குழப்பும் நோக்கில் இந்தப் பரப்புரைப் போர் நடத்தப்பட்டு வருகின்றது. சிங்கள தேசத்தின் சகல மக்கள் சாதனங்களும் இந்தப் பரப்புரைப் போரை முன்னெடுப்பதில் மும்முரமாக செயல்பட்டு வருகின்றன என்பதை நீங்கள் அறிவீர்கள்.

தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போருக்கு களங்கம் ஏற்படுத்தி, போராட்டத்தை மழுங்கடிக்கச் செய்வதே இந்த கருத்துப் போரின் கபட நோக்கம். இப்படியான ஒரு சூழலில் எமது தகவல் ஊடகங்களின் பணி முக்கியமாகின்றது. நாம் எமது மக்களுக்கும் உலகத்திற்கும் உண்மையை எடுத்துச் சொல்ல வேண்டும். உண்மை என்ற ஆயுதமேந்தி நாம் பொய்மைக்கு எதிராகப் போராட வேண்டும். பொய்களும் புனைகதைகளும் காலத்தால் அழிந்து போவன. உண்மைதான் என்றும் நிலைத்து நிற்கும். எனவே, எமது மண்ணில் நிலவும் உண்மை நிலையை, யதார்த்த சூழ்நிலையை நாம் துணிவுடனும் நேர்மையுடனும் எடுத்துச் சொல்லத் தயங்கக்கூடாது. இதன் அடிப்படையின் எமது வானொலியான புலிகளின் குரல் எமது போராட்டத்தின் உண்மைக்குரலாக, சத்தியத்தின் முரசாக ஒலிக்க வேண்டும் என்பதே எனது விருப்பம். தமிழரின் தேசியத்தை மறுதலிப்பது, சிங்கள தேசியவாதத்தின் பரப்புரைத் தந்திரோபாயங்களில் முக்கியமானது. தமிழர்கள் சிறுபான்மை இனத்தவர் என்றும், பல்வேறு இனக்குழுக்களில் ஒரு குழு என்றும், தமிழருக்குத் தனித்துவமான தாயகம்



இருக்கவில்லை என்றும், சிங்களம் கருத்துக்களைப் பரப்பி வருகின்றது. எல்லோரும் இலங்கையர் என்றும், எல்லோருக்கும் இலங்கையே தாயகம் என்றும், எல்லோரும் ஒரே மக்கள் என்றும் சிங்கள அரசு மிகவும் நுட்பமான பரப்புரையைச் செய்து வருகின்றது. இப்படியாகப் பிரச்சார இயக்கத்திலும் சரி, அரசு முன் வைத்திருக்கும் தீர்வுப் பொதியிலும் சரி தமிழரின் தேசிய தனித்துவத்தை மறுதலிக்கும் யோசனைகளே முதன்மை பெற்றிருப்பதைக் காணலாம். தமிழ் மக்களின் தாயகப் பற்றையும் தேசிய உணர்வையும் மழுங்கடித்து, தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை நசுக்கிவிடுவதுதான் அரசின் நோக்கம். எனவே, இந்தப் பொய்யான விசமத்தனமான பரப்புரையை முறியடித்து, எமது மக்கள் மத்தியில் தேசிய விழிப்புணர்வையும் விடுதலை உணர்வையும், பேணிவளர்ப்பது எமது மக்கள் தொடர்பு ஊடகங்களின் முக்கியமான பணியாக அமைகிறது. தமிழீழ மக்களாகிய நாம், ஒரு தேசிய இனக்கட்டமைப்பைக் கொண்டவர்கள். பழம்பெரும் மொழியும் பண்பாடும் பாரம்பரியத் தாயகமும் பழமை மிக்க வரலாறும் கொண்ட தனித்துவ தேசமாக நாம் வாழ்ந்து வருகிறோம். இந்தத் தமிழர் தேசத்தையே தமிழீழம் என நாம் அழைக்கின்றோம். இந்தத் தமிழர் தேசத்திற்கு, தன்னாட்சி உரிமையையும் இறைமையையும் வென்றெடுக்கவென்றே நாம் இரத்தம் சிந்திப் போராடி வருகின்றோம். தமிழ் தேசியத்தை ஆதாரமாகக் கொண்ட ஈழத்தமிழரின் போராட்டத்திற்கு எழுத்தாளர்களதும் கலைஞர்களதும் பங்களிப்பு மிகவும் முக்கியமானது. உங்களது கலை, இலக்கியப் படைப்புக்கள் தமிழர்களது தேசிய ஆன்மாவைத் தட்டி எழுப்பி, தமிழீழ தேசிய எழுச்சிக்கு முனைப்பூட்டுவதாக அமைய வேண்டும். ஒழுங்கும் அமைதியும் நிலவும் ஒரு சாதாரணச் சமூகச் சூழலில் நாம் வாழவில்லை. நெருக்கடிகள் மிகுந்த ஒரு போராட்டச் சூழலில் நாம் வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம். இச்சூழலில் வாழும் எமது மக்களின் இன்றைய வாழ்வுநிலை மிகவும் துன்பகரமானது. அவலங்கள் நிறைந்தது. இந்தத் துயரமான வாழ்வை சித்தரிக்க விளையும் கலை, இலக்கியப் படைப்புக்கள் வெறுமனே அவலத்தையும் சோகத்தையும் எடுத்துக்காட்டாமல் இன ஒடுக்குமுறையை எடுத்துக்காட்டி மக்களிடையே விழிப்புணர்வையும் ஒடுக்குமுறைக்கு எதிரான கொதிப்புணர்வையும் தூண்டிவிட வேண்டும்.

தனிமனிதர்களது வாழ்க்கையான சுயநலச் சுவர்களுக்குள் சிறைப்பட்டு கிடக்கின்றது. இந்த சுயந வரம்புகளுக்கு அப்பால், தேசி விடுதலை என்ற பொதுநல வி மியத்தில் மனிதர்களைக் கவர்ந்திழுக்கு எழுத்துக்களே இன்றைய காலத்தி தேவையாக இருக்கின்றது.

இத்தகைய கலை, இலக்கிய படைப்புக்களே தமிழ் தேசி வளத்திற்கும் தேசிய விடுதலை எழுச்சிக்கும் உரமூட்டுவதா அமையும். தேசிய உணர் வெளிக்காட்டும் படைப்பாக்கங்க தமிழீழ மண்ணில் படிப்படியா மேலோங்கி வருவதை இன்று நா காணக்கூடியதாக இருக்கின்றது இந்த போர்க்கால விடுதலை இலக்கியம் மேலும் வளர்ச்சி கண் செழிப்புற வேண்டும். எமது மக்களின் விடுதலைத் தாகம் கலை இலக்கியங்களில் வெளிப்பா காணவேண்டும். இது எழுத்தாள களாகிய உங்களது ஆக் முயற்சியில்தான் தங்கியிருக்கின்றது இதனை ஒரு உன்னதமா விடுதலைப் பணியாகக் கருத்தி கொண்டு, நீங்கள் செயல்ப வேண்டும் என நான் அன்புட வேண்டிக் கொள்கின்றேன். எமது இயக்கத்தின் விடுதலைக் குரலா முழங்கிவரும் புலிகளின் குர வானொலி ஓசை தனது இலட்சிய பணியில் தொடர்ந்தும் வெற்றிநடை போட எனது நல்லாசிகள்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

**போ**ராட்டத்தின் யதார்த்த நிலையை , புறநிலை உண்மைகளை மக்களுக்கு எடுத்துக் கூறுவதுடன், மக்களிடையே தேசிய விழிப்புணர்வையும் விடுதலையுணர்வையும் ஊட்டி வளர்த்து மக்களின் கருத்துலகத்தை கட்டி வளர்ப்பதில் மக்கள் தொடர்பு சாதனங்கள் அரிய சேவை ஆற்ற முடியும். இந்த வழியில் எமது தேசிய பத்திரிகைகளும் எமது வானொலியும் மக்களின் விடுதலைக்குப் பணியாற்றுவது அவசியம்.

எமது எதிரியான சிங்கள அரசு, தனது கட்டுப்பாட்டிலுள்ள மக்கள் தொடர்பு சாதனங்களை எமது போராட்டத்திற்கெதிராக முழுமையாக முடுக்கி விட்டிருக்கிறது: உண்மையைத் திரித்து, பொய்களைப் புனைந்து, மக்களைக் குழப்பி எமது போராட்டத்தை மழுங்கடிக்கும் நோக்கில் ஒரு பிரச்சாரப் போரை நடாத்தி வருகிறது. எதிரியுடன் கைகோர்த்து நின்று தமிழ்த் துரோகக் குழுக்களும் எமக்கு எதிராக மிகவும் கேவலமான விசமப் பிரச்சாரத்தை நடாத்தி வருகின்றன. இந்தச் சூழலில் எமது தேசியப் போராட்டத்தின் ஓசையாக குரல் எழுப்பும் எமது வானொலியின் சேவை முக்கிமாகிறது.

எதிரியின் பொய்மையான கருத்துப் போருக்கு எதிராக, உண்மையின் ஆயுதமாக எமது வானொலியின் குரல் ஒலிக்க வேண்டும். ஒரு சத்திய யுத்தத்தின் போர் முரசாக "புலிகளின் குரல்" ஒலிக்க வேண்டும்.

**~ தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன்**

("புலிகளின் குரல்" ஓராண்டு நிறைவு நாளை முன்னிட்டு 20 - 11 - 91 ல் தலைவர் வழங்கிய வாழ்த்துச் செய்தியிலிருந்து ....)

www.tamilarangam.net

# பதினைந்தாம் நூற்றாண்டில் இழந்த தன்னாட்சி உரிமையை

தமிழரின் தன்னாட்சி உரிமைப் போராட்டத்திற்கு ஒரு படிமுறை வளர்ச்சி உண்டு. ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் அரசியல் உரிமைகளைப் பெற்று வாழப் போராடிய தமிழினத்தை, தன்னாட்சி உரிமைக்காகப் போராடும்படி சிங்கள அரசின் இனவாத செயற்பாடுகள் நிர்ப்பந்தித்தன. ஜனநாயக ரீதியில், அகிம்சை வழியில் தமிழர் நடாத்திய உரிமைப் போராட்டத்தை, வன்முறை வழியில் ஆயுதப் போராட்டப் பாதையில் அரச பயங்கரவாதமே தள்ளிவிட்டது. தமிழரின் தன்னாட்சி உரிமைக்கான ஆயுதப் போராட்டத்திற்குப் புலிகள் இயக்கம் தலைமை கொடுத்தது. இந்த தன்னாட்சி உரிமைப் போராட்டத்தை 1977 பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் தங்கள் வாக்குரிமையால் அங்கீகரித்து ஆதரித்து இருந்தனர். ஈழத்தமிழரின் தன்னாட்சி உரிமையை நிலைநாட்டி விடுவதென்ற இலட்சியத்தில் புலிகள் இயக்கம் அன்றிலிருந்து உறுதியாக இருக்கின்றது. எத்தனையோ சோதனைகள், நெருக்கடிகள் சூழ்ந்த போதும் அந்த அரசியல் இலட்சியத்தில் இருந்து வழுவாது, கொண்ட கொள்கையில் உறுதியாக உள்ளது. தமிழரின் தன்னாட்சி உரிமைப் போராட்டத்தையும் உயர் நிலைக்கு வளர்த்து விட்டுள்ளது.

ஈழத்தமிழரின் தன்னாட்சி உரிமையை நிலைநாட்டி விடுவதென்ற இலட்சியத்தில் புலிகள் இயக்கம் அன்றிலிருந்து உறுதியாக இருக்கின்றது. எத்தனையோ சோதனைகள், நெருக்கடிகள் சூழ்ந்த போதும் அந்த அரசியல் இலட்சியத்தில் இருந்து வழுவாது, கொண்ட கொள்கையில் உறுதியாக உள்ளது. தமிழரின் தன்னாட்சி உரிமைப் போராட்டத்தையும் உயர் நிலைக்கு வளர்த்து விட்டுள்ளது.

ஆயினும், தமிழ் மக்கள் மீது அழிவையும் அவலத்தையும் திணித்து, அவர்களது அரசியல் உறுதிகளை உடைக்க சிங்கள அரசு பலவழிகளிலும் முனைந்துள்ளது. அதன் உச்சக் கட்டமாக ஒரு போரையும் தமிழீழத் தின்மீது தொடுத்துள்ளது. எனினும், அரசின் இன அழிப்புத் திட்டத்தை விளக்கி, அரசியல் விழிப்புணர்வையூட்டி, மக்களையும் அணிதிரட்டி தமிழர்களின் போராட்டத்தை புலிகள் இயக்கம் உயிர்த்துடிப்புடன் வைத்திருக்கின்றது. ஆயுதப் போராட்டத்தை நடாத்திக் கொண்டு தமிழரின் இனப்பிரச்சனையைத் தீர்க்க சிங்கள அரசுடன் அரசியல் பேச்சுக்களிலும் புலிகள் இயக்கம் ஈடுபடுகின்றது. திம்பு மாநாட்டில் இருந்து யாழ்ப்பாணப் பேச்சுக்கள் வரை பங்குகொண்டிருக்கின்றது. ஆனால், அரசியல்தீர்வு என்ற விடயத்தையும் பேச்சுவார்த்தை என்ற நடைமுறையையும் உலக சமூகத்தை ஏமாற்றும் ஒரு தந்திரமாகவே சிங்கள அரசு பயன்படுத்தி வருகின்றது. அதேவேளை, தமிழரின் தன்னாட்சிப் போராட்டத்தை மழுங்கடித்து, தமிழரின் தேசிய அடையாளங்களைச் சிதைக்கும் நாசகார நோக்குடன் சிங்கள அரசு அவற்றைப் பயன்படுத்தி வருகின்றது. சிங்கள அரசின் சதி அரசியலுக்குப் பலியாகாது, வேறு நிர்ப்பந்தங்களுக்கு இடங்கொடாது, தமிழரின் தன்னாட்சிப் போராட்டத்தை தலைவர் பிரபாகரன் தொடர்ந்தும் வழிநடத்திக் கொண்டிருக்கிறார். இதேசமயம், போராடவென்று புறப்பட்ட தமிழ்க் குழுக்களின் தலைமைகள் பேரினவாதத்தின் அடிவருடிகளாக மாறி, தமிழர் போராட்டத்திற்குத் துரோகம் இழைத்துக் கொண்டிருக்கின்றன. தமிழ்க் குழுக்களின் இத்துரோகச் செயற்பாட்டை சந்திரிகா அரசாங்கம் நன்றாகப் பயன்படுத்தி வருகின்றது. அரசியல் ரீதியிலும் இராணுவ ரீதியிலும் அன்றிலிருந்து இன்றுவரை தமிழர் போராட்டத்திற்கு இத்தமிழ்க் குழுக்கள் இழைத்துவரும் நாசங்கள் ஏராளம்.



சுவிஸ் ஆர்ப்பாட்டப் பேரணியில் . . . . .

# இருபத்தோராம் நூற்றாண்டில் மீண்டும் பெறுவோம்


வன்னி (தமிழீழம்) ஆர்ப்பாட்டப் பேரணியில் . . . . .

சந்திரிகா அரசு பதவியேற்றதும் தமிழர்களின் இனப்பிரச்சனைக்கு தீர்வு கிடைக்கப் போகிறது என்று, உலகம் நம்பவைக்கப்பட்டது. சந்திரிகாவின் சாதுரியமான பேரினவாத நிலைப்பாட்டால் புலிகளின் அரசியல் உறுதியை வெற்றிகொள்ள முடியவில்லை. எனவே, தமிழ் மக்கள் வேறு, புலிகள் வேறு என்று வகைப்படுத்திக் காட்டிய அம்மையார், தமிழர்களுக்குத் தீர்வுத் திட்டம் புலிகளுக்குப் போர்த்திட்டம் என்று கூறி மாபெரும் படை நகர்வை தமிழர் நிலப்பரப்பில் அரங்கேற்றினார். இன அழிப்புக்கான போர், சமாதானத்துக்கான போர் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தமிழர் நிலத்தை ஆக்கிரமிப்பது என்ற பேரினவாதத்தின் இலட்சியம், தமிழ் மக்களை விடுவிப்பது என்று வார்த்தை மாற்றம் செய்யப்பட்டது.

சிங்களப் படையெடுப்பை புலிகள் இயக்கம் தந்திரமாகவும் வீரமாகவும் எதிர்கொண்டது. அம்மையாரின் வார்த்தைஜாலங்கள் நீண்ட நாட்களுக்கு நிலைக்கவில்லை. அம்மையாரின் தீர்வுப் பொதியும் செத்துக்கொண்டிருக்கிறது. அவரின் தேர்தல் முயற்சியும் மக்களது கண்டனத்துக்கு உள்ளாகியுள்ளது. அத்துடன், அவரது இராணுவத் திமிரையும் புலிகள் இயக்கம் உடைத்தெறிந்து வருகின்றது. இப்போது அம்மையார் அரசியல் ரீதியாக அம்மணப்பட்டு நிற்கின்றார். இராணுவ ரீதியாக நெருக்கடிக்குள்ளாகியுள்ளார். சிங்கள பௌத்த பேரினவாதத்தின் உண்மை முகத்தை அதன் விரோதகுணத்தைப் புலிகள் இயக்கமே கண்டறிந்துள்ளது என்றும், புலிகளின் அரசியல் தீர்க்கதரிசனமே பலித்து வருகின்றது என்றும் இப்போது பரவலாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. இதனால், புலிகளின் அரசியல் நிலைப்பாடே சரியானது என்றும் அங்கீகரிக்கப்படுகின்றது. புலிகள் இயக்கத்தை விமர்சித்தவர்கள் கூட, இந்த உண்மையை இப்போது ஏற்று வருகின்றனர்.

இதன் காரணமாக முன் எப்போதையையும் விட, இப்போது புலிகள் இயக்கத்தின் பின்னால் தமிழ் மக்கள் அணி திரள்கின்றனர். குறிப்பாக உலகெங்கும் வாழும் ஈழத்தமிழர்கள் போராட்டத்திற்கு வழங்கிவரும் ஆதரவு பெருமளவில் அதிகரித்து வருகின்றது. இதனால், அந்தந்த நாட்டு அரசுகளிலும் அதன் மக்களிடமும் கருத்துமாற்றம் ஏற்பட வாய்ப்புக்கள் பிறந்துள்ளது. இந்த மாற்றமானது, தமிழர்களின் போராட்டதிற்கு ஆதரவான ஒரு சர்வதேச சூழலை ஏற்படுத்தும் வகையில் வளர்ச்சி பெறுகின்றது. புதிய வருடம் தமிழர்களின் தன்னாட்சி உரிமைப் போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் ஆண்டாகவே திகழப் போகின்றது. இராணுவ ரீதியாக என்னதான் முயற்சி எடுத்தாலும் புலிகள் இயக்கத்தை வெற்றி கொள்ள முடியாது என்பதையும், அரசியல் ரீதியாக எத்தகைய கூத்துக்களை நடத்தினாலும் தமிழ் மக்களை ஏமாற்ற முடியாது என்பதையும் சிங்கள அரசு இவ்வாண்டில் ஏற்றுக்கொள்ளதான் போகின்றது. புதிய நூற்றாண்டின் ஆரம்பமானது, ஈழத் தமிழர்களின் விடிவிற்கான நுழைவாயிலாகும். 15ம் நூற்றாண்டில் எம் முன்னோர் இழந்த தன்னாட்சி உரிமையை, 21ம் நூற்றாண்டில் மீண்டும் நாம் பெறுவோம் என்று தமிழ் மக்களாகிய நாங்கள் உறுதியெடுப்போம். ஈழத் தமிழர் களுக்குத்தான் வெற்றி நிச்சயம். சிங்களப் பேரினவாதிகளுக்கு அல்ல. ✳

இராணுவ ரீதியாக என்னதான் முயற்சி எடுத்தாலும் புலிகள் இயக்கத்தை வெற்றி கொள்ள முடியாது என்பதையும், அரசியல் ரீதியாக எத்தகைய கூத்துக்களை நடத்தினாலும் தமிழ்மக்களை ஏமாற்ற முடியாது என்பதையும் சிங்கள அரசு இவ்வாண்டில் ஏற்றுக்கொள்ளதான் போகின்றது. புதிய நூற்றாண்டின் ஆரம்பமானது, ஈழத்தமிழர்களின் விடிவிற்கான நுழைவாயிலாகும். 15ம் நூற்றாண்டில் எம் முன்னோர் இழந்த தன்னாட்சி உரிமையை, 21ம் நூற்றாண்டில் மீண்டும் நாம் பெறுவோம்



லண்டன் எழுச்சிப் பேரணியில் . . . .

www.tamilarangam.net



# தாயகம் நோக்கிய பயணம்

## முதலாம் பாகம்

### அத்தியாயம் இருபது

(தொடர்ச்சி)

நீ என்ன அறிந்திருக்கிறாய் என்று எனக்குத் தெரியாது. ஆனால் அதிகமாக அவள் தகப்பனார் உயிரோடிருக்கலாம். அப்படியில்லாவிட்டால் கூட டென் மார்க்கில் அவளுக்கு ஒரு குடும்பம் இருக்கிறது. மூன்றாவதாக மற்றக் குழந்தைகளைப் போலவே இவளும் ஒரு விடயத்தில் நஞ்சூட்டப் பட்டிருக்கிறாள். அவளுக்குத் தேவை பலஸ்தீனம்."

கிற்றியின் முகம் சுருங்கிப் போயிற்று. கண்களில் துக்கத்தின் சாயை படர்ந்தது. அதனால் மார்க் மிகவும் மனம் வருந்தினான்.

"நான் அவளை எக்ஸோடசில் போகவிடாதது பிழைதான். நான் என்னுடன் வரவேண்டும் என நினைக்கிறேன். அவன் கிற்றிக்குச் சொன்னான்.

"என்ன அது?" மார்க்கும் கிற்றியும் ஒரே குரலில் கேட்டனர்.

எனக்கு என்னவென்று சரியாகத் தெரியவில்லை. லன்டவ் பையனைப் பற்றித்தான். அவன்தான் எங்கள் போலி ஆவணங்களைத் தயாரிப்பவன். அவன் இப்போது பிள்ளைகளை வெளியே கொண்டு போகும் ஆவணங்களில் வேலை செய்து கொண்டிருக்கிறான். அவன் என்னோடு பேசும்வரை மேற்கொண்டு வேலை செய்யப் போவதில்லை என்று சொல்கிறானாம்.

"அப்போ நான் எதற்கு?"

"உன்னுடைய சினேகிதியான அந்த டென்மார்க்கியச் சிறுமியான கரேன், அவள் ஒருத்திதான் அவனோடு கதைக்கக் கூடியவள்."

கிற்றி வெளிறிப் போனாள்.

"இந்த ஆவணங்களை இன்னும் முப்பத்தாறு மணி நேரத்தில் தயாரித்து முடித்தாகவேண்டும்." சொன்ன அரி தொடர்ந்து "கரேனுக்கூடாக அவனோடு பேச நீ எங்களுக்குத் தேவைப் படுகிறாய்" என்றான்.

சொன்னாள்: "நீ என்ன செய்து விட்டாய் என்று எனக்குத் தெரிந்தாக வேண்டும்."

அவன் கலவரத்துடன் கண்களை மூடிமூடித் திறந்தான். கரேன் கோபமுற்றிருக்கும் போது அவளோடு விவாதம் செய்ய முடியாது. கடைசியாக அவன் சொன்னான்.: "நான் பென் கானானுடன் கதைக்க வேண்டு மென அவர்களுக்குச் சொன்னேன்."

"ஏன்?"

"இந்த ஆவணங்களைப் பார்த்தாயா? பிரிட்டனில் பிரதி பண்ணப்பட்ட (Mimeographed) படிவங்களின் போலியான தயாரிப்புக்கள், லார்நாகாவில் உள்ள முகாம் ஒன்றிற்கு எமது பிரிவிலிருந்து மாற்றப்பட வேண்டிய முந்நூறு பிள்ளைகளின் பெயர்ப் பட்டியல். இவைகளில் போலியாகப் பதிவு செய்ய பென் அமி என்னிடம் தந்திருக்கிறார். அவர்கள் புதிய முகாமுக்குப் போகப் போவதில்லை. வெளியே எங்கோமெசாட் இவைகளில் வேலை செய்யப் போவதில்லை."



"உனக்கு கப்பலொன்று இருக்கிறதா என்று கூட நிச்சயமாகத் தெரியாது. அப்படியிருந்து அதில் நாம் போகாமல் இருப்பதானால், அதற்கு அவர்களுக்கு ஏதும் காரணமிருக்கும். எங்களிரு வருக்கும் கராவுலொஸ்ஸிலேயே நிறைய வேலைகள் இருக்கிறது."

"அவர்களுக்கு நான் தேவைப்படுகிறேனா என்பது பற்றி எனக்குக் கவலையில்லை. என்னைப் பலஸ்தீனத்துக்குக் கூட்டிப் போவதாக எனக்கு அவர்கள் உறுதி யளித்திருந்தார்கள். நான் போகப் போகிறேன்."

"இந்தப் பால்மாக் பையன்கள் எங்களுக் காகச் செய்வதெல்லாவற்றிற்காகவும், அவர்களிற்கு நன்றிக் கடன் செலுத்த வேண்டும் என்று நீ நினைக்க வில்லையா? விசுவாசம் கொஞ்சமேனும் இல்லையா?" எங்களுக்காகச் செய்தது... யூதர்களைப் பலஸ்தீனத்துக்குள் கடத்திச் செல்ல ஏன் தலைகீழாக நிற்கிறார்கள்

அவளைச் சில மாதங்களுக்கு என்னுடன் வைத்திருக்க விரும்பினேன். அவளுக்கு முழுதான நம்பிக்கையை வரவழைக்க.... அமெரிக்காவுக்குப் போனால் எப்படி உன்னதமாக இருக்கும் என்று புரிய வைக்க.... நான் அவளோடு இருக்கும் சில மாதங்களில் என்னைப் பற்றி நானே நிச்சயப்படுத்திக் கொள்ள..."

"கிற்றி... கிற்றி... கிற்றி அவள் சாண்ட்ரா அல்ல. போர் முடிந்த காலம் தொட்டு நீ சாண்ட்ராவைத் தேடிக் கொண்டிருக்கிறாய். நீ சலோனிக்காவின் அந்த அனாதைக் குழந்தைகள் காப்பகத்திலும் அவளைத் தான் தேடினாய். அதனால்தான் அரி பென் கானானின் சவாலையும் ஏற்றுக் கொண்டாய். ஏனெனில், கராவுலொஸ்ஸில் நிறையக் குழந்தைகள் இருந்தார்கள். அவர்களுள் ஒருத்தி சாண்ட்ராவாக இருக்கக் கூடாதா என நினைத்தாய்."

"மார்க் தயவு செய்து மேலே எதுவும் பேசாதே...."

"சரி நான் என்ன செய்ய வேண்டும் என விரும்புகிறாய்?"

"அவளுடைய தகப்பன் உயிரோடு இருக்கிறாரா எனத் தேடு. இல்லா விட்டால் நான் அவளைத் தத்து எடுத்துக் கொண்டு, அமெரிக்காவுக்குக் கொண்டு செல்லப் போகிறேன்."

"என்னால் முடிந்ததை நான் செய்கிறேன்."

அரிபென் கானான், கப்டன் காலெப் மூராகச் சீருடை அணிந்தபடி தாங்கள் இருக்கும் புற்றரையைத் தேடி வருவதை அவன் கண்டு கொண்டான். அரி விரைவாக நடந்து வந்து அவர்களிருந்த மேசை அருகில் அமர்ந்து கொண்டான். வழக்கமான தனது, உணர்ச்சிகளேதுமற்ற இறுக்க மான பாவத்தோடு இருந்தான் அந்த பலஸ்தீனியன். அவனைக் கண்டவுடன் கிற்றியின் முகம் மலர்ந்து போயிற்று.

"டேவிட் இப்பொழுதுதான் கரா வுலொஸ்ஸிலிருந்து என்னுடன் தொடர்பு கொண்டான். நான் உடனடியாகக் கவனிக்க வேண்டிய ஏதோ ஒன்று அங்கே நிகழ்ந்திருக்கிறது. இந்த நிலமைகளின் கீழ் நீ உடனடியாக

கிற்றி தடுமாறிக் கொண்டே, தன் இருக்கையிலிருந்து எழுந்து குருட்டா ட்டமான போக்கில் அரியைத் தொடர்ந்தாள்.

மார்க் கவலையுடன் தன் தலையை ஆட்டிக் கொண்டே கவலை படர்ந்த பார்வையுடன், அவர்கள் வெளியேறி வெறுமையாய் தெரிந்த வழியைப் பல கணங்களுக்குப் பார்த்துக் கொண்டே இருந்தான்.

### அத்தியாயம் இருபத்தியொன்று

கரேன் பால்மாக் தலைமையகமாக இயங்கிய வகுப்பறையில் நின்று கொண்டிருந்தாள். அவள் மென்மையான முகத்தையும், பொன்னிறக் கூந்தலையும் இனிமையான தோற்றத்தையும் கொண்டிருந்த அப்பையனைக் கோபத்தோடு நோக்கிக் கொண்டிருந்தாள். அவனுடைய பதினேழு வயதிற்கு ஒவ்வாத சிறிய உருவம் உடையவனாக இருந்ததால், அவனில் தெரிந்த மென்மை உண்மையான நிலையை வெளிக்கொணர்வதாக இருக்கவில்லை. அவனது ஒரு சோடி ஐஸ் – நீலமான (Icy Blue Eyes) கண்கள், துன்பம், குழப்பம், வெறுப்பு ஆகியவற்றைப் பிரதிபலித்துக் கொண்டிருந்தன. அவன் தனது போலியான ஆவணங்களைத் தயாரிக்கும் சாதனங்களையும், கடதாசிகளையும் கொண்டிருந்த ஒரு சிறிய மாடத்தின் அருகில் நின்று கொண்டிருந்தான். கரேன் அவன் அருகில் போய், அவன் மூக்கின் கீழ் தன் சுட்டுவிரலை ஆட்டியபடி கேட்டாள்: "டொவ் நீ என்ன வேலை செய்திருக்கிறாய்?" அவன் தன் உதடுகளைக் கடித்தபடி ஏதோ முணுமுணுத்தான்.

"நாய் போல் சத்தமிடுவதை நிறுத்து" அவள் உறுக்கியபடி தொடர்ந்து

கப்பலொன்று காத்துக் கொண்டிருக்கிறது. அது பலஸ்தீனத்துக்குப் போகப் போகிறது."

"அப்படியானால் கூட என்ன? மொசாட் டையோ, பால்மாக்கையோ நாம் கேள்வி கேட்பதில்லையென்று உனக்குத் தெரியு ந்தானே?"

"இந்த முறை நான் கேட்கப் போகிறேன். எங்களுடைய பெயர்கள் பட்டியலில் இல்லை. அவர்கள் எங்களைப் போக விடாவிட்டால் நான் மேற்கொண்டு

தொடரும்...

## வாசகர் கவனத்திற்கு !

இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ள இப்படத்திற்கு பொருந்தக்கூடிய வகையில் எட்டுவரிகளுக்கு மேற்படாமல் கவிதை வரையுங்கள். உங்கள் ஆக்கங்களை **27- 03 - 1998** இற்கு முன்பாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு கீழ்தரப்பட்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.



கவிதை அனுப்ப வேண்டிய முகவரி:

**'Kalathil',**

**Eelam House, 202Long Lane, London SE1 4QB.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## சிறுகதை



# மரண செய்தி

**தாமரைச்செல்வி**

**1966**ம் ஆண்டு யூலை மாத நடுப்பகுதி. பொழுது சாய்ந்து கொண்டுவருகின்ற நேரம். காற்று சிறிது வெப்பமாய் உடலை உரசிப் போனது.

மலைக்கு மேலே சரிவில் ஒரு பாறையில் ரிச்சி துவான் அமர்ந்திருந்தான்.

அந்தச் சரிவில் மூங்கில் கம்புகளை நட்டு வைக்கோலினால் வேய்ந்த பத்துக்கு மேற்பட்ட குடிசைகள் வரிசையாய் இருந்தன.

அவன் எட்டிப் பார்த்தபோது மலையின் அடிவாரம் தெரிந்தது. அவனது வியட்னாமிய நமிகோ பள்ளத்தாக்குப் பிரதேசம்.....

திட்டுத்திட்டாய் பச்சைப்புதர்கள்.... நீர்நிலைகள்... ஆற்றங்கரைகள்....

இவற்றின் நடுவே மிகவும் தூரத்தில் அமெரிக்க இராணுவத்தின் சாம்பல் நிறக்கூடாரங்கள்.

தூரத்தே வான் பரப்பில் அமெரிக்க ரோந்து விமானம் பெரும் இரைச்சலுடன் பறந்து போனது.

அவன் மிகுந்த கவலையுடன் அந்த அடிவாரத்தைப் பார்த்தான்.

ஒரு வருடம் முன்பு வரை அந்த அடிவாரம் அவர்களது குடியிருப்புப் பகுதியாக இருந்தது. பெரும் ஆலமரங்களும் அத்திப்பழ மரங்களும் நிறைந்த கிராமம்.

நெல் விதைத்தும் சோளப் பயிர் செய்தும் காடுகளில் மூங்கில் வெட்டியும், சீவியம் நடத்தியிருந்தார்கள். நீர்நிலைகளில் தூண்டில் போட்டு மீன் பிடிப்பதும் எருமைகளோடு குளத்து நீரில் விளையாடுவதும் அவனுக்கு மிகவும் பிடித்தமான விடயங்கள்.

அந்த அழகான பிரதேசத்தை அமெரிக்க இராணுவம் ஒரு வருடத்திற்கு முன்னர் ஆக்கிரமித்துக் கொண்டது.

கிராம மக்கள் அவர்களின் கொடுமை தாங்காமல் வெளியேற நேரிட்டது.

அன்றைய துயர சம்பவங்களை அவனால் ஒருபோதும் மறக்க முடியாது. அவன் கண்ணெதிரே தந்தையின் கால்களை வெட்டி.... தாயின் தலைமயிரைப் பிடித்து இழுத்து அடித்து... தம்பியின் கைகளை முறுக்கி விழுத்தி... எத்தனை அவலம்.

கிராமத்தில் பல பேர் வட வியட்னாமுக்கும் வேறு கிராமங்களுக்கும் போய்விட்டார்கள்.

சிலர் இந்த மலைச்சரிவுகளில் வந்து குடியிருந்தார்கள். இங்கே பயிர் ஏதும் செய்ய முடியாது. சரிவில் சில வாழைக்கன்றுகள் போட்டு பூசணிக் கொடிகளும் வைத்திருந்தார்கள். மற்றும்படி காடுகளுக்குப் போய் மூங்கில் வெட்டித்தான் சீவியம் நடத்த வேண்டியிருந்தது.

அந்த அடிவாரத்தைப் பார்க்கும் போதெல்லாம் ரிச்சி து வானின் மனதில் ஒருவித ஏக்கம் ததும்பும்.

பிறந்ததிலிருந்து தவழ்ந்து நடந்து வளர்ந்த பிரதேசம்.... இன்று எதிரியின் இருப்பிடமாகிவிட்டதே...

சொந்த மண்ணை இழப்பது எத்தனை பெரிய சோகம் என்று எமி ஜோ லான் சொல்லியிருக்கிறாள். "இந்த அடிவாரத்தில் மட்டுமல்ல, எங்கள் மண்ணின் நாலு பக்கங்களிலும் அமெரிக்க இராணுவம் சுற்றி நிற்கிறது. இவர்களைக் காலூன்ற விடாமல் அடித்துத் துரத்த வேண்டும். இதுதான் எங்கள் இலட்சியம்." எமி ஜோ லான் சொல்லுவது உண்மைதான்.

"ரச்சி..."

குடிசை வாசலில் நின்று அவனுடைய அக்கா சாலி தராப் கூப்பிட்டாள்.

"என்ன சாலி"

"மூங்கில் வெட்டிக் கட்டி வைத்துவிட்டு வந்தேன். வருகிறாயா போய் எடுத்து வருவோம்."

அவன் எழுந்து அவளுடன் நடந்தான்.

மலையின் பின்பக்கச் சரிவில் இடறுப்படுகின்ற கற்களின் நடுவே ஒற்றையடிப்பாதை, மூங்கில் காட்டை நோக்கி இறங்கிப் போனது.

அந்தப் பின்புறச் சரிவில் சிறிது தூரத்தில் நாலைந்து கூடாரங்கள் புதிதாய் முளைத்திருந்தன.

அமெரிக்க ரோந்து விமானங்களின் பார்வையிலிருந்து தப்புவதற்காக மேலே காட்டுக் கொடிகளைப் பரப்பி கூடாரங்கள் தெரியாதவாறு மறைக்கப்பட்டிருந்தன.

சாலி தராப் அந்தக் கூடாரங்களை உற்றுப் பார்த்தாள்.

"இவர்கள்..."

"எங்கள் நண்பர்கள்தான்: வியட்னாமிய விடுதலைப் படையினர்." ரிச்சி து வான் சந்தோசமாய்ச் சொன்னான்.

"அது தெரியும். எதற்காக இங்கே வந்து கூடாரம் போட்டு இருக்கிறார்கள்."

சாலி தராப் வியப்புடன் கேட்டாள்.

"மலையின் அடிவாரத்தில் எங்கள் பிரதேசங்களை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் அமெரிக்கச் சிப்பாய்களைத் துரத்துவதற்காக."

"அப்படித் துரத்த முடியுமா?"

சந்தேகத்தோடு கேட்டாள்.

"முடியும் என்றுதான் சொல்லுகிறார்கள்."

"நிறையப் பேர் இருக்கிறார்களா?"

"ஆமாம். ஆண்களும் பெண்களுமாக..."

சாலி தராப் சட்டென்று திரும்பி அவனைப் பார்த்தாள்.

"உண்மைதான் சாலி: ஆண்களுக்குப் பப்புல் கங் பொறுப்பு. பெண்களுக்கு எமி ஜோ லான் பொறுப்பு"

"நான்தான் ஒரு வாரமாகத் தினமும் கூடாரத்துக்குப் போகிறேனே. அவர்கள் போராட்டம் பற்றி எத்தனை பேசுகிறார்கள் தெரியுமா? ஹனாயின் நகர்ப்புறப் பகுதிகளிலெல்லாம் அமெரிக்க விமானங்கள் குண்டுகளை வீசுகிறதாம். சைகோன் நகரை இராணுவம் ஆக்கிரமித்து விட்டதாம். நேற்று இரவும் கூடாரத்தில் பேட்டரி ரேடியோவில் கோ சி மின் அவர்களின் பேச்சைக் கேட்டேனே. சுதந்திரத்தையும் விடுதலையையும் காட்டிலும் அரிதான பொருள் வேறொன்றும் கிடையாது என்றார். எவ்வளவு உணர்ச்சியுடன் பேசினார். தெரியுமா? அவர் எழுதிய "நமது நாட்டின் வரலாறு" என்ற புத்தகம் கூட எமி ஜோ லான் தந்து, நான் வாசித்திருக்கிறேன்." சிறிது நேர மௌனத்தின் பின் சாலி தராப் கேட்டாள்.

"எமி ஜோ லான் அழகானவளா...?"

"ஆமாம். உன்னைப் போல"

சிறிது நேரம் மௌனமாக அவர்கள் நடந்தார்கள். காட்டுக்குள் போனதும் சாலி தராப் மூங்கில் கட்டுக்களைச் சரி பார்த்துக் கொண்டாள்.

வேறு ஆட்களும் மூங்கில் கட்டுக்களைச் சுமந்து நடந்து வந்து கொண்டிருந்தார்கள்.

சாலி தராப் தரையில் அமர்ந்து மூங்கில் கட்டுக்களைச் சரியாய் இழுத்துக் கட்டிய போதுதான் , ரிச்சி து வான் அவளைக் கவனித்தான்.

அவளுடைய மேல் சட்டை தோள் வளையில் பெரிதாய் கிழிந்து தொங்கியிருந்தது. அதனூடாகத் தோளின் வெண்மை பளீரென்று தெரிந்தது.

பாதையில் போனவர்கள் அவளைப் பார்த்து எதுவோ தமக்குள் சொல்லிச் சிரித்து விட்டுப் போனதில் ரிச்சி து வானுக்கு மனம் மிகவும் நொந்து போனது.

> அன்றைய துயர சம்பவங்களை அவனால் ஒருபோதும் மறக்க முடியாது. அவன் கண்ணெதிரே தந்தையின் கால்களை வெட்டி.... தாயின் தலைமயிரைப் பிடித்து இழுத்து அடித்து.... தம்பியின் கைகளை முறுக்கி வீழுத்தி... எத்தனை அவலம்.

"சாலி! உனக்கு வேறு சட்டை இல்லையா?" கவலையுடன் கேட்டான்.

சாலி தராப் தலையைக் குனிந்து கொண்டே மெல்லிய குரலில் சொன்னாள்.

"வீட்டுக்குப் போனதும் தைத்து விட்டுப் போட்டுக் கொள்கிறேன்.

"நீ தைக்க வேண்டாம். நான் உனக்குப் புதிய சட்டை வாங்கித் தருகிறேன்"

இருவரும் மூங்கில் சுமையுடன் திரும்பி நடந்தார்கள். இந்த மூங்கில்களை அவன் சீவிக் கொடுக்க கால்களை இழந்த அப்பாவும் தம்பியும் கூடைகளையும் நாற்காலிகளையும் பின்னிக் கொடுப்பார்கள். அவன் நகரத்திற்கும் வேறு கிராமங்களுக்கும் கொண்டுபோய் விற்று வருவான்.

அந்த சிறிதளவு வருமானத்தில்தான் அவர்கள் வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

மூங்கில் கட்டுக்களை முற்றத்தில் இறக்கி வைத்து விட்டு அவன் வீட்டுக்குப் பின் பக்கச் சரிவில் இறங்கி நடந்தான்.

கூடாரம் போட்டு வியட்னாமிய விடுதலைப்படை தங்கிமிருக்கும் இந்த இரு வாரத்திலும் அவன் அடிக்கடி அங்கே போவான். அவர்களுக்கு எல்லா உதவியும் செய்வான். தண்ணீர் சுமந்து கொண்டு வந்து கொடுப்பான். அவர்களுக்குத் தேவையான பொருட்களை நகரத்துக்குள் போய் வாங்கி வந்து கொடுப்பான்.

அந்த விடுதலைப் படையில் தன்னை இணைத்துக் கொண்டு போராட அவனுக்கு விருப்பம் இருந்தது. ஆனால் வீட்டில் யாரும் சம்மதிக்க வில்லை. அவனுடைய உழைப்பில்தான் அவர்கள் வாழவேண்டியிருந்தது.

அவன் அந்த கூடாரங்களை நோக்கி நடந்தான். அங்கு போராளிகளின் நடமாட்டம் அதிகமாய் இருந்தது. முன்புறம் எமி ஜோ லான் தரையில் அமர்ந்து துப்பாக்கி துடைத்துக் கொண்டிருந்தாள்.

சிறிது தூரத்தில் பப்புல் கங் நின்று, மற்றவர்களுக்கு ஏதோ வேலை சொல்லிக் கொண்டிருந்தான்.

பப்புல் கங் அதிக உயரமில்லாத... சிறிது பருமனான உடம்பும்.... பரந்த முகமுமாய் இருந்தான். கொஞ்சம் நிறம் மங்கிய தலைமயிர் நெற்றியில் விழுந்திருந்தது. எப்போதும் சிந்தனையும் தீவிரமுமாய் இருப்பான்.

ரிச்சி து வானைக் கண்டதும் எமி ஜோ லான் மகிழ்ச்சியோடு வரவேற்றாள்.

எமி ஜோ லான் அழகான பெண். மஞ்சள் நிறம். சிறிய பழுப்பு நிறக் கண்கள் குண்டு முகம் கொஞ்சம் வளைந்த மூக்கு. சதைப்பிடிப்பான உதடுகள். மேலே அங்கியும் கால் சராயும் அணிந்து இடுப்பில் தடித்த துணியால் இறுக்கிக் கட்டியிருந்தாள்.

அவளின் சிறிய கண்களில் அன்பும் வாஞ்சையும் பொங்கி வழியும். ரிச்சி மீது அவளுக்கு மிகுந்த பிரியம்.

"வா ரிச்சி. உனக்கு எத்தனை வயது?"

"தெரியாது. ஏன் கேட்கிறாய் எமி ஜோ?"

"பதினைந்து இருக்குமா?"

"ம். இருக்கும்."

"வியட்னாம் முழுவதும் சண்டை தீவிரமடைந்து வருகிறது தெரியுமா.... மைலாய் கிராமத்தில் நடந்த கொடுமைகளை நினைக்க நெஞ்சு கொதிக்கிறது. எங்கள் தொழிற்கூடங்கள், நீர்த்தேக்கங்கள், மின்சார உற்பத்தி நிலையங்கள் எல்லாவற்றின் மீதும் குண்டுகளை வீசுகிறார்கள். எங்கள் பிரதேச வளங்களைச் சுரண்ட வந்தவர்களைத் துரத்த வேண்டும். மேகாங் ஆற்றுப் பள்ளத்தாக்கு நகரங்களில் பெரும் சண்டை நடக்கிறது.

அங்கே எங்கள் போராளிகள் இருபது பேர்வரை இறந்து விட்டார்கள்.

ரிச்சி து வான் கவலையோடு கேட்டுக் கொண்டிருந்தான்.

தொடர்ச்சி 12 ம் பக்கம்.....

www.tamilarangam.net



# நாளைய ........

(சிறுகதை)

"அவர்களின் ஆயுதங்களில் ஒன்றை நீ எடுத்துக் கொள்வாயா?"

ரிச்சி து வான் சட்டென்று மௌனமானான்.

இயலாமையுடன் அவளைப் பார்த்தான். ஒரு வினாடி வெறுமையாய் உணர்ந்தான்.

எமி ஜோ லான் அவனை நிமிர்ந்து பார்த்துவிட்டு.

"வருத்தப்படாதே ரிச்சி... உன் குடும்ப நிலைமை எனக்குத் தெரியும்" என்றாள்.

"நான் உழைக்காவிட்டால் வீட்டில் எல்லோரும் பட்டினியில் செத்து விடுவார்கள்"

என்றான் அழுகையுடன். அப்போது அங்கே வந்த பப்புல் கங், ரிச்சி து வானின் தோளை கைகளால் வளைத்துக் கொண்டு

"ரிச்சி! நாலைந்து நாட்களுக்கு நீ இங்கே வரக்கூடாது என்றான்."

"ஏன் பப்புல்?"

அவன் முகம் வாடக் கேட்டான். "நான் ஏதும் சொன்னால் அதற்குக் காரணம் இருக்கும் என்று உனக்குத் தெரியுமல்லவா"

"ம்"

பப்புல் கங், அவனைப் பார்த்து தோழமையுடன் சிரித்துவிட்டுப் போனான்.

"நான் போகிறேன் எமி ஜோ!"

அவள் தனது துப்பாக்கியைத் தோளில் தொங்கவிட்டுக் கொண்டு, அவனுடன் சிறிது தூரம் கூடவே நடந்து வந்தாள்.

பப்புல் கங், எமி ஜோ லான் இருவரையும் அவனுக்கு மிகவும் பிடிக்கும். எந்நேரமும் போராட்டம், தாக்குதல் என்றே பேசிக் கொண்டிருப்பார்கள்.

அந்தப் பேச்சுக்களின் நடுவே அவர்களின் கண்களில் எப்போதாவது மின்னல் போல ஒரு நேசம் பளிச்சிடுவதை அவன் பார்த்திருக்கிறான்.

அவன் நின்று எமி ஜோ லானைத் திரும்பிப் பார்த்தான்.

"எமி ஜோ, நீ பப்புல் கங்கை நேசிக்கிறாயா?"

அவள் தலையைச் சாய்த்து "ம்" என்றாள்.

"அவனைத்தான் திருமணம் செய்து கொள்வாயா?"

"ஆமாம்"

"எப்போது?"

"இந்த மண் மீட்கப்பட்ட பிறகு"

"எங்கள் மண் மீட்கப்படும் என்று நம்புகிறாயா?"

"நிச்சயமாக, என்றாவது ஒரு நாள்..."

எமி ஜோ லானின் சிறிய கண்களில் கனிவு இருந்தது. நம்பிக்கை இருந்தது.

"ரிச்சி! ஒரு நாளைக்கு தங்க நட்சத்திரம் பொறிக்கப்பட்ட செங்கொடி, சைகோன் நகரில் வானளாவப் பறக்கும். அன்றைக்கு நாங்கள் திருமணம் செய்து கொள்வோம். ஏனோ அவனுக்குத் துக்கமாய் இருந்தது.

அந்த மங்கிய பொழுதில் எமி ஜோ லானைப் பார்க்க இன்னும் துக்கம் அதிகரித்தது.

"பப்புல் கங் ஏன் என்னை வரவேண்டாம் என்றான்."

அவள் பேசாமல் நின்றாள்.

"ஒரு வாரத்தின் பின் வரலாமா?"

"வரலாம்" என்றாள் சந்தோசத்துடன்.

கொஞ்சம் தயங்கி விட்டுக் கேட்டான்.

"மலை அடிவார முகாம் தாக்கப் போகிறீர்களா?"

"அதையெல்லாம் இப்போது கதைக்கக் கூடாது. பிறகு தெரிந்து கொள்வாய்"

அவளிடம் விடைபெற்றுக் கொண்டு பாரமான மனதுடன் வீட்டுக்கு நடந்தான்.

நான்கு நாட்கள் நகர்ந்தன.

வான் பரப்பில் அமெரிக்க விமானங்கள் பெரும் இரைச்சலுடன் பறந்து திரிந்தன.

நான்காம் நாள் இரவு. அந்த மலைப் பிரதேசம் அமைதியாய் இருந்தது. காற்றுக்கூட வீசவில்லை.

நடுச்சாமத்தில் மலை அடிவாரத்தில் முதலாவது வெடிச்சத்தம் கேட்டது.

அவனுக்குப் புரிந்து விட்டது. தாக்குதல் ஆரம்பமாகி விட்டது.

துப்பாக்கி வெடிகளினாலும் பீரங்கிச் சத்தங்களினாலும் அந்தப் பிரதேசமே அதிர்ந்தது. மலையில் மோதி பயங்கரமாய் எதிரொலித்தது.

மலைச்சரிவுகளில் வாழ்ந்த மக்கள் நடுங்கிப் போனார்கள். அத்தனை பேரும் காட்டுக்குள் ஓடிப் போனார்கள்.

இரவு முழுவதும் ரிச்சி து வான் கண்ணில் நீர் வழிய விழித்திருந்தான்.

இறைவனே... எங்கள் தோழர்களைக் காப்பாற்றும். அவர்களுக்கு வெற்றியைத் தாரும்.... என்று திரும்பத் திரும்ப பிரார்த்தனை செய்து கொண்டே இருந்தான்.

மறுநாளும் சண்டை தொடர்ந்தது. விமானங்கள் சுற்றுப் புறங்களில் குண்டுகளை மழையாய் கொட்டின. வெடி மருந்துகளின் மணம் காற்றில் மிதந்து பரவியது. மறுநாள் இரவு சத்தங்கள் ஓய்ந்து விட்டன.

மனம் பதைபதைத்தது.

என்ன நடந்திருக்கும்.

நன்றாக விடிந்து விட்ட பிறகு, மக்கள் தங்கள் குடிசைகளுக்குத் திரும்பினார்கள்.

ரிச்சி து வான் ஓடிப்போய் பாறையில் நின்று அடிவாரத்தைப் பார்த்தான்.

மிகவும் தூரத்தில் எந்த மாற்றமும் இல்லாமல் அதே இராணுவக் கூடாரங்கள்.

மனதுக்குள் "திக்" கென்றது.

கால்கள் சோர்ந்து தடுமாற, பாறையில் அமர்ந்து விட்டான்.

"தோல்வியில் முடிந்ததா ரிச்சி?"

சாலி தராப் அழுகையுடன் கேட்டாள்.

அப்படித்தான் தோன்றுகிறது.


"அவன் வெகுநேரம் அப்படியே அமர்ந்து விட்டான்".

மூங்கில் வெட்டப் போகவில்லை. சாப்பிடவில்லை. மனம் தவித்துக் கொண்டே இருந்தது.

மத்தியானத்துக்குப் பிறகு அவனால் பொறுமையாகவிருக்க முடியவில்லை.

அவன் பின்பக்கம் வந்து சரிவில் நின்று பார்த்தான். கூடாரத்திற்கு வெளியே எந்த நடமாட்டமும் தெரியவில்லை.

கீழே தூரத்தில் மலையைச் சுற்றி வரும் பாதையில் ஒரு பழைய டிரக் வண்டி



ஆடி அசைந்து கொண்டு வந்தது.

மூங்கிலும் வைக்கோலும் ஏற்றித் திரியும் மை லீ கிழவனின் வண்டி அது.

விடுதலைப் படையினரின் கூடாரங்களை நோக்கித்தான் வருகிறதோ தெரியவில்லை.

அவன் சரிவில் இறங்கி கூடாரங்களை நோக்கி நடந்தான்.

அங்கு எல்லோரும் களைத்துப் போன முகங்களுடன் தரையில் அமர்ந்திருந்தார்கள்.

மூங்கில் தட்டுகளில் சருகுகள் பரவிய படுக்கையில் காயப்பட்டவர்கள் படுத்திருந்தார்கள். தூரத்தில் பப்புல் கங் கலைந்த தலையும் சிவந்த கண்களுமாக மரக்குற்றியில் அமர்ந்திருந்தான்.

எல்லோர் முகங்களிலும் இருந்த சோகம் அவனுக்கு மிகுந்த கவலையைத் தந்தது. அவன் தயங்கியபடி பப்புல் கங்கின் அருகே போனான்.

"பப்புல்..."

அடிபட்ட பார்வையுடன் நிமிர்ந்தான்.

"ரிச்சி! தோல்வியில் முடிந்து விட்டது ரிச்சி. நம்மில் பலர் உள்ளே அகப்பட்டு இறந்து விட்டார்கள்."

ரிச்சி து வானின் கண்கள் கூட்டத்தினுள்ளே எமி ஜோ லானைத் தேடின.

அவளைக் காணவில்லை என்பதை வேதனையுடன் உணர்ந்தான்.

நெஞ்சை அடைத்தது.

"எமி ஜோ லான்....?"

"அவள் திரும்பவில்லை" குபுக்கென்று ரிச்சி து வானின் கண்கள் நிறைந்தன.

மை லீ கிழவனின் வண்டி கூடார வாசலில் வந்து நின்றது.

நரைத்த தலையும் நீண்ட வெண் தாடியுமாக முகத்தில் நிறைந்த சுருக்கங்களுடன் மை லீ கிழவன் இறங்கினான். அவனின் இடுங்கிய கண்களில் தண்ணீர் இருந்தது.

பப்புல் கங்கிடம் வந்து சொன்னான்.

"உங்கள் ஆட்களின் இறந்த உடல்களை அவர்கள் என் வண்டியில் ஏற்றி அனுப்பியிருக்கிறார்கள்.

பப்புல் கங் பாய்ந்து ஓடினான். வண்டியின் பின்பக்க கதவைத் திறந்தான்.

அவன் முகம் பேயறைந்தது போல மாறியது. ஓவென்று ஆத்திரத்துடன் கத்திக் கொண்டே காலைத் தரையில் ஓங்கி அறைந்தான்.

ரிச்சி து வானும் ஓடிப்போய்ப் பார்த்தான்.

அய்யோ... இது என்ன கொடுமை.....

இருபதுக்கும் மேற்பட்ட விடுதலைப் படையினரது உடல்கள்.... கை, கால்கள் வெட்டப்பட்ட நிலையில் வண்டிக்குள் குவிக்கப்பட்டிருந்தன.

அவனால் நேசிக்கப்பட்ட போராளிகள்.

முன்பக்க ஓரத்தில் எமி ஜோ லான்.

சிறிய கண்கள் பாதி மூடியிருக்க உதடுகள் சற்று திறந்திருக்க... அய்யோ... இப்போதும் ஏதும் கனவு கண்டு கொண்டிருக்கிறாளோ.....

அத்தனை பேரும் அதிர்ச்சியில் உறைந்து போயிருக்க, ரிச்சி து வான் அவர்களை விலக்கிக்கொண்டு வேகமாய் வீட்டுக்கு வந்தான். பாறையில் அமர்ந்து கைகளால் முகம் பொத்தி விம்மி விம்மி அழுதான். வீட்டில் உள்ளவர்கள் அவனையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.ரிச்சி து வான் வெகு நேரத்தின் பின் எழுந்து வந்தான்.

"நான் போகிறேன்." யாரும் பேசவில்லை.

"சாலி! உன் கிழிந்த சட்டையை தைத்துப் போட்டுக்கொள்." ✳

இரவு முழுவதும் ரிச்சி து வான் கண்ணில் நீர் வழிய விழித்திருந்தான்.

இறைவனே... எங்கள் தோழர்களைக் காப்பாற்றும். அவர்களுக்கு வெற்றியைத் தாரும்.... என்று திரும்பத் திரும்ப பிரார்த்தனை செய்து கொண்டே இருந்தான்.

**குறிப்பு:**

சரியாக ஒரு வருடத்தின் பின் 1967ம் ஆண்டு பருவ மழை பெய்து கொண்டிருந்த ஒரு இரவில், அந்த அடிவார முகாம் பப்புல் கங் தலைமையில் வியட்நாமிய விடுதலைப் படையினரால் தாக்கி அழிக்கப்பட்டது. ரிச்சி து வானும் இந்த தாக்குதலில் பங்கு வகித்திருந்தான். ஐந்து நாட்கள் நடந்த போரில் ஆறாயிரம் அமெரிக்க சிப்பாய்களும் அந்த நமிகோ பிரதேசத்திலிருந்து முழுவதுமாக விரட்டி அடிக்கப்பட்டனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 50 வருடம் பொய்பேசும் அமைச்சு

அரசியல்வாதிகள் பலர் முரண்பாடாகப் பேசுவதும் சிலசமயம் மறந்தோ அன்றி சுயநினைவு இன்றியோ உண்மைகளைப் பேசிவிடுவதும் உண்டு. இந்த வகையில் சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரும் அண்மையில் ஏதோ ஒரு நிலையில் உண்மைகள் சிலவற்றைப் பேசியுள்ளார். 5 நட்சத்திரக் ஹோட்டலான தாஜ் சமுத்திராவில் இடம்பெற்ற உள்நாட்டு, வெளிநாட்டு பத்திரிகையாளர்களுக்கான விருந்தொன்றின்போதே அவர் இவ்வாறு நடந்துகொண்டார். இந்நிகழ்ச்சியில் கதிர்காமர் பேசிய சில உண்மைகளில், சிறீலங்கா வெளிவிவகார அமைச்சின் பணிபற்றிய குறிப்பொன்று முக்கியமானதாகும்.

"சிறீலங்கா அரசு வெளிநாடுகளில் தன் தூதுவர்களின் மூலம் பொய்களைச் சொல்ல ஆரம்பித்து 50 வருடங்கள் பூர்த்தியாகி விட்டதாக நீங்கள் பரிகசிக்கக்கூடும்: ஆனால், ஏனைய நாடுகளின் தூதரகங்களைப் போன்று, எமது தூதரகங்களில் நவீன கம்பியூட்டர்கள், தகவல் தொடர்பு சாதனங்கள் இல்லை. இத்தகைய நிலைமைகளிற்தான் அவர்கள் சிறீலங்காவின் சார்பில் பொய்களைச் சொல்கின்றார்கள் எனத் தெரிவித்தார்.

ஒவ்வொரு நாடும் தமது வெளிநாட்டுத் தூரதகங்கள் ஊடாக தமது அரசுக்கு ஆதரவான பிரச்சாரங்களையே செய்கின்றன என்பது பொதுவான ஒன்றுதான். அதிலும் ஆட்சியில் உள்ளவர்களின் கொள்கைகள், நகர்வுகள் என்பனவற்றின் அடிப்படை எவ்வாறு அமைகின்றன என்பதைப் பொறுத்து வெளிநாட்டுத் தூதரகங்களின் பங்கு, பணிகள் அமைகின்றன. இதனை வழிநடத்திச் செல்வதாக வெளிவிவகார அமைச்சரின் பணி உள்ளது. ஆனால், வெளிவிவகார அமைச்சின் பணியானது ஒட்டுமொத்தமாக பொய்களையும், உண்மைக்கு மாறான தகவல்களையும் வெளிவிடுவதானது என்பதல்ல. அது அந்நாட்டினது அல்லது அரசாங்கத்தினது நற்பெயரைப் பாதுகாக்கவோ அன்றி நிலைநிறுத்தவோ உதவப்போவதில்லை. மாறாக அவ்வரசையும் அரசாங்கத்தையும் அவநம்பிக்கையுடனேயே நோக்கவும் வைக்கும். ஆனால், இதற்கு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் கூறுவது போன்று, நவீன தொடர்புத் சாதன வசதிகள் இல்லாமைதான் காரணம் என்பதல்ல. இவை இல்லாமையினால் தகவல்கள் கிடைப்பது ஒப்பீட்டு ரீதியில் சிறிது தாமதமாகலாமே ஒழிய, உண்மைகள் பொய்யாக மாறுவதற்குக் காரணம் இல்லை. சிறீலங்கா அரசானது ஒட்டுமொத்தமாகவே தனது வெளிநாட்டுக் கொள்கைக்குத் தேவையான பொய்களை கூறவேண்டியமைக்குக் காரணம், தவறான உள்நாட்டுக் கொள்கையின் அடிப்படையில் வெற்றிகரமான வெளிநாட்டுக் கொள்கையை அமைத்துக் கொள்ள விரும்புகின்றமையே ஆகும். மாறாக, உள்நாட்டில் நேர்மையான கொள்கை ஒன்றை அரசு கைக்கொள்ளுமானால் அவ்வாறான ஒரு நெருக்கடி வெளிநாட்டுக்கொள்கையில் அரசுக்கு ஏற்பட்டிருக்க மாட்டாது. எடுத்துக்காட்டாக, அந்நிய நாடுகளில் இருந்து பெரும் தொகை மூலதனத்தையும் உதவிகளையும் பெற்றுக்கொள்ள முனையும் அரசாங்கம் இலங்கையின் ஒரு பகுதியிலேயே ஆயுதப்போராட்டம் நடைபெறுவதாகவும் அவ்வாறு போராட்டத்தில் ஈடுபடுவது ஒரு சிறிய பயங்கரவாதக் குழுவே எனவும் விரைவிலேயே அவர்கள் நசுக்கப்பட்டு விடுவார்கள் எனவும் பிரச்சாரம் செய்கின்றது. ஆனால், களநிலையோ ஒரு தேசிய இனம் தனது விடுதலைக்காகப் போராடுகின்றது என்பதும் இரு அரசுக்கள் மோதிக்கொள்வது போல் யுத்தம் தீவிரமாகி வருகின்றது என்பதுமாகவே உள்ளது.

மேலும், அரசாங்கம் போரில் வெற்றி பெறுவது சாத்தியமாகப் போவதில்லை என்பது உறுதிசெய்யப்பட்ட ஒன்றாக மாறி வருகின்றது. ஆனால், இந்த நிலையிலும் இராணுவம் வெற்றி பெற்று வருகின்றது என்ற அரசின் பேச்சையே வெளிநாட்டுத் தூதரகங்கள் பேசவேண்டியுள்ளது. இவ்வாறு, வெளிநாட்டுத் தூதரகங்கள் பொய் பேசுகின்றனவெனின் அவற்றுக்குப் பொறுப்பாக உள்ள அமைச்சர்களும் பொய் பேசுகின்றனர் என்பதே யதார்த்தமானதாகும். இதனையே அமைச்சர் கதிர்காமர் தாஜ்சமுத்திரா ஹோட்டல் விருந்தில் ஒப்புக்கொண்டுள்ளார் என்று கூறலாம். ஆனால், இது கதிர்காமர் கூறினால்தான் தெரியவரும் என்பதல்லத்தான். இது ஏற்கனவே உலகமறிந்த ஒன்றுதான். ஆனால், கதிர்காமர் கூறியது என்பது ஒப்புதல் வாக்குமூலம் என்ற ரீதியில் முதன்மையானதாகும். ✳

> "சிறீலங்கா அரசு வெளிநாடுகளில் தன் தூதுவர்களின் மூலம் பொய்களைச் சொல்ல ஆரம்பித்து 50 வருடங்கள் பூர்த்தியாகிவிட்டதாக நீங்கள் பரிகசிக்கக்கூடும். ஆனால், ஏனைய நாடுகளின் தூதரகங்களைப் போன்று, எமது தூதரகங்களில் நவீன கம்பியூட்டர்கள், தகவல் தொடர்பு சாதனங்கள் இல்லை. இத்தகைய நிலைமைகளிற்தான் அவர்கள் சிறீலங்காவின் சார்பில் பொய்களைச் சொல்கின்றார்கள்"
>
> – சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர்

# ஈழத்தமிழர் நிலைகுறித்த ஜேர்மன் தழுவிய கலந்துரையாடல்கள்

ஈழத் தமிழர்களுக்கு சிறீலங்கா அரசால் இழைக்கப்படும் கொடுமைகளையும், சிறீலங்கா அரசின் மனித உரிமை மீறல்களையும் வெளிக்காட்டும் முகமாக ஜேர்மனிய பொது அமைப்புகளுடன் தமிழீழ மக்களும் இணைந்து கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்திருந்தனர்.

மேற்படி கலந்துரையாடல்கள் சென்ற மாதம் ஜேர்மனியின் பல நகரங்களிலும் இடம்பெற்றது. ஜேர்மன் அகதிகள் வட்டம், ஜேர்மன் நட்புறவுச்சங்கம், ஜேர்மன் தமிழ் மகளிர் அமைப்பு ஆகியன அவ்வப்பகுதிகளில் உள்ள தமிழ் மக்களுடன் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இக்கலந்துரையாடல்களில் அவ் அமைப்புகளைச் சேர்ந்த பிரதிநிதிகள், அங்கத்தவர்கள், பொதுமக்கள் ஆகியோருடன் ஜேர்மன் பத்திரிகை நிருபர்களும் கலந்து கொண்டு தமது கருத்துக்களை பரிமாறியதோடு, ஈழத்தமிழரின் இன்றைய உண்மை நிலையை விளக்கி தமது பத்திரிகைகளில் கட்டுரைகளும் வரைந்துள்ளனர்.

இக்கருத்தரங்கில் வணபிதா கலாநிதி ஜே. இம்மானுவேல் அடிகளார், சர்வதேச தமிழர் சம்மேளனத்தின் தலைவர் திரு. ஜேம்ஸ் கரன், தமிழர் மனித உரிமைகள் மையத்திலிருந்து செல்வி மான், பிறேமன் மனித உரிமைகள் சங்கத்தில் இருந்து திரு. விறாஸ் மென்டிஸ் ஆகியோர் ஜேர்மனியின் பல்வேறுபட்ட இடங்களுக்கும் சென்று கலந்துகொண்டனர்.

முஹ்லாக்கர், ஒற்ஷெய்ர்ன் என்ற இடங்களின் ஜேர்மனிய நண்பர்கள் வட்டம், அங்கு வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழர்களுடன் இணைந்து நடத்திய கலந்துரையாடலில் பெரும்பாலான ஜேர்மனிய மக்கள், பத்திரிகையாளர்கள் கலந்துகொண்டனர். 27–11–97 மாலை 7.30 மணியளவில் முஹ்லாக்கர் மெதடிஸ்த தேவாலயத்தில் இக்கலந்துரையாடல் இடம் பெற்றது. வணபிதா கலாநிதி ஜே. இம்மானுவேல் அவர்களுடன் திரு. வி. மென்டிஸ் ஜேர்னன் தென்மாநில அகதிகள் வட்டத்தலைவர் பாதிரியார் திரு. டபிள்யூ. பவும்காற்றன் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர்.

இந்நிகழ்ச்சியில் அருட்திரு. இம்மானுவேல் அடிகள் கருத்துத் தெரிவிக்கையில் சிறீலங்கா அரசின் தமிழினத்துக்கெதிரான கடந்தகால நடவடிக்கைகளை விரிவாக எடுத்து விளக்கினார். அத்துடன், 1948இல் பிரித்தானியரிடமிருந்து இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து பெரும்பான்மைச் சிங்கள அரசுகள் சிறுபான்மை தமிழ் இனத்தை அடக்கியாண்டு வருவதையும் தனிச்சிங்கள சட்ட அமுலாக்கல், கல்வி, வேலை வாய்ப்புக்களில் காட்டப்படும் இனரீதியான ஒடுக்கு முறைகளையும் வரலாற்று ரீதியாக எடுத்துரைத்தார். அத்துடன், அவ்வப்போது அங்கு தோன்றிய இனக்கலவரங்களை நினைவூட்டி தற்போதைய நிலையில் தமிழர்கள் ஜேர்மன் போன்ற வெளிநாடுகளில் இருந்து சிறீலங்காவிற்குத் திருப்பி அனுப்பப்பட்டால் அங்கு தமிழர்கள் கைது செய்யப்படுதல், உயிராபத்து ஏற்படுதல் போன்ற அசம்பாவிதங்கள் நிகழும் என்பதை ஆதாரங்களுடன் விளக்கிக் கூறினார்.

இதற்குச் சாட்சியம் கூறுவது போல் திரு. மென்டிஸ் அவர்களும் விளக்கமளித்ததோடு, "நான் ஒரு சிங்களவன்: சிறீலங்காவில் ஜனநாயக ஆட்சி சிங்களவருக்கு மட்டும்தான் உண்டு. தமிழர்களுக்கு இல்லை. தமிழ் இனத்தின் மீது திட்டமிட்ட இன அழிப்பு நடைபெறுகிறது. சிறீலங்கா அரசு தமிழர்களின் மீது நடத்தும் மனித உரிமை மீறல்கள் கண்டிக்கப்பட வேண்டியது. இந்த மனித உரிமை மீறல்களை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது" எனவும் கூறினார். வணபிதா திரு. டபிள்யூ பவுன்காற்றன் அவர்கள் தனது கருத்தில், தமிழர்களது பிரச்சனைகளை தான் நன்கு அறிந்திருப்பதாகவும், தற்போது சிறீலங்காவில் நடைபெறும் மனித உரிமை மீறல்களை யாருமே ஏற்றுக்கொள்ள முடியாது எனவும், இங்கு கருத்துக்களைக் கூறிய அருட்தந்தை திரு. இம்மானுவேல், திரு. மென்டிஸ் ஆகியோர் கூறியதிலிருந்து தான் மேலும் பல விடயங்களையும் பல உண்மைகளையும் அறிந்ததாகவும் ஜேர்மன் அரசுக்கும் எடுத்துக்காட்டும் முயற்சிகளில் ஈடுபடப்போவதாகவும் தெரிவித்தார். இங்கு சிலருக்கு அகதிகள் அந்தஸ்து நிராகரிக்கப்பட்டு, சிலர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். இது வருந்தக் கூடிய நிகழ்ச்சி என்றும், இந்நிலையில் தமிழர்களைத் திருப்பி அனுப்பாமல் நிறுத்த தான் தொடர்ந்து பாடுபடப் போவதாகவும் தெரிவித்தார்.

02.12.97 வைபிசன்பூக், குன்சன்கவுசன் அகதிகள் வட்டத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட கலந்துரையாடலுக்கு அதன் தலைவர் திரு. கிறிஸ்ரோப் மோச் அவர்கள் தலைமை தாங்கினார். இங்கு உரையாற்றிய தமிழர் சம்மேளனத்தின் தலைவர் திரு. ஜேம்ஸ் கரன் அவர்கள் ஈழத்தமிழர்களின் வரலாற்றையும் அன்று தொட்டு இன்று வரையில் சிறீலங்கா இனவாதம் தமிழ் மக்களுக்குச் செய்துவரும் கொடுமைகளையும் சுட்டிக்காட்டினார். ஜேர்மன் பத்திரிகையாளர், அரசஸ்தாபனப் பிரதிநிதிகளின் கேள்விகளுக்குப் பதிலளித்த செல்வி மான் அவர்கள், தமிழ் மக்கள் தமது சொந்த மண்ணில் எதிர் நோக்கும் பட்டினிச் சாவு, பாலியல் வன்முறை, காணாமல் போதல் போன்ற மனித உரிமை மீறல்களை வரிசைப்படுத்தி ஆதாரங்களுடன் எடுத்துக் கூறினார்கள். ஐ. நாடுகள் அகதிகள் சாசனத்தின் குறிப்புகளை எடுத்துக்காட்டியதுடன், ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கோரிய தமிழீழ மக்களைத் திருப்பி அனுப்ப வேண்டாம் எனவும் கேட்டுக் கொண்டார். இந்த விடயத்தில் ஜேர்மன் அரசாங்கத்தின் முடிவில் மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் ஜேர்மனிய மக்கள்தான் தமிழீழ மக்கள் மீது அக்கறை கொண்டு தங்கள் நாட்டு அரசியல் தலைவர்களை கேட்டுக்கொள்ள வேண்டும் என்றார்.

திரு. ஜேம்ஸ் கரன், செல்வி. மான் ஆகியோர் 03–12–97 அன்று பிறேமன் நகரில் திரு. வி. மென்டிஸ் அவர்களின் தலைமையில் உள்ள சிறீலங்கா –தமிழீழ மனித உரிமைகள் அமைப்பால் ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கிலும் கலந்துகொண்டு உரையாற்றினார்கள். 11–12–97இல் ஜேர்மன் போக்கம் நகரில் சிறீலங்காவில் இரத்தம் குடிக்கும் போரும் தமிழீழமும் என்ற தலைப்பிலான கருத்தரங்கு இடம்பெற்றது. இக்கருத்தரங்கிலும் வணபிதா இம்மானுவல் அடிகளாரும் இந்துமதக் குருக்கள் திரு. பி. ஜே. குருக்கள் அவர்களும் திரு. பாலா, திரு. விறாஸ் மென்டிஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதன்போது உரையாற்றிய அருட் திரு. இம்மானுவேல் அடிகளார், "சிறீலங்கா திருச்சபையின் பொறுப்புணர்வுமிக்க ஒரு கத்தோலிக்க குரு என்ற மட்டிலும் பல ஆண்டுகளாகச் சிங்கள நண்பர்களோடு படித்தவன், பணிபுரிந்தவன் என்ற மட்டிலும் இப்போது முழுமையான அழிவுக்குரிய இப்போரினாலும் குறிப்பாக கடந்த பத்து வருடங்களாகப் போர்ப் பகுதிகளில் மனிதமற்ற பொருளாதாரத் தடையைச் சுமப்பதனாற் பாதிக்கப்பட்டவன் என்ற மட்டிலும் இன்று அங்கு நிகழும் கொடூரமான நிகழ்வுகளுக்கும் மனித உயிருக்காகப் போராடுவோரின் சோகமான அழுகைக்கண்ணீருக்கும் நான் சாட்சியம்பகர விரும்புகிறேன். உலகம் உண்மையை அறிய முடியாமல், எல்லா தொடர்புசாதனங்களும் மூடப்பட்ட கதவின் பின்னாலிருந்து வந்தவன் என்ற மட்டில் எனது சாட்சியம் முக்கியமானது. தமிழர்கள் சுதந்திரமாக வாழமுடியாத நிலை அங்குள்ளது. தமிழர்கள் கொழும்பு உட்பட முழு இலங்கையிலும் கைது செய்யப்படுகிறார்கள். காணமற் போகின்றனர். ஆனாலும் விபரங்கள் கிடைப்பதில்லை" எனப் பல விடயங்களை ஆதாரங்களுடன் எடுத்து விளக்கினார். இறுதியாக தமிழர்களை ஜேர்மனியிலிருந்து திருப்பி அனுப்பவேண்டாம் என அங்குள்ள ஜேர்மனிய மக்கள் மத்தியில் வருத்தத்துடன் கேட்டுக்கொண்டதோடு, இலங்கையில் அமைதி ஏற்பட்டால் தான் முதலில் திரும்பிச் செல்வதில் பின்நிற்கமாட்டேன் எனவும் கூறினார்.

ஜேர்மனியின் பல பாகங்களிலும் நடைபெற்ற இக்கருத்தரங்குகளில் கலந்துகொண்ட ஜேர்மன் பத்திரிகையாளர்களுக்கும் தமிழீழத்தின் இன்றைய நிலைமையும் தமிழீழ மக்கள் எதிர்கொள்ளும் விளைவுகள் பற்றியும் தகுந்த விளக்கங்கள் கொடுக்கப்பட்டு சிறீலங்கா அரசினால் மூடி மறைக்கப்படும் மனித உரிமை மீறல்கள் வெளிக்கொண்டுவரப்பட்டன. இதற்கு எடுத்துக்காட்டாக அங்கு வந்திருந்த ஜேர்மன் பத்திரிகையாளர் இச்செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து தமது பத்திரிகைகளில் தமிழரின் நிலை பற்றிய கட்டுரைகளை எழுதியிருந்தனர்.

இன்றைய சூழலில் புலம்பெயர்ந்து வாழும் தமிழீழ மக்கள் இக்கருத்தரங்கின் மூலம் சிறீலங்காவின் மனித உரிமை மீறல்களை வெளிக்கொண்டு வருவது தமது இனத்திற்கு அவர்கள் செய்யும் தார்ப்பரிய கடமையாகும் என்பது, கருத்தரங்குளில் கலந்துகொண்ட ஜேர்மனிய மக்கள் பலரினதும் கருத்தாகும். ✳

www.tamilarangam.net






## துணிவேதுணை

வாழ்வில் இன்பதுன்பம் வருவது இயற்கை–
வாழஇடம்தேடி காடுமேடு அலைவது செயற்கை–
சொந்தபந்தம் விட்டு, வாழ்வோம் எனஎண்ணி
செல்வங்களுடன் வந்த தமிழ்த்தாய் உறவே!
உன்தாய்த்திருநாட்டின் மீட்புக்கான பணிகள்–
உன் பிள்ளைகள் உருவில் தொடர்கிறது.
கலங்கிவிடாதே! தேன் அமுது படைக்கும் காலம்....
வெகுதொலைவில் இல்லைத் தாயே!

–இணுவை விவே, பிரித்தானியா.

## அடிதொழ மறுப்பவர்

அந்நியநாட்டுச் சீதளக் காற்றில்–
சொப்பனச் சுகங்கள் காணும் தோழனே!
எப்போதோ இருந்த உன்
பிறந்தகப் பண்பும் –மானமும்– வீரமும்
இப்போதும் இவரிடம் இருப்பதைப் பாரடா.
இடர்பலவாய் தோன்றியபோதும்
அடர்கானக வாழ்வுற்றபோதும்
அந்நியன்அடிதொழ மறுப்பவர் இவரடா.

–பரதன்

## களைப்பின்றிக் காத்திருப்போம்

எம்முயிரினும் இனிய மண்ணைவிட்டு
வறுமையுற்று நாதியற்று
உயிர்கலங்கி ஓடிவந்தோம்
இனி சுமப்பதற்கு எதுவுமில்லை
பெரும்புயலைக் கடந்துவிட்டோம்
புழுக்களென விரட்டிய பகைவனை
நம்தேசம் நெருப்பாகிச் சுடும்
களைப்பின்றிக் காத்திருப்போம்!

–தனம், பிரான்ஸ்.



## வெற்றிவரை பார்த்திருப்போம்

புலிகள் பொற்பாதவொலி
பாடுமெங்கள் பகுதியிது
பகைவன் பாயமாட்டான்
படுதரையும் பஞ்சணையே
வாய்க்கொரு நேரக்கஞ்சிபோதும்
நோய்க்கு நெடியமரத் தென்றல்போதும்
வாழ்த்தி வழிபார்த்திருப்போம்
விடுதலைப் புலிவெற்றிவரை.

–அனுசூயா இளையவன், யேர்மனி.

## எம்மினத்து உறவுகளே!

சிங்கள அரசின்
காட்டு மிராண்டித்தங்களினால்
வீடுவிட்டு காடுவந்து வாடுகின்ற
எம்உறவுகளின் நிலைகள் கண்டும்
மனமிரங்கி உதவமாட்டோமா
உலகமெங்கும் வாழுகின்ற
எம்மினத்து உறவுகளே!

– ந. கண்ணன், சுவிஸ்

## நாளைய விடிவுநோக்கி..

தமிழ் மண்ணில் தமிழ்ஆட்சி நடந்தக்கால்
தலைநிமிர்த்தி தான்மகிழ்வாய் வாழ்ந்தோங்காண்
எம்மண்ணில் ஓநாய்கள் ஓலமிட்டு நுழைகையிலே
எம்மன்னன் வழியெதுவோ அவ்வழியே நாம்சென்றோம்
அடர்காடு வீடாக ஆகாயம் கூரையாக
அரைவயிறும் நிரம்பாத அளவுதான் உண்டாலும்
தானைத் தலைவனுடன் தன்மானத் தமிழ்மண்ணில்
நாம்வாழும் வாழ்வுபோதும்–நாளைய விடிவுநோக்கி!

–இர. நடா, யேர்மனி.

## தளர்வடையோம்

தமிழர் நாம் என்றும்
தன்மான உணர்வுடையோம்
பசி, தாகம் எமக்கொன்றும் புதிதல்ல
இடம்பெயர்வு எம்மை எரிக்கவில்லை
புறஉடல்தான் தளர்வடைந்துவிட்டாலும்
அகம் மட்டும் தளரமாட்டோம்
வனம்தன்னில் வாழ்ந்தாலும்
தமிழர்பண்போடு வாழ்ந்திடுவோம்.

–வன்னியின் செல்வி.

## இனஅழிப்பின் காட்சி

நாலுவேலிக்குள் வாழ்ந்தவர்
இன்று நாதியற்றுப்போய்
இருக்கிறார் நடுக்காட்டினிலே.
சிங்கள ஏகாதிபத்தியத்தின் இன
அழிப்பில் இதுவும் ஓர் காட்சி
உலகத் தமிழினமே பார்த்தது
போதும் பங்கெடு அவர் துயரில்,
காத்திடுவோம் தமிழ் மானம்.

–ஆ. கமல், சுவிஸ்.

## விடியலைத்தேடி

கொழுந்துவிட்டெரியும் சுதந்திரத் தீயில்
கொட்டும் மழையும், கோடை வெயிலும்,
கொன்று குவித்திடும் கொடூரங்களும்.....
கொள்கை மாறா மனவுறுதியை
மரநிழலில் மரபுவாழ்க்கை வழங்குகிறது.
மழலைகள் மனங்களில் மங்கிடாத
விடுதலை உணர்வு வளர்க்கப்படுகின்றது.
விழிகளின்னும் விடியலை நோக்கி விரதமிருக்கின்றது.

–இ. கெங்காதரன், சுவிஸ்

## ஊற்றிடு கஞ்சி

மண்தனை இழந்தாலும்
மனம்தனை இழந்திடாத
ஈழத்தமிழ் தாயே!
புன்னகை மீட்டியும்
புதர்களில் உறங்கியும்
தன்னிலம் காக்க–தழைத்திடும்
இழந்தளிர்கள் தாம் வாழ்ந்திட
வயிற்றில் ஊற்றிடு கஞ்சி.

–பழனி மாமா, பிரான்ஸ்.

## வாழ்க்கைப் பயணம் இது

அன்னிய வெறியர்களுக்கு
அடிபணிய மறுத்தவர்கள்–இவர்கள்
அதற்காக துன்பங்கள்–பல கடந்து
தாயகக் கனவை நெஞ்சில் சுமந்து
தளராத உறுதியுடன்
தொடரும் வாழக்கைப் பயணமிது.
ஒருநாள் விடியும் இது உறுதி.

–ச. நேசன், பிரான்ஸ்.

## ஆக்கங்கள் அனுப்பியோர் அனைவருக்கும் நன்றி:

யேர்மனி: இ. இராஜமோகன், வரன் விஜி, வ. சரவணபவன், சந்திரவதனா செல்வகுமாரன், திருமதி ரஜனி பாலா, மறவன்புலோ செ. தயா, மா. சிவகுமார், குமுதா, ந. விக்னன், ஏ. றி. இம்மானுவேல், மயிலிட்டியான் தங்கவேல், திருமதி ராஜேஸ்வரி லோகநாதன், வல்வை சசிகுமார், வ. திருநந்தி, முத்துலிங்கம் ரமணன், தவராசா சித்திரா, சண்முகராசா ரவிச்சந்திரன், அப்புக்குட்டி. சுவிஸ்: புங்கையூர் த. மதி, நயினை உதயபாரதிலிங்கம். பிரான்ஸ்: நவாலியூர் பா. செல்வநாதன், சி. ஹேமபாமினி, அன்னலிங்கம் அமுதா. பிரித்தானியா: தயாரட்ணம். இத்தாலி: இரா குகன், டென்மார்க்: திருமதி த. செல்லம்மா. ரியாட்: சி. குணா. சந்தியா ரவீந்திரராஜா, இராசா சின்னக்கிளி, லே. டெசி, கணேஷ்.

## மலரட்டும் தமிழீழம்

மரநிழலில் நிம்மதியின்றி–
நிலா ஒளியில் நித்திரையின்றி–
மழலைகளின் வாழ்வை எண்ணி–
இழந்த உறவுகளை எண்ணி–
நடந்துவந்த பாதையை எண்ணி–
இரக்கமற்ற எதிரிகளை எண்ணி–
நாளை மலரும் தமிழீழத்தை எண்ணி–
விடிவுக்காக காத்திருக்கின்றார்கள்.

–மாமுனை மனோ, நோர்வே.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இரு வாரத்துக்கொருமுறை கடிதம் மூலம் சந்திப்போம்!

அன்புச் சகோதரமே!

உன் தலைவன் உனக்கொரு உண்மையை உரைக்கச் சொல்லியுள்ளான். சிறீலங்கா அரசு ஆயுதப் போரை மட்டுமல்ல, கருத்துப் போரையும் நடத்திக் கொண்டிருக்கிறது என்பதே அந்த உண்மை. சத்தியத்தை மறைப்பதற்கு சந்திரிகா எடுத்த போராயுதம் பொய்மையை மெய்மையாக்கும் சர்வதேசப் பரப்புரையாகும். இந்த சர்வதேசப் பரப்புரையால் பயங்கரவாதத்தின் உறைவிடமான சிறீலங்கா அரசு, அரச பயங்கரவாதத்துக்கு எதிரான மக்கள் எழுச்சியைப் பயங்கரவாதமாகக் காட்டும் கடைந்தெடுத்த அரசியல் அயோக்கியத்தனத்தில் இறங்கியுள்ளது. இதனை முறியடிப்பதற்கான பொறுப்பு, புலம்பெயர் தமிழீழர்களாகிய எமது கடமையாக மாறியுள்ளது. ஏனெனில், அங்கு அரச பயங்கரவாதத்தினால் ஏற்படுத்தப்பட்ட அச்சத்தினாலேயே நாம் புகலிட வாழ்வு பெற்றோம். ஆகவே, நாம் ஒவ்வொருவருமே சிறீலங்கா அரச பயங்கரவாதத்தின் உயிர்ச்சான்றுகள். நாம் அமைதியாகி நாம் பட்டுவந்த கடன்களை கட்டவும் அங்கு அவலப்படும் எமது கிட்டிய உறவுகளைப் பராமரிக்கவும் பொருளாதாரப் போரில் இறங்கி நாளும் பொழுதும் ஓடாய் உழைத்து நிற்கிறோம் என்பதனைச் சிறீலங்கா தனக்குச் சாதகமான சூழ்நிலையாகப் பிரயோகித்து வருவதே வேதனையான உண்மை. எனவே எமது வாழ்வுக்கான பொருளாதாரத் தேவைகளை ஈடுசெய்ய, நாம் எவ்வளவுக்கு முன்னுரிமை கொடுக்கின்றோமோ அதனைவிட அதிகமாக நாம் எதனால் உறவுகளை இழந்தோம், பெற்றவரைப் பிரிந்தோம், வீட்டை, நாட்டைவிட்டு அகதியானோம் என்பதனை பேச்சிலும் செயலிலும் வெளிப்படுத்த வேண்டிய நேரம் இது. கூடி வேலை செய்பவர்க்கு கூடுமானவரை கூறுவோம். இன்னுமோர் முறையில் நாம் இதனை வெளியிடுவதற்கு பேரணிகளாக, மக்கள் அலைகளாக ஒருங்கு கூடவேண்டும். எமது கலையும் இசையும் ஆற்றல்கள் அனைத்தும் இவற்றை விளக்குவதற்குரிய சாதனங்களாக வேண்டும். இதற்கு, நாம் வாழும் நாடுகளில் உள்ள எமது தமிழீழ விடுதலைப் புலிகளின் பணிமனைகளுடன் பாச உறவுடன் நேச உறவுடன் தேசப் பற்றுடன் நெருங்கி பணியாற்றி, பங்களிப்புச் செய்வதே அவசியமாகின்றது.

நாம் பெருந்திரளாக, பேரலையாக, தமிழீழத் தேச மக்களாகச் சேர்ந்து எழும் பொழுதுதான் நமது அரசியல் பணிவு யாருக்கு என்பதை உலகு இனங்காணும். இந்த அரசியல் பணிவைப் பெறுவதற்காகத்தான் அங்கே எமது தேசமக்கள், உடன் பிறப்புகள் சிறீலங்கா ஆக்கிரமிப்பு அரசால் ஆயுதமுனையில் வதைக்கப்படுகின்றனர்.

அண்மையில், யாழ். நகர் சென்று வந்த ஒரு பெரியவர், ''அங்கே பிறந்த நாளுக்கு புகைப்படம் எடுத்தாலென்ன, சாவீட்டில் ஞாபகத்துக்கு புகைப்படம் எடுத்தாலென்ன, அத்தனை புகைப்படச் சுருள்களும் புகைப்பட நிலையத்தவரால் சிறீலங்கா இராணுவத்திடம் அனுப்பப்பட்டு, அங்கிருந்து வந்தபின்பே விநியோகிக்கப்படுகிறது. வீதியில் தெருவில் மட்டுமல்ல, வீட்டுக்குள் தேவையென்றால் படுக்கையறையில் கூட சிறீலங்கா இராணுவத்தினர் வந்து நிற்பர் எனவும் அவர்களுக்கு நடுவில்தான் மக்கள் தங்கள் நாளாந்த வாழ்க்கையைக் கொண்டு செல்ல வேண்டிய அடிமை வாழ்வு தொடர்கிறது''

எனவும் கூறியுள்ளார். அப் பெரியவரின் வார்த்தைகள் யாழ். நகரில் மக்களுக்கு 'தனியான சுதந்திரம்' என கூறுவார்களே அது கூட இல்லவே இல்லை என்பதை தெட்டத்தெளிவாக்கிறது. உடை உடுத்தவும் நிம்மதியாக உறங்கவும் கூட சிங்களப் படை தடையாக உள்ளது. இப்படியிருக்க, யாழ்நகர் மீட்கப்பட்டு மக்கள் விடுவிக்கப்பட்டுள்ளார்கள் என்று அம்மையார் உலகுக்கு உரக்கக் கூறி மகிழ்கிறார். இந்தப் பொய்மையை எம்மைத்தவிர வேறு யாரால் உலகுக்கு வெளிப்படுத்த முடியும்?

அன்புச் சகோதரமே! இந்த பெப்ரவரி மாதம் 1ஆம் நாள் தம்பலகாமத்தில் தமிழீழர்கள் ஒன்பது பேர், 'தமிழீழர்கள்' என்ற ஒரே காரணத்திற்காகச் சித்திரவதை செய்யப்பட்டு பகிரங்கமாக இனக்கொலை செய்யப்பட்டனரே, இது பயங்கரவாதமில்லையா? மட்டக்களப்பு தொழில்நுட்ப கல்லூரி மாணவர்கள் உட்பட தினம் தினம் பல தமிழீழர்கள் சாதாரண உடையணிந்து வரும் சிங்களப் படைகளால் கடத்திச் செல்லப்பட்டு காணாமல் போகின்றனரே, அது பயங்கரவாதமில்லையா?

மட்டக்களப்பு கிராமப் பகுதியில் காட்டுக்குள் விறகு எடுத்துவரச் சென்ற பத்துப் பேர் காணாமல் போயுள்ளனர். இவர்கள் சிங்கள ஊர்காவல் படையாலேயே கடத்தப்பட்டுள்ளனர். போரதீவுக்கு மாட்டுவண்டியில் பயணம் செய்து கொண்டிருந்த நாலு பிள்ளைகளின் தந்தையான பொன்னம்பலம் தவராஜா மற்றும் மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவரும் காணாமல் போயுள்ளனர். இவர்கள் தமிழீழர்களாகப் பிறந்ததைத் தவிர வேறு என்ன தவறு செய்தார்கள். அங்கு மட்டுமா, இலங்கைத் தீவின் ஒவ்வொரு பகுதியிலும் தமிழீழர்கள் சந்தேகத்துக்குரிய மனிதர்களாக வதைக்கப்படுகிறார்களே இது பயங்கரவாதம் இல்லையா. ஏதோ ஒரு சாட்டுக்கூறி கொழும்பில் விடுதிகளில் தங்கியிருந்த 600 தமிழீழர்கள் தெருவுக்குத் துரத்தப்பட்டனரே இது பயங்கரவாதம் இல்லையா? இப்படி தினம் தினம் பயங்கரவாதத்தையே தமிழீழர்களின் வாழ்வாக்கிக் கொண்டிருக்கும் சிறீலங்கா குண்டு வீச்சு, எறிகணை வீச்சு என்பன தொடங்கி துப்பாக்கி சூடு வரை எத்தனையோ கொலைகள் தமிழீழர் பூமியில் நடாத்திக் கொண்டு அதனைப் பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டபூர்வ செயற்பாடு எனப் பூச்சாண்டி காட்டும் இம் மிருகத்தனத்தை, உலகெங்கும் வாழும் எம் உடன்பிறப்புக்களே எத்தனை நாள்தான் எம்மால் அமைதியாகப் பார்த்திருக்க முடியும். எமது மனச்சாட்சியுடன் சற்றுப் பேசிக் கொள்வோம். உண்மை வெளிக்கும். உணர்வு பிறக்கும்.

தமிழீழத்தில் நமது பாலகர்கள் பட்டினியால் தவிக்கும் பரிதாபத்தை, தொற்று நோய்களுக்கே சிறீலங்கா அரசால் மருந்துகள் மறுக்கப்பட்ட நிலையில் எமது மக்கள் நோயால் மரணிக்கும் நிலையை உலகுக்கு எடுத்துச் சொல்ல வேண்டாமா? இதில் நாம் அமைதியாக இருப்பதால்தான் சிறீலங்கா அரசு திட்டமிட்ட முறையில் பொய்மைகளை உண்மைகளாக்கி உலகை நம்பவைக்கின்றது. ஆதலால் நாம் விவேகத்துடனும் வேகத்துடனும் செயற்பட்டு, சிறீலங்காவின் கருத்துப் போருக்கு செம்மையான அடிகொடுக்க முன்வர வேண்டும். இதற்கு நாம், உண்மை என்ற ஆயுதம் ஏந்தியே பொய்மைக்கு எதிராகப் போராட வேண்டும். நம் தேசியத் தலைவனின் அழைப்பும் இதுவாகவே உள்ளது.

இந்தக் கருத்துப் போராட்டம் மூண்டெழ எமது மக்கள் எங்கு வாழ்ந்தாலும் எமது மக்கள் மத்தியில் தேசிய விழிப்புணர்வை - விடுதலை உணர்வைப் பேணி வளர்ப்பது எமது மக்கள் தொடர்பு சாதனங்களினதும் கலை, இலக்கிய கர்த்தாக்களினதும் எழுத்தாளரதும் ஒரு உன்னதமான விடுதலைப் பணி என்பதையும் எமது தலைவர் எடுத்து விளக்கியுள்ளார். எனவே சத்திய வேட்கையுடன் எழுந்து, உண்மையை உலகுக்கு உணர்த்தி, சிங்கள ஆக்கிரமிப்பாளனின் கருத்துப் போரையும் முறியடிப்போம்! வாருங்கள்!!

**ஆசிரியர்**

# இனத்தின் உணர்வையும் மானத்தையும் ஆயுதபலத்தின் மூலம் அடிமைப்படுத்த முடியாது

"இன்று நடைபெறுகின்ற யுத்தம், இந்த அரசாங்கம் நடத்திக் கொண்டிருக்கின்ற போர் விடுதலைப் புலிகளுக்கு எதிரானது என்று எடுத்துக் கொள்ளுவது தவறானது" என சிறீலங்காப் பாராளுமன்ற உறுப்பினர் அலிசாகிர் மௌலானாவின் கூற்றுக்கள் அரசியல் குறிக்கோளில் தெரிவித்த கூற்றுக்கள் என எவரும் தட்டிக்கழித்து விடக்கூடியதல்ல. ஏனெனில் இதுவே யதார்த்தத்தின் பாற்பட்டவையாகும். இன்னொன்றையும் அலிசாகிர் மௌலானா குறிப்பிடத்தவறவில்லை.

"இந்தப் போரும் யுத்தமும் இந்நாட்டின் சிறுபான்மையினரான தமிழர்கள் மன உணர்வுக்கு எதிராக, மான உணர்வுக்கு எதிராக, அவர்களது அடிப்படை அபிலாசைகளுக்கு எதிராக, ஒடுக்கு முறைக்கு உட்படுத்தப்பட்ட அவர்களது உணர்ச்சிகளுக்கு எதிராக, சம அந்தஸ்த்துக்கான உரிமைப் போராட்டத்திற்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்றது" எனவும் கூறியுள்ளார். அத்துடன் தனது போர்களும், யுத்தங்களும் என்ற கூற்றுக்கள் மூலம் தமிழர்களின் போராட்டத்திலுள்ள நியாய பூர்வத்தினையும் அவர் வெளிக்காட்டியுள்ளார். அத்தோடு அலிசாகிர் மௌலானா மேலே குறிப்பட்ட தமிழர்களின் உணர்வுகள், உரிமைகள் என்பனவற்றுக்காகப் போராடுகின்றவர்கள், அர்ப்பணிப்புக்களைப் புரிகின்றவர்கள் விடுதலைப் புலிகள் இயக்கம் மட்டுமே என்பதையும் அவர் குறிப்பிடத்தவறவில்லை. அவர் மேற்கூறிய உணர்வுகளின், உரிமைகளின் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள் மட்டும்தான் என்பதை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளத்தயங்கக்கூடாது எனத் தெரிவித்துள்ளதோடு, இந்த நாட்டில் சுயகௌரவத்தை மதிக்கின்ற சிறுபான்மைத் தமிழர்களின் சின்னம் விடுதலைப் புலிகள்தான் என்பதை முழு உலகமும் ஏற்றுக்

"இந்தப் போரும் யுத்தமும் இந்நாட்டின் சிறுபான்மையினரான தமிழர்கள் மன உணர்வுக்கு எதிராக, மான உணர்வுக்கு எதிராக, அவர்களது அடிப்படை அபிலாசைகளுக்கு எதிராக, ஒடுக்கு முறைக்கு உட்படுத்தப்பட்ட அவர்களது உணர்ச்சிகளுக்கு எதிராக, சம அந்தஸ்த்துக்கான உரிமைப் போராட்டத்திற்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்றது"

கொண்டுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார். ஆனால், சந்திரிகா குமாரதுங்கா அரசாங்கமோ போருக்கான காரணத்தையும் இது தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டம் என்பதையும் ஏற்றுக்கொள்ளத்தயாராக இல்லை. அவர் குறிப்பிட்டுள்ளது போன்று, ஆயுதம் தாங்கிய சிறுபான்மைத் திராவிட இளைஞர்களின் கொட்டத்தை அடக்க, இராணுவப் பலம் கொண்ட பெரும்பான்மை ஆரிய இளைஞர் படை மேற்கொள்ளும் ஒரு கோஷ்டி மோதலாகவும் இது சிங்கள கௌரவத்தை மேம்படுத்தும் ஒரு சில்லறை நடவடிக்கையாகவுமே கருதுகின்றது. ஆனால், இதில் சந்திரிகா அரசாங்கம் வெற்றி காணப்போவதில்லை என்பது உறுதியானது. ஏனெனில், ஓர் இனத்தின் உணர்வையும் மானத்தையும் அடிப்படையாகக் கொண்ட இப்போராட்டத்தினை ஆயுத ரீதியிலான பலத்தின் மூலம் அடிமைப்படுத்திவிட முடியாது. இது புற்றுநோய் ஒன்றை பிரசவிப்பதற்கான வழிமுறையாகவே நிச்சயம் இருக்கும். அத்தோடு விடுதலைப் புலிகள் இயக்கத்தினை ஒரு பயங்கரவாத இயக்கம் என அழைப்பதினாலோ அன்றி உலகிற்குக் காட்ட முயலுவதாலோ விடுதலைப் புலிகள் பயங்கரவாத இயக்கம் என்ற நிலையை அடைந்துவிடப் போவதில்லை. அத்தோடு போரும் முடிவுக்கு வந்துவிடப்போவதில்லை. ஏனெனில், தமிழ் மக்களின் உணர்வுகள் தார்மீக அடிப்படையிலானவை. அவர்களின் உரிமைக் கோரிக்கைகள் நியாயத்தின் பாற்பட்டவை. ஆகையினால் இவற்றிற்கான போராட்டத்தில் ஆத்ம பலம் என்றும் உறுதியாகவே இருக்கும். இதனை ஆயுத ரீதியில் வெற்றி கொள்வது என்பது நடைமுறையில் முடியாததொன்று. ஆகையினால் விடுதலைப் புலிகளை எந்த ஆரியப் படையினாலும் தோல்விகாணச் செய்து விடமுடியாது. இந்தவேளை தமிழ் மக்களின் உணர்வினதும் மானத்தினதும் சின்னமாக விளங்கும் விடுதலைப் புலிகளுக்கு மாறாக, தமிழ் குழுக்களை அரசாங்கம் காட்ட முனைவது அபத்தமானது. ஏனெனில், இவர்கள் தமிழ் மக்களின் உணர்வுகள், உரிமைகள் என்பன தொடர்பான விடயங்களில் அந்நியப்பட்டே உள்ளனர். இல்லாதுவிடின் மக்கள் மத்தியில் இருந்து உள்ளூர் ஆட்சித் தேர்தலுக்குப் பலத்த கண்டனம் எழுந்த வேளையிலும் தமிழ் குழுக்கள் போட்டியிட முன்வந்திருக்க மாட்டார்கள். இந்த ரீதியில் சந்திரிகா அரசாங்கம் ஏற்றுக் கொண்டால் என்ன, ஏற்றுக்கொள்ளாதுவிட்டால் என்ன இன்று அது நடத்தும் போராட்டமோ சிறுபான்மைத் தமிழ் இனத்துக்கு எதிரானது என்பது யதார்த்தமாகும்.

அத்தோடு, இதில் அரசாங்கத்தினால் வெற்றி பெறமுடியாது என்பதும் நிதர்சனமானது. இந்த நிலையில் அரசாங்கத்தின் முயற்சியானது விலை கொடுத்து வாங்கிய புற்றுநோயாகவே நிச்சயம் இருக்கும். ✳

www.tamilarangam.net

# தமிழீழத்தவரின் தேசியத்தையும், தன்னாட்சி உரிமையினையும் வலியுறுத்தும் புலம்பெயர் வாழ் தமிழர்களின் நிகழ்வுகளில் சில......

ஒஸ்லோ தீப்பந்த ஊர்வலத்தில்......




ஜேர்மனியில் தளபதி கிட்டு நினைவு நாள் நிகழ்வில்....



இத்தாலி கலைவிழாவில்.......




பிரிஸ்பனில் (அவுஸ்திரேலியா) தளபதி கிட்டு நினைவு நாள் நிகழ்வில்...







ஜேர்மனி ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில்.....



இத்தாலியில் தளபதி கிட்டு நினைவு நாள் நிகழ்வில்.....



சுவிஸ் அற்றார் அழிபசி தீர்த்தல் நிகழ்வில்.....



சுவீடனில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வில்.....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்